# உதயன்

www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 046 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 27 வெள்ளிக்கிழமை (11/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00





# 'உதயன்' விநியோகப் பணியாளரின் மீது கோரத் தாக்குதல்; பிரதிகளுக்கு தீவைப்பு

## மோட்டார் சைக்கிளும் எரிந்து நாசம்; நேற்று அதிகாலை நடந்த பயங்கரம்



யாழ்ப்பாணம், ஜன.11

பத்திரிகை விநியோகப் பணியில் ஈடுபட்டிருந்த 'உதயன்' பணியாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் நேற்று அதிகாலை கடுமையாகத் தாக்கப்பட்டார். அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும், அவர் கொண்டு சென்ற ஆயிரக்கணக்கான 'உதயன்' பிரதிகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் காயமடைந்த 'உதயன்' விநியோகப் பகுதி பணியாளரான நா.பிரதீபன் (வயது -30) கையிலும் உடலிலும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வழமைபோல் 'உதயன்' அலுவலகத்திலிருந்து வடமராட்சிப் பகுதிக்கான பத்திரிகை விநியோகப் பணிகளுக்காக இரு மோட்டார் சைக்கிள்களில் 'உதயன்' பணியாளர்கள் இருவர் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது வல்லைச் சந்திப் பகுதியிலுள்ள இராணுவத்தினர், அவர்கள் மீது வெளிச்சத்தைப் பாய்ச்சி அடையாளம் கண்டுகொண்ட பின் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

அதன் பின்னர் விநியோகப் பகுதி பணியாளரான பிரதீபன், மாலு சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள 'உதயன்' முகவர் நிலையம் ஒன்றில் பத்திரிகைப் பிரதிகளை விநியோகித்து விட்டு, ஏனைய முகவர் நிலையங்களுக்கு பிரதிகளை வழங்குவதற்காக மீண்டும் யாழ். நகர் நோக்கிய திசையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்துள்ளார்.

அப்போது, யாழ். நகரிலிருந்து நெல்லியடிப் பக்கமாக மோட்டார் சைக்கிளில் 'ஹெல்மட்' அணிந்தபடி வந்தனர் இருவர். திடீரென அவர்கள் தமது மோட்டார் சைக்கிளால் உதயன் பணியாளரின் மோட்டார் சைக்கிளுடன் மோதினர். அதனால் நிலைகுலைந்த பணியாளர் நிலைதடுமாறி கீழே விழுந்தார். இந்தச் சமயத்தில்

பார்க்க பக்கம் 4

## கைதிகள் 10 பேர் தப்பியோட்டம்

கொழும்பு, ஜன.11

பெரும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சிறைக் கைதிகள் நால்வர் உட்பட 10 கைதிகள் நேற்று அதிகாலை ஆறு மணியளவில் அவிசாவளை சிறையிலிருந்து அதிரடியாகத் தப்பிச் சென்றுள்ளனர். அதனால் சிறைச்சாலை உள்ளிட்ட அவிசாவளை நகரமெங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை காவல் பணிகளில் ஈடுபட்டிருந்த மூன்று சிறைச்சாலைக் காவலர்களையும் தாக்கி, கட்டி வைத்துவிட்டு சிறைச்சாலை சுவரை உடைத்துக்கொண்டு மேற்படி 10 கைதிகளும் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்களைக் கைதுசெய்வதற்காக அவிசாவளைப் பொலிஸார் பல கோணங்களிலும் விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன், அதிரடியான தேடுதல் வேட்டையிலும் இறங்கியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவந்ததாவது:-

நேற்று அதிகாலை ஆறு மணியளவில் சிறைச் சாலைக் கைதிகள் முகம் கழுவுவதற்காக அவர்களது சிறைக்கூடங்களைத் திறந்து விடச்சென்ற சிறைக்காவலாளியை மடக்கிப்பிடித்து அவரது கழுத்தை நெரித்து தாக்கினர். பின்னர் அவரிடமிருந்த சாவிக் கொத்தைப் பறித்தெடுத்து சிறைக் கூடத்தைத் திறந்து வெளியே ஓடித் தப்பித்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

# எங்கள் பிள்ளைகளை மீட்பதற்கு உதவுங்கள்


## புதுக்குடியிருப்புக்குச் சென்ற ஆயர்களிடம் பெற்றோர்கள் மன்றாட்டம்

முல்லைத்தீவு, ஜனவரி 11

வன்னியில் இறுதிப்போரின் போது காணாமல்போன எமது பிள்ளைகள் எங்கு இருக்கிறார்கள் என்பதை கண்டுபிடித்து எமக்குத் தெரியப்படுத்துங்கள் என நேற்று வன்னிக்கு பயணம் மேற்கொண்ட இலங்கை கத்தோலிக்க ஆயர் குழுவிடம் கண்ணீர் மல்கியவாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்தனர் முல்லைத்தீவுப் பகுதி பெற்றோர்.

ஆயர்களை சூழ்ந்துகொண்ட அவர்கள் கதறி அழுதவாறு கைகளை ஏந்தி விடுத்த இந்தக் கோரிக்கை அங்கு சென்றிருந்த ஆயர்களின் மனங்களையும் நெகிழ வைத்தது.

பார்க்க பக்கம் 4



## சிப்பாயின் சடலம் மீட்பு

வவுனியா, ஜன 11

வவுனியா, நாவற்குளம் கிராமத்திலுள்ள பற்றைக் காட்டிலிருந்து இராணுவச் சிப்பாயின் சடலமொன்று உருக்குலைந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

ஹிங்குராங்கொட பகுதியைச் சேர்ந்த ஏ.எம்.பிரியந்த குமார (வயது-31) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இந்தச் சடலம் மீட்கப்பட்டதாகவும் இவர் பூனாவ பகுதியிலுள்ள இராணுவ முகாமொன்றில் கடமையில் இருந்தாரெனவும் மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி காணாமல் போயிருந்தாரெனவும் இது தொடர்பில் இவரது தாயார் இந்த மாதம் 6ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (த)

## நீதிமன்றப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜன.11

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை நடவடிக்கையை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கும் பொருட்டு கொழும்பு புதுக்கடை உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்று சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் நாடுமுழுவ

பார்க்க பக்கம் 4

## 23 வருடங்களாக மீனவர் குடும்பங்கள் மீளக்குடியமர முடியாமல் பெரும் அலைச்சல்

### பிரான்ஸ் தூதுவரிடம் அவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.11

23 வருடங்களாக இடம்பெயர்ந்து அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மீனவக் குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொள்ள அழுத்தம் வழங்க வேண்டும்.

இவ்வாறு மீனவச் சங்கங்களின் பிரதிநிதிகள், பிரான்ஸ் தூதுவரிடம் தெரிவித்தனர்.

பார்க்க பக்கம் 4

## பிரதம நீதியரசர் விவகாரம்; அமெரிக்கா கூடிய கவனம்

வோஷிங்டன், ஜன.11

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள குற்றப்பிரேரணை விவகாரம் தற்போது முழு சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ள நிலையில், ஷிராணிக்கு எதிரான குற்றப்பிரேரணை மற்றும் அது தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கா கூடிய கவனம் செலுத்தியுள்ளது.

நீதித்துறை மீதான செயன்முறை மற்றும் அரசின் அழுத்தம் பற்றி தீவிரமான கேள்வி

பார்க்க பக்கம் 4

## எதிரணியின் எதிர்ப்பை உதறிவிட்டு விவாதிக்கப்பட்டது குற்றப் பிரேரணை

### நாடாளுமன்றில் நேற்று அமளிதுமளி

கொழும்பு, ஜன.11

நாடாளுமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் இடையிலான முதலாண்மைச் சர்ச்சைக்கு காரணமாக அமைந்த பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை தொடர்பாக சபையில் ஏற்பட்ட குழப்ப நிலையால் சபை அமர்வுகள் பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

எதிர்க்கட்சிகளின் கடுமையான

பார்க்க பக்கம் 4


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

இன்னும் 7 நாட்களில்

Gold Sponsor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஏட்டிக்குப் போட்டி ஆர்ப்பாட்டங்களால் கொழும்பில் நேற்றுப் பெரும் களேபரம்!

கொழும்பு, ஜன.11

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணைக்கு எதிராகவும், ஆதரவாகவும் தலைநகரில் நேற்று ஆயிரக்கணக்கானோர் அணிதிரண்டு, மூவாயிரம் படையினரின் பலத்த பாதுகாப்பையும் மீறி களத்தில் குதித்து மாபெரும் போராட்டம் நடத்தியதால் கொழும்பு மாநாகரமே ஸ்தம்பித்தது.

இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியைத் தடுத்து நிறுத்துவதற்காக விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், பொலிஸார், கலகம் அடக்கும் படையினர், கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுப் படையினர், தண்ணீர் பீய்ச்சியடிக்கும் படையினர் என மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் தலைநகரமெங்கும் நேற்றுக் குவிக்கப்பட்டிருந்தனர்.

கொட்டும் அடைமழைக்கு மத்தியில் குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவான, எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கிடையே ஏற்பட்ட கடும் மோதலாலும், பாதுகாப்புத் தரப்பினரின் தண்ணீர் வீச்சுப் பிரயோகத்தாலும், பெரும் வாகன நெரிசலாலும் கொழும்பு நகரமே நேற்று பெரும் அல்லோல கல்லோலப்பட்டதுடன், ஆர்ப்பாட்ட பூமியாகவும் மாறியது.



அத்துடன், ஆர்ப்பாட்டக்காரர்களின் கோஷங்களும், வாகனங்களின் இரைச்சல்களும் தலைநகரமெங்கும் ஒலித்தன.

குற்றப் பிரேரணைக்கு ஆதரவாகவும் எதிராகவும் நாடாளுமன்றத்தில் நேற்று சொற்போர் நடக்க, மறுமுனையில் நாடாளுமன்றத்திற்கு வெளியே புதுக்கடை வளாகம் உள்ளிட்ட கொழும்பு நகரம் முழுவதும் மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணி நடந்தது.

நேற்று இடம்பெற்ற இந்த இரு ஆர்ப்பாட்டப் பேரணிகளிலும், குற்றவியல் பிரேரணைக்கு ஆதரவாக புறக்கோட்டை சுயதொழில் புரிவோர் பிரதிநிதிகள் சங்கத்தின் தலைவர் மஹிந்த கஹாதகம தலைமையில் அச்சங்கத்தினர் மற்றும் ஓட்டோ சாரதிகள் சங்கத்தினரும், குற்றவியல் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம், எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள் அமைப்புகள் ஆகியன கலந்துகொண்டன.

நேற்றுப் பெய்த கடும் மழைக்கு மத்தியில், குடைகளை ஏந்தியபடி கொழும்பு புதுக்கடை உயர்நீதிமன்ற வளாகத்தில் மு.ப. 10 மணியளவில் இரு குழுக்களும் ஆர்ப்பாட்டத்தில் குதித்தன.

### நாடுமுழுவதிலுமுள்ள சட்டத்தரணிகள் புதுக்கடையில் சங்கமம்

குற்றப் பிரேரணையை முன்னெடுக்கும் ஆளுந்தரப்புக்கு தமது கடும் எதிர்ப்பை வெளியிடுவதற்காக நாடு முழுவதிலுமுள்ள சட்டத்தரணிகள் நேற்று புதுக்கடையில் சங்கமமாகினர். இதன்படி இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நாடுமுழுவதுமுள்ள 78 கிளைகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான சட்டத்தரணிகள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர். இவர்களது ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமானது.

### எதிர்க்கட்சிகளும் களத்தில்

இதேவேளை, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை எதிர்த்து எதிர்க்கட்சிகள், தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புகள், புத்திஜீவிகளின் அமைப்புகள் ஆகியனவும் நேற்று புதுக்கடை வளாகத்தில் அணிதிரண்டன.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜயலத் ஜயவர்த்தன, ரவி கருணாநாயக்க, தயாசிறி ஜயசேகர, பாலித்த ரங்கே பண்டார, சுஜீவ சேனசிங்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜே.வி.பியின் அநுர குமார திஸாநாயக்க ,லால் காந்த ஆகியோரும், ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி, நவ சம சமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, மௌபிம மக்கள் கட்சியின் பிரதிநிதி, ஐக்கிய சோசலிசக் கட்சியின் பிரதிநிதி புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர, ருஹுணு மக்கள் கட்சித் தலைவர் அருண சொய்ஸா, ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் ஹப்பு ஆராச்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

குற்றவியல் பிரேரணைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணிகள், எதிர்க்கட்சியினருடன் மக்களும் கலந்து கொண்டனர்.

## குற்றப்பிரேரணை குறித்து அமெ. ஆழ்ந்த கவலை

இலங்கையின் பிரதம நீதியரசர் ஹிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை மற்றும் அது தொடர்பிலான நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

அத்துடன், நீதித்துறை மீதான நடவடிக்கைகள் மற்றும் அரசின் அழுத்தம் பற்றி தீவிரமான கேள்விகளையும் எழுப்பியுள்ளது என்று இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

அதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை குறித்து கவலையடைவதாக இதற்கு முன்னரும் தாம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ள ரிஹானா நபீக் குறித்து தகவல் வெளியிட அமெரிக்கா மறுத்துள்ளது.

ஏனெனில், ரிஸானா நபீக் குறித்து தாம் அறிந்திருக்கவில்லை எனவும் அதுபற்றி ஆராய்ந்து கருத்து வெளியிடப்படும் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## மருத்துவர் சிவசங்கருக்கு 23 விளக்கமறியல்

கைது செய்யப்பட்ட மருத்துவர் சிவசங்கர் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 29ஆம் திகதி மருத்துவர் சிவசங்கர் கொக்காவில் இராணுவமுகாமுக்குச் சென்றவேளை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டார். பின்னர் அவர் மாங்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருந்த பொலிஸார் இவரை மீண்டும் நேற்று முல்லைத்தீவு நீதிவானிடம் முற்படுத்திய போது அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துமீறி இராணுவ முகாமுக்குள் நுழைந்ததாகவும், ஒலிப்பதிவுக் கருவிகளை அவர் தன்வசம் வைத்திருந்ததாகவும் படைத்தரப்பினர் குற்றஞ் சுமத்தியே இவரை கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16-4)

## புத்திரசிகாமணிக்கு கொலை மிரட்டல்

கொழும்பு, ஜன.11

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு முன்னாள் பிரதியமைச்சரும் மலையக தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வி.புத்திரசிகாமணிக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டில் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளதாவது:-

கடந்த செவ்வாய்க்கிழமை பகல் கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி வந்துகொண்டிருந்தபொழுது தனக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்ததாகவும் அந்தத் தொலைபேசியில் மறுமுனையில் பேசியவர் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் என தான் அடையாளம் கண்டுகொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, தான் அண்மையில் ஊடகமொன்றில் அவருக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்ததாகவும் தகாத வார்த்தைகளால் தன்னைத் திட்டியதாகவும் தன்னை நீண்ட நாள்களுக்கு வாழ விடமாட்டேன் என்று பழனி திகாம்பரம் தெரிவித்ததாகவும் அந்த முறைப்பாட்டில் வி.புத்திரசிகாமணி தெரிவித்திருப்பதாக நுவரெலியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் நுவரெலியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)



யாழ்.பிரதான வீதியில் பயணித்த பஸ் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, யாழ். பஸ்தியன் சந்திக்கு அருகில் உள்ள வீட்டு மதிலை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தது. இதனால் பஸ் மோசமாகச் சேதமாகியது. எனினும் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

ரிஸானா நபீக் சவுதி அரேபியாவில் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டம் வெளியிட்டுள்ளது.

ரிஸானாவை விடுதலை செய்யுமாறு பல தரப்பில் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் சவுதி அரசு மரண தண்டனை நிறைவேற்றியதாக ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளது.

ரிஸானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியைக் கேட்டு தான் உண்மையில் கலக்கமுற்றதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார பொறுப்பு தலைமை அதிகாரி கெத்தரின் ஏஸ்டன் தெரிவித்துள்ளார்.

ரிஸானாவை மரண தண்டனையில் இருந்து விடுவிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் பல தடவைகள் சவூதி அரசிடம் கோரிக்கை முன்வைத்ததாக கெத்தரின் ஏஸ்டன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொலை குற்றம் இடம்பெற்ற வேளையில் ரிசானா ஒரு சிறிய பெண் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரிஸானாவின் மரணத்திற்காக அவரது குடும்பத்தினருக்கு, குழந்தையை இழந்த குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவிப்பதாகவும் ரிஸானாவின் மரணத்தால் குழந்தையின் பெற்றோரின் இழப்பு குறைக்கப்படும் என தான் நம்பவில்லை எனவும் கெத்தரின் ஏஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.

## மருத்துவர் சிவன்சுதனுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவர் சிவன் சுதனுக்கு தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ். போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் மருத்துவர் எஸ்.சிவன் சுதனுக்கு நேற்று முற்பகல் அநாமதேயத் தொலைபேசி இலக்கத்திலிருந்து அழைப்பு வந்துள்ளது.

தன்னைப் படைப் புலனாய்வாளரென அறிமுகப்படுத்திய அந்த நபர் பயங்கரவாதப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரின் தொலைபேசியில் மருத்துவரின் தொலைபேசி இலக்கம் பதிவாகியுள்ளதாகவும், இதனால் மருத்துவர் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகளிலிருந்து மருத்துவர் விடுவிக்கப்படவேண்டுமாயின் சில அதிகாரத் தரப்பினரை உரிய கவனிப்புக்குட்படுத்த வேண்டுமெனத் தொலைபேசியில் பேசியவர் கூறியுள்ளார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த மருத்துவர், தான் தவறான வழிகளில் செல்ல விரும்பவில்லை. உரிய விசாரணைகளைச் சந்திக்கத் தயாராக உள்ளதாகக் கூறி அழைப்பைத் துண்டித்துள்ளார்.

பின்னர் இது தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (த-16-4)

## றிசானாவின் மரணத்துக்கு ஜனாதிபதியே முழுப்பொறுப்பு

கொழும்பு,ஜன 11

சவூதி அரேபியாவில் நேற்று முன்தினம் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட பணிப்பெண் ரிஸானா நபீக்கைக் காப்பாற்ற ஜனாதிபதியோ அரசோ உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றஞ்சாட்டுகள் கிளம்பியுள்ளன.

இது தொடர்பாக ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ரிஸானா நபீக்கின் உயிரைக் காப்பாற்றத் தவறியதற்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே ஏற்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

அப்பாவிப் பணிப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றும் முயற்சிகளை, ஜனாதிபதியும், அவரது அரசும் புறக்கணித்து வந்ததாகவும் அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் நிர்வாகப் பணிப்பாளர் பசில் பெர்ணாண்டோ வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில்,

இந்த வழக்கிற்கு மேல் முறையீடு செய்வதற்கு நிதிப் வழங்க அரசு முன்வரவில்லை. கொலை செய்யப் பட்டதாகக் கூறப்படும் குழந்தையின் பெற்றோரை நேரடியாகச் சந்தித்து, அவர்களிடம் றிசானா நபீக் சார்பில் மன்னிப்புப் பெற அரச தவறிவிட்டது.

அந்தக் குடும்பத்துடன் பேசி சமரசம் செய்திருந்தால் மட்டுமே ரிஸானாவை காப்பாற்றியிருக்க முடியும் என்ற நிலை இருந்தது.முஸ்லிம் அமைச்சர்கள் சவூதி அரேபியாவுக்கு வந்து தங்கி விட்டுப் போனார்களே தவிர, இறந்த குழந்தையின் பெற்றோர்களுடன் அவர்கள் நேரடியாகப் பேசவில்லை.

அனைத்துலக மட்டத்தில் இந்த விடயத்தில் உருவாகியிருந்த சாதகமான நிலையையும் இலங்கை அரசு பயன்படுத்தத் தவறிவிட்டது என்றும் அந்த அறிக்கையில் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் மழை வெள்ளம் தேங்காதவாறு நடவடிக்கை

## கடல்நீரேரி தடைக் கதவுகள் திறக்கப்பட்டன

*அச்சுவேலி, ஜன.11*

***குடாநாட்டில் மழை வெள்ளம் தேங்காதவாறு தொண்டமானாறு, அராலி, அரியாலைப் பகுதிகளில் உள்ள கடல் நீரேரி தடைக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாக மழை வெள்ளம் கடலுக்குள் செலுத்தப்படுகின்றது என்று நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.***

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தொண்டமானாறு குடாக்கடல் நீரே தடையில் உள்ள கதவுகளும், அராலி நீரேரி தடைக் கதவுகளும், அரியாலை கடல் நீரேரி தடைக் கதவுகளும் வெள்ள நீர் குடியிருப்புப் பகுதியில் மற்றும் பயிர்ச் செய்கை நிலங்களில் தேங்கி நிற்காத அளவுக்கு திறந்துவிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தடைப் பகுதியிலும் சராசரி ஐந்து கதவுகளுக்குக் குறையாமல் திறந்துவிடப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை பிற்பகலிலும், புதன்கிழமை அதிகாலையிலும் கதவுகள் குறிப்பிட்ட எண்ணிக்கை அளவு திறக்கப்பட்டன. இதனால் மழை வெள்ளம் கடலை நோக்கிச் செல்கிறது.

மழையின் அளவு அதிகரிக்குமிடத்துக் கூடுதலான எண்ணிக்கை அளவு கதவுகள் திறக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளனர்.

கடல் நீரேரி கதவுகள் அமைக்கப்பட்டதன் நோக்கம் குடாநாட்டின் தரைகளில் காணப்படும் உவர் தன்மையையும் நீர்நிலையில் காணப்படும் உப்புத் தன்மையையும் குறைத்துப் படிப்படியாக பயிர்ச் செய்கை மற்றும் மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்றவகையிலும் மாற்றுவதே.

அந்த நோக்கத்தில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி அடைந்துள்ளோம். எதிர்காலத்தில் முழுமையான மாற்றத்தை நோக்கியே இந்த வேலைத் திட்டம் தொடர்கிறது- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-11)

## 'வறுமையற்றதோர் இலங்கை' எனும் பொருளில் கருத்தரங்கு

தென்மராட்சி,ஜன.11

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின், வறுமையற்றதோர் இலங்கை' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிகழ்வுகளும் கருத்தரங்கும் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வரவு -செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது 'வறுமையற்றதோர் இலங்கை' எனும் நிகழ்ச்சித் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்தில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் நடத்துமாறு யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் பிரதேசத்தைச் சேர்ந்த துறைசார் நிறுவனங்களினால் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித் தொழில், வங்கி போன்றவற்றில் பணியாற்றுவோரின் பங்குபற்றுதலுடன் பிரதேசத்தில் உள்ள அனைத்துத் திணைக்கள அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் கூறியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப் படுத்தப்படும் வேலைத் திட்டங்களை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கான அறிமுக நிகழ்வாக இந்த விழா நடத்தப்படவுள்ளது எனவும் கூறப்பட்டது. (ம-9)

## சேறும் சகதியுமாக முற்றவெளி தனியார் பஸ் நிலையம்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.முற்றவெளியிலுள்ள தனியார் பஸ் தரிப்பிடம் மழையால் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது. புல்லுக்குளத்துக்கு எதிராகவுள்ள வெளி மாவட்டங்களுக்கான பஸ்தரிப்பிட சுற்றாடலில் வெள்ளம் தேங்கியதால் இந்தப்பகுதி சகதியாகக் காணப்படுகிறது.

இதனால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

புல்லுக்குளத்தில் இருந்து அகற்றப்பட்ட களிமண்ணைக் கொண்டு இந்த பஸ்தரிப்பிடப் பகுதி சீர் செய்யப்பட்டது. இதனாலேயே இந்தப் பிரதேசம் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது என்று கூறப்பட்டது. தபாலக சுற்று வட்டத்துக்கு அருகில் உள்ள தனியார் பஸ்தரிப்பிடத்திலும் வெள்ளம் தேங்கியுள்ளதால் கொழும்பு சென்றுவரும் பயணிகளும் பெரும் சிரமம் அடைகின்றனர். (ம-17)



*உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்ட பத்து தமிழ் மக்களின் 38 ஆவது ஆண்டு நிறைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. முற்றவெளியில் உள்ள நினைவுத் தூபிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நினைவுத் தூபியைச் சூழ்ந்த பகுதியில் வெள்ளம் அதிகளவில் தேங்கி நிற்கும் நிலையில் வெள்ளத்துக்கு மத்தியில் நின்று அஞ்சலி செலுத்தினர். (ம-17-13)*

## நாடளாவிய ரீதியில் இன்று மருந்தாளர் பணிப்புறக்கணிப்பு

### 12 அம்சக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்

*யாழ்ப்பாணம், ஜன.11*

*வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருந்தாளர்கள் நாடளாவிய ரீதியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நாளை காலை 8 மணிவரை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.*

*நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் மூன்று பிரிவுகளாக நாடளாவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*இந்த நிலையில் மருந்தாளர்கள் தமது பணிப் புறக்கணிப்பை இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நாளை காலை 8 மணிவரை மேற்கொள்ளவுள்ளனர்.*

*நிறைவு காண் மருத்துவவியல் வல்லுநர்கள் ஒன்றியத்தினுள் அடங்கும் பணியாளர்கள் ஏற்கனவே 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில் தற்போது மேற்கொண்டு வரும் பணிப் புறக்கணிப்பில் 12 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.*

**இந்த நிலையில் மருந்தாளர்கள் தமது பணிப்புறக்கணிப்பை இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நாளை காலை 8 மணிவரை மேற்கொள்ளவுள்ளனர்.**

*நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் நேற்று வியாழக்கிழமை காலை 8 மணிவரை எக்ஸ்ரே கதிர் இயக்கப் பிரிவினரும் இயன் மருத்துவர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.*

*அத்துடன் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் நாளை காலை 8 மணிவரை மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.*

*அதனைத் தொடர்ந்து இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நாளை காலை 8 மணிவரை மருந்தாளர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.*

*எக்ஸ்ரே கதிர் இயக்கப் பிரிவினரும் இயன் மருத்துவர்களும் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், மருந்தாளர்கள் உட்பட நிறைவு காண் வைத்திய ஊழியர்கள் தமது கோரிக்கைகளாக மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவை அதிகரித்தல், பல்கலைக் கழகங்களில் இருந்து நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களாக வெளியேறும் பட்டதாரிகளை வைத்தியசாலையில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமித்தல், தீர்வையற்ற முறையில் வாகனம் கொள்வனவுக்காக அனுமதி வழங்கப்பட வேண்டும், மாகாண ரீதியாக விசேட தரத்தை உடையவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும் ஆகிய பிரதான 4 கோரிக்கைகள் உட்பட 12 கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-4)*

## நிகழ்வுகள் இன்று

கலந்துரையாடல்

2013ஆம் ஆண்டுக்கான இரண்டாவது மொழிக் கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

## நயினாதீவில் சேதமடைந்துள்ள வீதிகளைத் திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.11

நயினாதீவில் சேதமடைந்துள்ள வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வேலணை பிரதேச சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்து இருக்கும் இந்த வீதிகள் விரைவில் புனரமைக்கப்படவுள்ளன என்று சபை உறுப்பினர் சி.ந.கருணாகர குருமூர்த்தி தெரிவித்தார்.

நயினை வங்களாவடி வீதி, ஐயனார்வீதி, நயினை மேற்கு வீதி, கேளிக்குழி வீதி, பிடாரி அம்மன் வீதி போன்றவை புனரமைக்கப்படவுள்ளன.

பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த வீதிகளை விரைவாக புனரமைக்க சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஏற்கனவே பெய்த மழையாலும் இந்த வீதி பெரும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நள்ளிரவில் பயணிக்கும் வாகனங்களால் அச்சம்

தென்மராட்சி,ஜன.11

தென்மராட்சி பிரதேசத்தில் நள்ளிரவு வேளையில் பயணிக்கும் வாகனங்களால் மக்கள் இரவுவேளை அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

சங்கத்தானை, பெரியஅரசடி, மீசாலை, மடத்தடி போன்ற பகுதிகளில் நள்ளிரவு 12 மணி தொடக்கம் ஒரு மணி வரை மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் அப்பகுதி வீடுகளின் முன்னால் நிறுத்தப்படுவதும் வீட்டுக்காரர் விழிப்புடன் இருப்பதை உறுதிப்படுத்தும் முகமாக மின் வெளிச்சங்களைப் போட்டதும் வாகனங்கள் புறப்பட்டுச் செல்வதாகவும் கூறப்படுகின்றது. மக்கள் தினமும் இதனால் அச்சத்துடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

## பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் இடம்பெற்று வரும் 3 நாள் தொடர் பணிப்புறக்கணிப்பால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை கதிர்வீச்சின் கதிர் இயக்கப் பிரிவினர் மேற்கொண்ட பணிப் புறக்கணிப்பால் கதிர்வீச்சு எடுக்கச் சென்ற நோயாளர்கள் மருந்துச் சிட்டைகளுடன் காத்திருந்தனர். விடுதிகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் உட்பட கிளினிக் பிரிவுக்கு சிகிச்சைக்காக வந்த நோயாளர்களும் எக்ஸ்ரே கதிர்வீச்சு எடுப்பதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

நாளாந்தம் அதிக எண்ணிக்கையானோர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருவதால் தொடர்ந்து இடம்பெறும் பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (ம-14-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம.. தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களையும் அமெரிக்கா எழுப்பியுள்ளது என்று அந்நாட்டு அரச திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நுலண்ட் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் குற்றப் பிரேரணை விவகாரம் தற்போது பூதாகரமாகி நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலான 'போர்' உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இதுகுறித்து அமெரிக்கா மீண்டும் உன்னிப்பான கவனம் செலுத்தியுள்ளமை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையே, பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை, மனித உரிமைக் கடப்பாடுகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு பிழையான செய்தி ஒன்றை கொண்டுசெல்லும் என்று ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி ஒருவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை, குற்றப் பிரேரணை விடயத்தை வைத்துக் கொண்டு நாட்டில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முனைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலைமைகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் மதத் தலைவர்களுடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்.. தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திலுமுள்ள சட்டத்தரணிகள் திரண்டதால், நாடுமுழுவதும் நேற்று நீதிமன்றச் செயற்பாடுகள் முடங்கின.

இதனால், கொட்டும் மழையில் பல சிரமங்களுக்கு மத்தியில் தொலைதூரத்திலிருந்து வழக்கு விசாரணைகளுக்காக வந்த மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் கொழும்பு புதுக்கடை உயர்நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியில் சட்டத்தரணிகள் சங்கத்தின் நாடுமுழுவதிலுமுள்ள 78 கிளைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்ட நாடுமுழுவதிலுமுள்ள சட்டத்தரணிகள், மேற்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக பஸ்கள் மூலம் கொழும்பு புதுக்கடை வளாகத்தை வந்தடைந்தனர். அதனால் கொழும்பு, கண்டி, காலி, ஹற்றன், கம்பஹா உள்ளிட்ட நாடுமுழுவதும் நேற்றைய நீதிமன்ற நடவடிக்கைகள் முடங்கின.

சட்டத்தரணிகள் மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பால், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பல சிரமங்களுக்கு மத்தியில் வழக்கு விசாரணைகளுக்காக நீதிமன்றங்களுக்குச் சென்ற மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

''சட்டத்தரணிகள் இன்று (நேற்று) பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டதால் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் வந்த நாம் ஏமாற்றத்துடன் வீடு திரும்பவேண்டிய நிலையேற்பட்டது.

இன்றைய (நேற்றைய) தினம் எமது வேலைகளையும் விட்டுவிட்டு அடைமழைக்கு மத்தியிலும் பல கிலோமீற்றர் தொலைவிலிருந்து பணத்தைச் செலவழித்து வந்த நாம் வெறுங்கையுடன் வீடு திரும்பினோம்.

இந்த வழக்கு விசாரணையில் சமுகமளிப்பதற்காக நாம் இன்னுமொரு தடவை எமது வேலைகளை விட்டுவிட்டு பணம் செலவழித்து நீதிமன்றத்துக்கு வரவேண்டிய நிலையேற்பட்டுள்ளது - எனத் தெரிவித்தனர். (த-சி)

## எங்கள்.. தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வன்னி மக்களின் நிலைமைகளை நேரில் அறிந்து கொள்வதற்காக இலங்கை ஆயர் மன்றத்தின் தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையிலான 10 ஆயர்களைக் கொண்ட குழு அங்கு பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழுவினர் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை உள்ளிட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தனர். ஒவ்வொரு ஆயர்களும் தனித்தனியாக மக்களின் குடிசைகளுக்குச் சென்று அங்கு அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரில் ஆராய்ந்து அவதானித்தனர்.

அதன்போதே அங்கு கூடிய பெற்றோர் ஆயர்களிடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

'இறுதிப் போரின் போது எமது பிள்ளைகள் பலர் காணாமற்போயுள்ளனர். பலர் படையினரிடம் சரணடைந்தனர். ஆயினும் எமது பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? என்பவை தொடர்பில் எதுவும் எங்களுக்குத் தெரியாது. அவர்கள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் நாங்கள் கடந்த மூன்று வருடங்களாக காத்திருந்து களைத்துப்போய் விட்டோம். எங்கள் பிள்ளைகள் தொடர்பான விவரங்களை அரசிடம் தொடர்புகொண்டு அறிந்து சொல்லுங்கள்' எனக் கண்ணீர் மல்கியவாறு பெற்றோர்கள் ஆயர்களிடம் உருக்கமான கோரிக்கை விடுத்தனர்.

'அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் நாங்கள் அல்லற்படுகின்றோம். சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள போதும் எமக்கு எந்தவித உதவிகளையும் அரசு வழங்கவில்லை. மழை, வெயில் ஆகியவற்றுக்கு மத்தியில் ஓட்டைக் குடிசைகளுக்குள்ளேயே எங்கள் வாழ்வு நகர்கிறது. பிள்ளைகள் கல்வியை தொடர்வதற்கு போதிய வசதிகள் எதுவும் இல்லை. வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு எந்தவித உதவிகளும் எமக்கு கிடைக்கவில்லை. இதனால் அன்றாட வாழ்வை ஓட்டுவதற்கு பெரும் சிரமப்படுகிறோம். எங்களது நிலைமைகளை இப்போது நீங்களும் நேரில் கண்டிருக்கிறீர்கள். இதனை அரசுக்குத் தெரியப்படுத்துங்கள்.' என்றும் புதுக்குடியிருப்பு மக்கள் தமது மனக் குமுறல்களை ஆயர் குழுவிடம் கொட்டித் தீர்த்தனர்.

இந்த மக்களின் கோரிக்கைகள் குறித்து கருத்து வெளியிட்ட மட்டக்களப்பு ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை -

எல்லா மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீண்டும் புதிய வாழ்வை ஆரம்பிக்க வேண்டும். நேரில் வந்து அவர்களுடைய நிலைமையை பார்த்துள்ளோம். இந்த மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசுடன் பேசி உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்-

பாடசாலைகள், தேவாலயங்கள், குடியிருப்புகள் என அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. அவை புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளன. இது குறித்தும் நாங்கள் அரசுடன் பேசுவோம் - என்றார். (த-400)

## எதிரணி... தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எதிர்ப்புகளும் ஆட்சேபனைகளும் உதாசீனப்படுத்தப்பட்டு விவாதம் முன்னெடுக்கப்பட்டது.

ஆளும் தரப்பினரின் தன்னிச்சையான விருப்பத்திற்கிணங்க விவாதம் நடத்தப்படுவதால் ஜே.வி.பியினர் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. பிரதம நீதியரசருக்கு எதிரான தெரிவுக்குழு அறிக்கை தொடர்பான விவாதம் நேற்றும் இன்றும் (10ஆம் 11ஆம் திகதிகளில்) விசேடமாக விவாதிக்கப்பட இருப்பதால் வழமையான ஒழுங்கு விதிகள் தளர்த்தப்பட்டு வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் நீக்கப்பட்டு நேரடியாகவே விவாதம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சபாநாயகரினால் இதுகுறித்து அறிவிப்பு விடப்பட்ட போது, எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோன் அமரதுங்க பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றை எழுப்பினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை சட்டவலுவற்றது, தீர்ப்பளிக்கும் தத்துவம் அற்றது, அது செல்லுபடியற்றதாகும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, செல்லுபடியற்ற குழுவின் அறிக்கை தொடர்பாக சபையில் விவாதம் நடத்தமுடியாது எனத் தனது ஆட்சேபனையை வெளிப்படுத்தினார்.

இக்கூற்றை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கவும் வலியுறுத்தினார்.

### கட்சித் தலைவர்களின் தீர்மானம் என்கிறார் சபை முதல்வர்

ஆளும் தரப்பில் கருத்து வெளியிட்ட சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா-

எதிர்க்கட்சியினர் கூறுவது தவறு. இவ்விடயம் தொடர்பாகக் கடந்த வாரம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மனத்தின் படியே 10ஆம் 11ஆம் திகதிகளில் விவாதம் நடத்த இணக்கம் காணப்பட்டது. இப்பொழுது இங்கே வந்து விவாதம் நடத்தக்கூடாது. பிற்போடவேண்டும் என்று கூறுவது தவறு. தீர்மானத்தின்படி விவாதம் நடத்தப்படவேண்டும் என்று கூறினார்.

### சபை முதல்வர் சபையைத் தவறாக வழிநடத்த முனைகின்றார்

சபை முதல்வரின் கூற்றை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்கவும் ஜே.வி.பி. உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவும் மறுத்தனர். கடந்த 7ஆம் 9ஆம் திகதிகளில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாங்களும் கலந்துகொண்டோம். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி இவ்விடயம் தொடர்பாக விவாதம் நடத்தக்கூடாது என்று தான் கூறினோம். விவாதம் நடத்தவேண்டும் என்று ஏகமனதான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. சபை முதல்வர் உண்மைக்கு மாறான விடயங்களைக் கூறி சபையைத் தவறாக வழிநடத்த முனைகின்றார் என ரவி கருணாநாயக்கவும் அநுரகுமார திஸாநாயக்கவும் கூறினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரனும் அதே கூற்றைத் தெரிவித்தார்.

இரு தரப்பினரதும் வாதப்பிரதிவாதங்களை செவிமடுத்த சபாநாயகர் இவ்விடயம் தொடர்பாகத் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும் என்பதால் சபை நடவடிக்கைகளை பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாகக் கூறி சபை அமர்வைப் பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

### விவாதம் நடத்த அனுமதி

பத்து நிமிடங்களின் பின்னர் சபை மீண்டும் கூடியபோது இவ்விடயம் தொடர்பாக நான் நன்கு பரிசீலனை செய்தேன். நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக உள்ளதால் விவாதத்தைத் தொடர்ந்து நடத்த அனுமதியளிப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

### ஜோசப் மைக்கல் பெரேரா ஒழுங்குப் பிரச்சினை

அவ்வேளை, ஐ.தே.க. உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா, 117 உறுப்பினர்களால் கையொப்பமிட்டு 14 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஐந்து குற்றச்சாட்டுகள் தொடர்பாக மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளன. தெரிவுக்குழுவின் அறிக்கை பூரணமானதல்ல என்று ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

### தெரிவுக்குழுவுக்கு தன்னிச்சையான அதிகாரம் வழங்கியது யார்?

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 14 குற்றச்சாட்டுகளையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. சபையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவினரிடம் 14 குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் தெரிவுக்குழுவினர் ஒன்பது குற்றச்சாட்டுகளைப்பற்றி விசாரணை நடத்தவில்லை. இதில் முக்கியமான ஒரு விடயம் திவிநெகும சட்டவியாக்கியானம்.

நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக செயற்பட அதிகாரம் வழங்கியது யார் என்று ஒழுங்குப்பிரச்சினைக்கு ஆதரவாகப் பேசினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

### ஜே.வி.பியினர் வெளிநடப்பு

சபாநாயகரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அரசமைப்புக்கு விரோதமான முறையில் நடைபெறும் இந்த விவாதத்தில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை எனக்கூறி ஜே.வி.பி. உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர். எனினும் விவாதம் தொடர்ந்து நடத்தப்பட்டது. (அ-சி)

## கைதிகள்.. தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிறைக்கூடத்தைத் திறந்து வெளியே தப்பிய 10 கைதிகளும், சாவிக்கொத்தை வீசிவிட்டு குறித்த காவலாளி உட்பட அவர்களைத் தடுக்கவந்த மூன்று காவலாளிகளையும் தாக்கிக் கட்டிவைத்துவிட்டு சிறைச்சாலை சுவரை உடைத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்கள் 10 பேரும் சிறைச்சாலைச் சுவரில் மூன்று இடங்களை உடைத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். மேற்படி இவர்கள் 10 பேரும் நேற்றுக்காலை அவிசாவளை ருவான்வெல நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படவிருந்தவர்கள் என அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய கைதிகள் 10 பேரில் நால்வர் பாரிய குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும், ஏனைய 6 பேரும் சாதாரண குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தப்பிய கைதிகளைக் கைதுசெய்வதற்காகத் தாம் தீவிர விசாரணையிலும், தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டுவருவதாக என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன், சிறைக்கைதிகள் தப்பியோடியுள்ளமையால் அவிசாவளைச் சிறைச்சாலை உட்பட அவிசாவளை நகரமெங்கும் பெரும் பதற்றமான சூழ்நிலை தோன்றியுள்ளதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (த-சி)

## 23 வருட... தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாழ்.மாவட்டத்துக்கு இரண்டு நாள் பயணமாக வந்திருந்த இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் பலதரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன்போது நேற்று வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகளையும் அவர் யாழ்.நகரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டமை வருமாறு:-

இலங்கை அரசு மீள்குடியமர்வு நடவடிக்கைகள் முடிந்துவிட்டதாகவும் நலன்புரி நிலையங்கள் எதுவுமில்லை என்றும் தெரிவிக்கின்றது. ஆனால் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மயிலிட்டியிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து மக்கள் இன்னமும் மீள்குடியமர முடியாத நிலையில் உள்ளனர். இன்னமும் மக்கள் 56 நலன்புரி நிலையங்களிலேயே தங்கியுள்ளனர்.

கடற்றொழில் செய்வதற்கு மிகவும் உகந்த வடபகுதியின் 30 கிலோமீற்றர் நீளமான கடற்பகுதி பாதுகாப்பு வலயமாக இருப்பதால் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் மீனவர்களுக்குரிய மீன்பிடித்துறைமுகமான மயிலிட்டித் துறைமுகம் இன்னமும் பாதுகாப்புப்படைகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

ஒருநாட்டினது எல்லைக்குள் இன்னொரு நாட்டுப் படகு வந்தால் அது அத்துமீறல். ஆனால் இந்தியப் படகுகள் தினம் தினம் வந்து செல்வதை இலங்கை அரசு வேடிக்கை பார்க்கின்றது.அப்படியானால் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் என்ன ஒப்பந்தம்.

ஏன் இந்திய மீனவர்கள் எங்களது வடபகுதிக் கடலுக்குள் வரவேண்டும்? இந்தியாவுக்குப் பக்கத்தில் பாகிஸ்தான், சீனாவுக்கு அருகில் பெரிய கடற்பகுதி இருக்கின்றதே. அங்கு சென்று மீன்பிடிக்கலாமே என்று தமது கேள்விகளை அடுக்கினார்.

போர்முடிந்த பின்னர் மீனவச்சமூகம் நல்ல விடிவு கிடைக்கும் என்று எதிர்பார்த்தது. ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்ற சம்பவங்களைப் பார்க்கும்போது இந்த நாட்டை விட்டு வெளியேறுவதே தீர்வு என்று எண்ணத் தோன்றுகின்றது.- என்றார். (த-5)

## 'உதயன்'.. தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அங்கு இன்னொரு மோட்டார் சைக்கிளில் 'ஹெல்மட்' அணிந்து முகத்தை மறைத்தபடி வந்த இருவர் மோட்டார் சைக்கிளோடு விழுந்த உதயன் பணியாளரை கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

''ஓடுஓடு'' என்று தமிழில் திட்டியபடியே, முள்ளுக் கம்பியால் சுற்றப்பட்ட இரும்புக்கம்பியால் பணியாளர் பிரதீபனை துரத்தித் துரத்தித் தாக்கினர். அந்தச் சமயத்தில் நெல்லியடி நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றில் பாய்ந்து ஏறி தப்பிச்சென்றார் உதயன் பணியாளர்.

அவர் ஓடியதும் தாக்குதலாளிகள் பிரதீபனின் மோட்டார் சைக்கிளையும், விநியோகத்துக்கென எடுத்துச்செல்லப்பட்ட 'உதயன்' பிரதிகளையும் தீயிட்டு எரித்துள்ளனர். இதில் மோட்டார் சைக்கிளும், நூற்றுக்கணக்கான 'உதயன்' பிரதிகளும் முற்றாக எரிந்து சாம்பலாகின.

அதன் பின்னர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற 'உதயன்' பணியாளர் தான் தாக்கப்பட்டமை குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்தார். அதன் பின்னர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை, அவருடன் சென்ற மற்றைய 'உதயன்' விநியோகப் பணியாளர், வல்லைச் சந்திப் பகுதியைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்த போது அவரை மோட்டார் சைக்கிளில் இருவர் பின் தொடர்ந்துள்ளனர். அதனை அவதானித்த அவர் வேகமாக நெல்லியடி நகருக்குள் பிரவேசித்துள்ளார். இதனையடுத்து பின்தொடர்ந்தவர்கள் திரும்பிச்சென்றுவிட்டனர்.

ஆயினும் பின்னர் அவர் தனது விநியோகப் பணிகளை முடித்துக்கொண்டு வல்லை - உடுப்பிட்டி வீதி ஊடாக திரும்பி வரும் போதும், அதே நபர்கள் மோட்டார் சைக்கிளில் மீண்டும் குறித்த பணியாளரை பின் தொடர ஆரம்பித்தனர். இதனையடுத்து அவர் வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தி நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார்.

ஆயினும் அவரது முறைப்பாட்டை நெல்லியடிப் பொலிஸார் ஏற்க மறுத்தனர். இதனால் அவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு சென்று முறைப்பாட்டை பதிவு செய்தார்.

இதேவேளை, யாழிலிருந்து வெளியாகும் இன்னொரு பத்திரிகை விநியோக ஊழியரை, வல்வெட்டித்துறை சந்திக்கு அண்மையில் குஞ்சர்கடைப் பகுதியில் வழிமறித்த இனந்தெரியாத நபர்கள், அவர் எந்தப் பத்திரிகையை விநியோகிக்கிறார் என்பதைக் கேட்ட பின்னரே அவரைத் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர். அதன் பின்னரே குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ந- 5-8-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பகுதியில் பெரிய புதிய குளம் கிராமங்களை உவராவதிலிருந்து தடுக்க

## நீர்ப்பாசன திணைக்களத்தினர் அமைக்க முயற்சி

அக்கராயன், ஜன.11

**பூநகரியில் பெரிய அளவிலான புதிய குளமொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பூநகரியில் பாயும் செம்மங்குன்று மற்றும் குடமுருட்டி ஆறுகளின் நீரைத் தேக்குவதன் மூலமாக 'பூநகரிக்குளம்' என்ற பெயரிலான புதிய குளத்தை உருவாக்கும் முயற்சியில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

பூநகரியில் கொக்குடையான் மாளப்பூ, ஆலங்கேணி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இந்தப் புதிய குளம் அமைக்கப்படவுள்ளது.

இதனை உருவாக்குவதற்குப் பெருமளவு நிதி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

பூநகரிக்குளம் உருவாக்கப்படுமானால் பூநகரியின் பெருமளவு நிலப்பரப்பை உவராபத்தில் இருந்து தடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை குடமுருட்டி ஆற்றை மறித்து ஏற்கனவே குடமுருட்டிக் குளம் என்ற குளத்தை உருவாக்கிய நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தற்போது இன்னுமொரு குளத்தை உருவாக்கும் முயற்சியில் பூநகரியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மழை வெள்ளம் காரணமாக நெற்பயிர்களுக்கு பெரும் அழிவு

கிளிநொச்சி, ஜன.11

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னர் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 8 ஆயிரத்து 400 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன. இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கமநல உதவி ஆணையாளர் எஸ். தயாரூபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தற்போதும் மழை பெய்து வருவதால் இரணைமடுக்குளம் தொடக்கம் ஏனைய முக்கிய குளங்கள் வான்பாய்கின்றன. இதனால் நெற்பயிர்களுக்கு மேலும் பெரும் அழிவு ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-18)



கிளிநொச்சி உதயநகர் கிழக்கு முன்பள்ளியின் திறப்பு விழா நிகழ்வின் போது கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் மங்கல விளக்கை ஏற்றி வைக்கின்றார். (க-18)

மகாதேவா சைவச்சிறார் இல்ல

## விடுதிக் கட்டடப் பணிகளுக்கு உதவுமாறு அவசர கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.11

மகாதேவா சிறுவர் இல்லத்தில் பெண்களுக்கென அமைக்கப்பட்டு வரும் விடுதி வேலைகளைத் துரிதமாகப் பூர்த்தி செய்யும் பொருட்டுமேலும் உதவிகளை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். வணிகர் கழகத்தினால் கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்தில் தங்கியுள்ள பெண்களுக்கான விடுதி 20 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதனைத் துரிதமாகப் பூர்த்தி செய்யும் பொருட்டு நிதி மற்றும் உட்கட்டுமானத்துக்கான உதவிகள் தேவைப்படுகின்றனஎன்றும், இவற்றை யாழ் வணிகர் கழகத்துக்கு வழங்குவதற்கு வடபகுதி வர்த்தகர்கள் மற்றும் தமிழ் உறவுகள் முன்வரவேண்டும் என்றும் சைவச்சிறார் இல்லத் தலைவரான தி.இராசநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் : தற்போது இந்த இல்லத்தில் 146 ஆண்களும், 177 பெண்களும் தங்கியுள்ளனர். ஆனால் 120 பெண்கள் மட்டுமே தங்கியிருக்கக் கூடிய வசதிகள் உள்ள நிலையில் 177 பேர் தங்கியுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு ஆர்.ஜெயசேகரம் தலைமையிலான யாழ் வணிகர் கழகத்தினர் 20 மில்லியன் ரூபா செலவில் கட்டட வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இதனை மேலும் முன்னெடுத்து பூர்த்தி செய்வதற்கு மேலதிக நிதி மற்றும் உட்கட்டுமான உதவிகள் தேவைப்படுகின்றன.

இவற்றை உதவுமாறே அவர் தற்போது வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-50)

## வவுனியாவில் விவேகானந்தரின் 150 ஆவது நினைவு தின விழா

நாளை சுத்தானந்த மண்டபத்தில்

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு நினைவு விழா வவுனியாவில் கொண்டாடப்படவுள்ளது.

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட இந்து ஆலயங்கள் இணைந்து இந்த விழாவைக் கொண்டாடவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசாலை மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

விழாவுக்கு நா.சேனாதிராசா தலைமை தாங்கவுள்ளார்

நிகழ்வில்வணிகச்செம்மல் வை. தேவராசா தேவாரங்களை இசைக்கவுள்ளார். வரவேற்புரையை க.ஜயம்பிள்ளை நிகழ்த்துவார்.

மேலும் வீர இளைஞர்களுக்கு விவேகானந்தர் என்ற தலைப்பில் புளியங்குளம் இந்துக்கல்லூரி ஆசிரியர் பா. பாலசுந்தரமும் இந்துப் பெண்மணிகள் என்ற தலைப்பில் பண்டிதை, யோகா சோமசுந்தரமும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தலைப்பில் ஆசிரியர் சி.வரதராஜனும் மத மாற்றம் என்ற தலைப்பில் ஐ.கதிர்காமசேகரனும் இந்து சமுதாய ஒற்றுமை என்ற தலைப்பில் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர். இறுதி நிகழ்வாக இந்து ஒற்றுமைகீதம்இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## கிராம அலுவலர் போட்டிப் பரீட்சை செயலமர்வின் இறுதி நிகழ்வு கிளிநொச்சி தொழில்நுட்ப கல்லூரியில்

அக்கராயன்,ஜன.11

கிராம அலுவலர் போட்டிப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கான செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியினால் கிராம அலுவலர்களைத் தெரிவு செய்வதற்காக இடம்பெறவிருக்கும் போட்டிப்பரீட்சைக்குத் தோற்றவிருப்போருக்கான செயலமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

இதன் இறுதிநாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய அரச அதிபர் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டிப் பரீட்சைக்குச் செல்லும் மாணவர்களைத் தயார் செய்வதற்குரிய நிறுவனங்கள் இல்லாத நிலையில் தொழில்நுட்பக் கல்லூரியின் இந்த முயற்சி பாராட்டுதலுக்கு உரியது என்றார்.

தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் க.வைரமுத்துவும் இங்கு உரையாற்றினார்.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி இதுவரை சுமார் 5 ஆயிரத்து 800 மாணவர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(க-18)

## மழை காரணமாக மன்னாரின் பல பகுதிகளிலும் வெள்ள நீர்

### பொதுமக்களின் இயல்பு வாழ்வு முற்றாக முடங்கியது

மன்னார், ஜன.11

மன்னாரில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வெள்ளநீர் சூழ்ந்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சாந்திபுரம், சௌத்பார், எமில்நகர், பள்ளிமுனை 50 வீட்டுத் திட்டம், கோந்தைப்பிட்டி, தாழ்வுபாடு, எருக்கலம்பிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வெள்ளநீர் காரணமாகப் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராம மக்களில் பலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் தங்கியுள்ளனர். இதேவேளை தாழ்வுபாடு கிராமத்திலுள்ள சிறுவர் பாடசாலை வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதனால் சிறார்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களை மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் நேற்று நேரடியாகச்

> பலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் தங்கியுள்ளனர்.

சென்று பார்வையிட்டார். அத்துடன் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளையும் அவர் மேற்கொண்டார்.

மன்னார் பிரதேச சபையின் உப தலைவர் அந்தோனி சகாயம், ரெலோ இயக்கத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் பற்றிக் வினோ ஆகியோரும் வெள்ளப் பாதிப்புக்களைப் பார்வையிட்டனர்.

இதேவேளை காலம் பிந்திப் பெய்யும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)


## கண்ணீர் அஞ்சலி



விவசாய பீட 19ஆம் அணி மாணவனும்,
எமது அன்பு நண்பனுமாகிய ஷாணஸ்
நௌறோஜின் அவர்களின் அன்புத் தந்தை
**குருசுப்பிள்ளை யஸ்ரின் சிங்கராயர்** (முன்னாள் புனித வளன் கத்தோலிக்க அர்ச்சகப்பணியாளர்)
நேற்று(10.01.2013) வியாழக்கிழமை
இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த
கவலையடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

19ஆம் அணி விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
28181

## வீடு வாடகைக்கு உண்டு

இல 03, இந்து மகளிர் வீதி கந்தர் மடத்தில்
வாகனத்தரிப்பிடம் உட்பட சகல வசதிகளுடன் கூடிய வீடு
வாடகைக் குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
எழுதுவினைஞர் தேவை
பெண், தகமை- க.பொ.த உயர்தரம், கணினி அறிவு
(நல்லூர், திருநெல்வேலி, கோண்டாவில் பிரதேசங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:
0779789223

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளத்தால் பயிர்கள் அழிவு

வன்னியில் அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் சுமார் 8 ஆயிரத்து 400 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி அரச செயலகத்தில் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தற்போதும் மழை பெய்து வருவதால் இரணை மடுக்குளம் தொடக்கம் ஏனைய முக்கிய குளங்கள் வான்பாய்கின்றன. இதனால் நெற்பயிர்களுக்கு மேலும் பெரும் அழிவு ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-18)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினம் தெய்வேந்திரம்



கொக்குவில் மேற்கைப்பிறப்பிடமாகவும், குளப்பிட்டி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் தெய்வேந்திரம் நேற்று (10.01. 2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம்- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், சிவநாதபிள்ளை, அருளானந் தபிள்ளை, யோகமலர், திருலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சிவப்பிரகாசம், அருளானந்தம் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபன், தற்சொரூபன் (லண்டன்), காயத்திரி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதன மோகனின் (லண் டன்) அன்பு மாமனும், வருணிகா, வாகிணியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (13.01.2013) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### குருசுப்பிள்ளை யஸ்ரின் சிங்கராயர்

(முன்னாள் புனித. வளன் கத்தோலிக்க அச்சகப் பணியாளர்)



மண்டதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட குருசுப்பிள்ளை யஸ்ரின் சிங்கராயர் நேற்று (10.01. 2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுப்பிள்ளை-அக்கினேசம்மா தம்பதியரின் அன்பு மக னும், பிலோமினாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற ஜானி, கனோஜி மற்றும் ஷாணஸ் நௌறோஜி (19ஆம் அணி, யாழ்.விவசாயபீடம், ஆசிரியர்- சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சேவியர்-ஜேட்றூட் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அருள்நாயகியின் அன்புச் சகோதரனும், கார்மேல், வின்சன் டி போல்(சிறைக்கூடஅதிகாரி), மேரிறோஸ், பெத்தோல்டா, மேரிபிறிஜிற்(ஆசிரியர்), பொமிக்கோ (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அன்ரனி ஜோன் (ஆசிரியர்) மற்றும் மேரிபற்றிமா(மலேசியா),லொயலா மகேந்திரன் (மேக்கன்டைல் பாதுகாப்பு சேவை), டோமினிக் டக்ளஸ், றுபினா ஆகி யோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.01.2013) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து மண்டதீவு 3ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மதியம் 12 மணியளவில் புனித பேது ருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித பேது ருவானவர் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
மண்டைதீவு. 077 9334937

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னராசா திரவியம்(பழம்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா திரவியம் (பழம்) கடந்த (05.01.2013) சனிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.01. 2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக உடுவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
பிரதேச சபை, ஒழுங்கை,
மருதனார்மடம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நகரில், தொழில் திணைக்களம் திடீர் பரிசோதனை

### ஊழியர் சேமலாப நிதியில் பதிவு செய்யாதோர் இணைப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ். தொழில் திணைக் களத்தினர் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள சில கடை களில் செவ்வாய்க்கிழமை திடீர் பரிசோதனை மேற் கொண்டனர்.

அதன்போது ஊழியர் சேமலாப நிதியில் பதிவு செய்யாது இருந்து வந்த ஊழியர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கன கேஸ்வரன் தெரிவித்தார்.

தொழில் திணைக்கள அதிகாரிகள் குறித்த சில கடைகளில் மாத்திரம் இந்த நடவடிக்கையில் ஈடுபட் டனர். அவற்றில் சில கடை களில் பல ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்த போதும் அவர்களில் ஒரு சிலருக்கு மாத்திரம் ஊழியர் சேமலா பநிதியில் பதிவு செய்யப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

அவர்களுக்கு மாத்திரம் ஊழியர் சேமலாபநிதி செலுத்தப்பட்டிருக்கிறதே தவிர ஏனைய பணியாளர் களுக்கு அவ்வாறு செலுத் தப்படாது இருந்து வந்தமை தெரிய வந்தது.

அதனையடுத்து பதிவு செய்யாதிருந்த ஊழியர்களது விவரங்கள் பதிவு செய்யப் பட்டன.

வர்த்தகர்கள் சிலர் தமது வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களது விவரங்களை தொழில் திணைக்களத்தில் பதிவு செய்ய விரும்பாத தன் மையை அவதானிக்க முடிந் துள்ளது.

எனினும் அவ்வாறு பதிவு செய்யாமல் இருக்க முடியாது. தமது வர்த்தக நிலை யங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு வர்த்தகர்கள் கட்டாயம் ஊழியர் சேமலாபநிதி செலுத்த வேண்டும். ஊழி யர்கள் அனைவரும் தமக்கு ஊழியர் சேமலாபநிதி செலுத்தப்ப டுவதை வலியுறுத்த வேண்டும்.

சில வர்த்தகர்கள் தமது ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியை செலுத் தாது இருந்து வந்தமையும் தெரிய வந்துள்ளது. அவை இனங்காணப்பட்டு நிதியை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டது.

இவ்வாறு சேமலாப நிதியைச் செலுத் தாதோர் அதனைச் செலுத்த வேண் டும். தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலை யங்கள் மீதான தமது பரிசோதனை தொடர்ந்து முன்னெடுக் கப்படும் என்று கனகேஸ் வரன் மேலும் தெரிவித்தார்.

## கிழக்கில் முதலீடு செய்வதற்கு சவூதி நிறுவனங்கள் ஆர்வம்

### கலந்துரையாடலில் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.11

கிழக்கு மாகாண விவ சாயம் மற்றும் மீன் பிடித் துறைகளில் முதலீடு செய் வதற்கு சவூதி அரேபிய நிறு வனங்கள் ஆர்வம் காட்டி வருகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத்திடம் சவூதி அரே பியாவின் இளவரசி ஆதிலா வின் ஆலோசகர் யஹ்யா பின் அப்துல் அஸீஸ் அல் றாசிட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சவூதி அரேபிய நிறுவனங்களின் முதலீடுகளை ஊக்கு விப்பது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் புதன்கிழமை கொழும்பு ஹில்டன்ரெசிடன்ஸில்இடம் பெற்றது. இந்தக் கலந்துரை யாடல் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமத்துக்கும் சவூதி அரேபியாவின் இளவரசி ஆதிலாவின் ஆலோசகர் யஹ்யா பின் அப்துல் அஸீஸ் அல் றாசிட் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாட லிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை யில் அரபு மொழியினை கற்பிப்பதற்கும், அரபு மொழி கற்கும் மாணவர் சமுதாயத்தை எதிர்காலத்தில் அதிகமாக்கிக் கொள்வதற் குமான உதவிகளை தான் மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் ஹாபஸ் நஸீரிடம் அப்துல் அஸீஸ் அல் ராசிட் உறுதியளித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாட லில் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு, அங்கு எவ்வா றான முதலீடுகளை மேற் கொள்ளலாம் என ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் குந்தாதேவி(பாலு மாமி)



மயிலிட்டியைப்பிறப்பிடமாகவும், ஆஸ்பத் திரிவீதி சங்கானையை நிரந் தரவதி விடமாகவும் கொண்ட பாலசுப் பிரமணியம் குந்தாதேவி (பாலுமாமி) நேற்று(10.01. 2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டர்.

அன்னார் வேலுப்பிள்ளை பாலசுப்பிர மணியத்தின் அன்பு மனைவியும், கேமலதா, கிருஸ்ணலதா, தனுஜா ஆகியோரின் அன்புத் தாயும், முகுந்தன், திலீபன், செல்வக்குமார் (செல்வா ஹாட்வெயார்ஸ், வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு மாமியும், சங்கீர்தின் பிரியமான பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.01.2013) வெள்ளிக்கிழமை ஆஸ்பத்திரிவீதி சங்கானையில் மு.ப. 10.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக முன்னாள் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களும் மகளிர் குழு அங்கத்தவர்களுமான சித்திரா, கங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும் எமது கழக அங்கத்தவர் ஜெகதீஸ்வரன்(ஜெகன்) அவர்களின் அன்பு மாமனும் ஆகிய

தம்பிஐயா பாலதேவன் அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

வளர்மதி முன்னேற்றக் கழகம்,
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் மத்திய சனசமுக நிலைய விளையாட்டுக்கழக தலைவர்
சி.ஜெகதீஸ்வரனின் அன்பு மாமனார் தம்பிஐயா பாலதேவன் (ஓய்வு பெற்ற சமூக சேவைகள் திணைக்கள அத்தியட்சகர்)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்திய சனசமுக நிலையமும்,
விளையாட்டுக்கழகமும்.
(K.C.C.C, K.C.C.C.S.C)

28184

## மரண அறிவித்தல்

### நடராசா சிவகுமார்

(ஓய்வு பெற்ற சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவகுமார் (ஓய்வு பெற்ற சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்) நேற்று (10.01.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வி.எம் நடராசா- அன்னம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற வர்களான ராஜா- தங்கம்மா (மல்லாகம்) தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற றாஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஆத்திகாவின் (ஆசிரியை- புத்தூர் சோமஸ்கந்தா) அன்புத் தந்தையும், தர்சனின் (பட்டதாரி பயிலுனர் -பிரதேச செயலகம் நல்லூர்) அன்பு மாமனும், சாந்தகுமாரி, ஜெயக்குமார், பிறேமகுமாரி, உதயகுமாரி, தேவகுமாரி (பிரதேச செயலம் யாழ்.) சாம்பவி, யசோதா (ஆசிரியை- கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருநாவுக்கரசு, பாலகிருஷ்ணன், சிதம்பரநாதன், சண்முகரத்தினம், பாலேந்திரா, ராகயோகமணி, காலஞ்சென்ற கெங்காதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2013) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,

"ஆர்த்திக்" புகையிரத வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்.

தகவல்: ந.ஆர்த்திகா (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பிரசைகள் மீதான அரசின் அக்கறை இன்மைக்கு உதாரணம்...

**கொ**லைக் குற்றச் சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ரிஸானா நபீக், மன்னிப்பு வழங்கப்பட்டு, விடுதலை பெற்று நாடு திரும்புவார் என்று அவரது பெற்றோர், உறவினர்கள் மட்டுமன்றி, நாட்டு மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். சமீப நாள்களாக வெளிவந்த செய்திகள் அவர் விரைவில் விடுதலையாவார் என்றதொரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் எவரும் எதிர்பாராதவிதமாக, அதிரடியாக நேற்றுமுன்தினம் கிடைத்த மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதென்ற செய்தியால் இன, மத, பிரதேச பேதங்களுக்கு அப்பால் நாடு முழுவதும் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தனது குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும், தனது தங்கைகள் இருவருக்கும் வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்கவேண்டும், புதிய வீடு ஒன்று கட்டித் தனது பெற்றோரை அதில் குடியமர்த்தவேண்டும் என்ற இலட்சியத்துடன் பணிப் பெண்ணாகக் கடமையாற்ற சவூதி சென்றவர் ரிஸானா நபீக். இறுதியில் அவரது உயிரற்ற உடலைக் கூட பார்க்கமுடியாத நிலை அவரது பெற்றோர்களுக்கும் உறவுகளுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மூதூரைச் சேர்ந்த ரிஸானா நபீக் 2005 ஆம் ஆண்டில் சவூதி சென்றார். சவூதி சென்று ஒருமாதம் கூட ஆகாத நிலையில் அவர் விதியின் சோதனைக்கு உள்ளாக நேர்ந்தது. அவர் பணிப் பெண்ணாகப் பணியாற்றிய வீட்டில் அவரது பொறுப்பில் இருந்த நான்கு மாதக் குழந்தையின் மரணம் தொடர்பாக அவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மூன்று நீதியரசர்களைக் கொண்ட மேல்நீதிமன்றம் ஒன்று 'ஷரீஆ' சட்டத்தின் கீழ் அவருக்கு மரணதண்டனை விதித்தது. மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் சவூதி உயர்நீதிமன்றம் மரணதண்டனையை ஊர்ஜிதம் செய்தது. அக் கொலையைத் தாம் செய்யவில்லை என்றும், மூச்சுத்திணறலுக்குள்ளான குழந்தையைக் காப்பாற்ற முயன்றதாகவும் ரிஸானா கூறியிருக்கிறார்.

ரிஸானாவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் மனித உரிமைகள் அமைப்புகள், சிவில் சமூகங்கள், அரசியல் தலைவர்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. ஆயினும் அவற்றினூடு அவரது உயிரைக் காப்பாற்ற இயலவில்லை. தண்டனை நிறைவேற்றத்தைத் தாமதமடையச்செய்ய முடிந்ததேயன்றி, பயன் எதுவும் ஏற்படவில்லை.

சவூதி அரேபியாவின் சட்டத்துக்கு இணங்க நீதிமன்றத் தீர்ப்பில் சவூதி மன்னர் தலையிட முடியாது. குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பளிக்கும் அதிகாரமும் மன்னருக்குக் கிடையாது. ஆனால், பாதிக்கப்பட்டவரின் பெற்றோர் விரும்பினால் மன்னிப்பு அளிப்பதற்கு சட்டத்தில் ஏற்பாடு உண்டு. இதனை ஒரு விதிப்பயன் என்று நினைத்து குழந்தையின் பெற்றோர் மன்னிப்பளித்து மறுமைக்கான ஈடேற்றத்தைப் பெற்றிருக்க முடியும்.

ரிஸானா விடுதலையாவார் என்று கூறி அரசியல் நடத்தி வந்த அரசியல்வாதிகளினால் இறந்த குழந்தையின் பெற்றோரைச் சந்தித்துப் பேசமுடியாது போனதே இந்த முயற்சியின் தோல்விக்குப் பிரதான காரணம். அண்மையில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா மற்றும் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோரின் தலைமையிலான தூதுக்குழு ஒன்று மதத்தலைவர்கள், சிரேஷ்ட அதிகாரிகளுடன் சவூதி சென்றிருந்தது. அவர்களினால் கூட இறந்த குழந்தையின் பெற்றோரைச் சந்திக்க முடியவில்லை. அவர்களது உறவினர்களை மட்டும் சந்தித்துவிட்டு நாடு திரும்பினர்.

குழந்தையின் தாயாரைச் சந்திப்பதற்கு அரபு மொழி தெரிந்த பெண் ஒருவரை அழைத்துச் செல்லக்கூட இவர்கள் முயற்சிக்கவில்லை என்று கூறப்படுகிறது. அத்தகைய பின்புலத்தில், ரிஸானா நபீக்கின் மரணத்துக்காக நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்துவதிலும், கண்டன அறிக்கை வெளியிடுவதிலும் எதுவிதபயனும் இனி ஏற்படப்போவதில்லை. அதுமட்டுமன்றி எதிர்காலத்திலும் இத்தகைய இழப்புக்கள் இனியும் தொடருமோ என்ற ஏக்கமே மிஞ்சுகிறது.

இங்கிருந்து சவூதி அரேபியாவுக்குப் பணிப்பெண் வேலைக்குப் பெண்களை அனுப்புவோர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டுமே செயற்படுகின்றனர். 'ஷரீ ஆ' சட்டம் குறித்துப் பணிப்பெண் வேலைக்காகச் செல்வோருக்கு எடுத்து விளக்குவதில்லை. கடவுச்சீட்டுகளிலும் மோசடிகள் செய்யப்படுகின்றன. ரிஸானா நபீக்குக்கும் இதுதான் நடந்தது. 2005 ஆம் ஆண்டில் அவர் அனுப்பப்பட்ட வேளை, அவர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெறுவதற்கான வயது எல்லையை அடைந்திருக்கவில்லை. 1988 ஆம் ஆண்டில் பிறந்த ரிஸானா வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான வயதுத் தகுதியைப் பெற்றிருக்காத போதிலும் முகவரால் அவரது வயது 1982 ஆம் ஆண்டில் பிறந்தவராகக் காண்பிக்கப்பட்டு கடவுச்சீட்டில் மோசடி செய்யப்பட்டது.

ரிஸானாவின் மரணத்துக்கான பொறுப்பை இலங்கை ஜனாதிபதியே ஏற்கவேண்டும் என்கிறது ஆசிய மனித உரிமைகள் கண்காணிப்பகம். ஜனாதிபதி அலுவலகமும் அரசும் ரிஸானாவின் உயிரைக் காப்பாற்றத் தவறிவிட்டன என்றும் அது குற்றஞ் சாட்டுகிறது.

ரிஸானா விடுதலை தொடர்பாக தொடர்ச்சியாக இந்நாட்டு அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் தெரிவித்துவந்த வாக்குறுதிகள், உத்தரவாதங்கள் பொய்யாகி விட்டன. எமது நாட்டுப் பிரசையை உயிருடன் மீட்டுத் தருவதற்கு இயலாது போனமை அரசின் மக்கள் மீதான அக்கறை இன்மைக்கு ஓர் அடையாள உதாரணம் என்பது தப்பல்லவே...

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறையால் நெருக்கடி

## சுகாதார அமைச்சு நடவடிக்கை; ஓய்வுபெற்ற தாதியர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நீக்க ஓய்வு பெற்ற தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில் உள்வாங்க சுகாதார அமைச்சு விசேட அனுமதி வழங்கியுள்ளது. எனவே வயது வேறுபாடின்றி ஓய்வுபெற்ற தாதியர் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆயிரத்து 500 பேர் வரையில் தாதியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இப்போது 400 பேர் வரையிலான தாதியர்களே கடமையாற்றுகின்றனர். இவர்கள் மும் மடங்கு பணியாற்ற வேண்டியுள்ளது. இவ்வாறான நெருக்கடிகளைத் தவிர்த்து, இலகுவான பணியை முன்னெடுப்பதற்காகவே ஓய்வு பெற்ற தாதியர்களை ஒப்பந்த அடிப்படையில்- வயது வேறுபாடின்றி மீண்டும் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சு இதற்கு விசேட அனுமதி வழங்கியுள்ளது. எனவே ஓய்வு பெற்றவர்கள் போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரியுள்ளனர். (ஜ-4)

# இலங்கையில் தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்

## பிரிட்டன் நாடாளுமன்றில் வலியுறுத்து

லண்டன்,ஜன.11

இலங்கையில் போர் முடிவுற்ற பின்னரும் தொடரும் மனிதப் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை மையமாக வைத்து பிரிட்டன் நாடாளுமன்றில் சூடான விவாதம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழர்கள் சார்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி வரும் சிவோன் மக்டோனாலின் கோரிக்கைக்கு இணங்க இலங்கை தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விவாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பு, ஆள்கடத்தல், போர் முடிந்து மூன்று ஆண்டுகளின் பின்னரும் தொடரும் மனிதப் படுகொலைகள், அடிப்படை வசதிகள் இன்றி மக்கள் அனுபவிக்கும் அவல வாழ்வு மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் என அடுக்கடுக்காக 30 நிமிடங்கள் தொடர்ச்சியான தனது ஆணித்தரமான வாதங்களை ஆதாரங்களோடு முன்வைத்திருந்தார்.

தொடர்ந்து நடைபெற்ற ஒரு மணி நேர விவாதத்தில் இலங்கை அரசைக் கண்டித்து சிவோன் மக்டோனால்டின் கருத்தை ஆதரித்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

சிலர் மேலும் சில விளக்கம் கேட்டு கேள்விகளைத் தொடுத்தனர். ஒரு சிலர் மட்டும் இலங்கை அரசுக்கு ஆதரவாகத் தமது கருத்துக்களைத் தெரிவித்து சிவோன் கூறுவது பொய், ஆதாரம் அற்றது என்றும் கூறியிருந்தனர்.

இவை அனைத்துக்கும் அவ்வப்போதே சிவோன் மக்டோனால் எழுந்து தமது ஆணித்தரமான பதிலை அளித்து அவர்களின் வாயை அடைத்திருந்தார். இந்த விவாதத்தில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவோன் மக்டோனால், பறிக் காடினர், கரத் தோமஸ், ஆகியோர் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கையை கண்டித்தும் உரையாற்றியிருந்தனர்.

லீஸ்கொட், சைமன்கியூஸ், ஜெரமி ஹண்ட் ஆகியோர் இலங்கை அரசை குற்றம் சுமத்தாது தமிழர்களுக்கு நீதி தேவை என்பதை வலியுறுத்தியிருந்தனர். (த-சி)

# விவேகானந்தர் உருவப்படத்துக்கு மலர்தூவி வழிபாடு செய்யுங்கள்

## இந்துஸ்வயம் சேவாசங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.11

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினமான நாளை சனிக்கிழமை இந்து மக்கள் அனைவரையும் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படத்துக்கு மலர்தூவி வழிபாடு செய்யுமாறு இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் கோப்பாய் பிரதேச கிளையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்து சமயத்தின் வீரத்துறவியாக கீழைத்தேய எமது இந்து நாகரிகத்தை உலகளாவிய ரீதியில் எடுத்துரைத்தும், இராமகிருஷ்ணமிஷன் ஊடாகச் சேவையை விஸ்தரித்தும் இந்துக்களைப் பெருமை பெறச் செய்தவர் சுவாமி விவேகானந்தர்.

இவரது 150 ஆவது பிறந்த தினமான நளை காலை 6.33 மணிக்கு சுவாமியின் திருவுருவப் படத்துக்கு மலர்தூவி விளக்கேற்றி நந்திக்கொடியை பறக்கவிட்டு வழிபாடு செய்யுமாறு கேட்டுள்ளனர்.

''இந்துக்கள் எல்லோரும் ஒன்றிணைவோம், இந்து சமயத்தை வளர்ப்போம்'' எனும் தொனிப் பதாகைகளுடன் ஆலயங்கள், இந்து சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், வீடுகள் தோறும் இந்த வழிபாடுகளை நடத்த ஏதுவாக சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படமும், நந்திக்கொடியும் விநியோகிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-14)

# வேலணை பிரதேசத்துக்கு சுகாதார அதிகாரி

வேலணை,ஜன.11

வேலணைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் ஊர்காவற்றுறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியே வேலணைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கும் பதில் கடமை மேற்கொண்டு வந்தார்.

தற்போது வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தரமாக மருத்துவர் எஸ்.மோகனகுமார் சுகாதாரத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-17)

# ஈழத்து எழுத்தாளரின் நூல்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை

வலி.வடக்கு,ஜன.11

ஈழத்து எழுத்தாளர்கள், இலக்கிய கர்த்தாக்களை ஊக்குவிக்கும் முகமாக ஈழத்து எழுத்தாளர்களின் இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை இலங்கையிலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் கலாசார அமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

கடந்த காலங்களில் கலாசார திணைக்களம் இத்தகைய எழுத்தாளர்களிடம் இருந்து நூல்களை கொள்வனவு செய்தது. இந்த வேளையில் பல எழுத்தாளர்களுடைய நூல்கள் கொள்வனவு செய்யப்படக் கூடிய முறையில் தகவல்கள் கிடைக்கப் பெறாமையால் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் இதனை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது பிரதேச செயலாளர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலுள்ள எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்கள் மூலம் உரியவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்கள் பிரசுரித்த நூல்களின் ஒரு பிரதியை குறிப்பிட்ட விண்ணப்பத்துடன் கலாசார திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

எழுத்தாளர் ஒருவர் பல நூல்களை எழுதி இருந்தால் ஒவ்வொரு நூலுடனும் ஒவ்வொரு விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். அனுப்பப்படும் நூல்கள் கொள்வனவு செய்யப்படும் ஆண்டிலோ அன்றி கடந்தஆண்டோ வெளியிடப்பட்டதாக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களையும் விண்ணப்பங்களையும் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் கலாசார அலுவலர்கள் மற்றும் கலாசார அபிவிருத்தி உதவியாளர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் வெள்ளம்



மன்னார்,ஜன 11

மன்னாரில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல பாகங்களிலும் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மன்னார் சாந்திபுரம், சௌத்பார், எமிழ் நகர், பள்ளிமுனை 50 வீட்டுத்திட்டம்,

கோந்தைப்பட்டி, தாழ்வுபாடு, எருக்கலம் பட்டி ஆகிய கிராமங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த கிராம மக்கள் பலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில் தங்கியுள்ளனர். ஏனையவர்கள் தமது வீடுகளில் இடம் பெயராமல் உள்ளனர்.

இதேவேளை தாழ்வுபாட்டு கிராமத்தில் உள்ள சிறுவர் பாடசாலை வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. (த)

# மன்னாரில் அகற்றப்படும் கழிவுகளை கொட்டுவதற்கு இடப் பற்றாக்குறை

### நகரசபை உறுப்பினர் கூறுகிறார்

மன்னார், ஜன.11

மன்னார் நகர சபைக் குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவுகளை அகற்றிக் கொட்டுவதற்கான இடம் தற்போது பற்றாக் குறை யான நிலையில் இருப்பதாகவும் இதனால் மன்னார் நகர சபையினால் தற்போது கழிவுகளை துரிதகதியில் அகற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மன்னார் நகர சபை உறுப்பனர் இரட்னசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்து வந்த கடும் மழையின் காரணமாக மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியாளர்களினால் கழிவுகளை அகற்ற முடியாத நிலை காணப்பட்டதோடு தாமதமும் ஏற்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் மன்னார் நகர சபையினால் சேகரிக்கப்பட்ட கழிவுகள் தனியார் ஒருவருடைய காணியில் தாழ்வான பகுதியில் கொட்டப்பட்டு மண் அகழப்பட்டு வந்தது.

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் பெய்து வந்த கடும் மழையின் காரணமாக மன்னார் நகர சபையின் சுத்திகரிப்புப் பணியா ளர்களினால் கழிவுகளை அகற்ற முடியாத நிலை காணப்படுகிறது

தற்போது குறித்த தனியார் காணியில் மண் அகழ்வுக்கு மன்னார் பிரதேச செயலாளரினால் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனால் குறித்த காணியில் கழிவுகளைக் கொட்டத் தற்போது அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

இதனால் சேகரிக்கப் படுகின்ற கழிவுகளை ஒரு இடத்தில் கொட்ட இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பரகாசம்,உப தலைவர் ஜேம்ஸ் உற்பட நகர சபை உறுப்பனர்கள் மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திர, மேலதிக அரச அதிபர்

திருமதி ஸ்ரான்லி டி மேல் ஆகியோருடன் குறித்த பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிலையில் குறித்த பரச்சினை மன்னார் பிரதேசச் செயலாளரின் கவனத்துக்கும் கொண்டு வரப் பட்டது.

கழிவுகளை சேகரிப்பதற்காக 5 ஏக்கர் அரச காணி மன்னார் நகர சபைக்கு வழங்குவதாக மன்னார் பிரதேசச் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

சுத்திகரிப்பு பணியாளர்கள் அகழ்கின்ற கழிவுகளை வீதிகளிலும் வேறு இடங்களிலும் கொட்டியுள்ளனர்.

இதனால் மன்னார் நகர சபைக்கும் மக்களுக்கிடையிலும் பிரிவினைகள் ஏற்பட்டுள்ளன.

எனவே தற்போது மழை பெய்து கொண்டிருப்பதினால் மக்கள் சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அரச அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு உடனடியாகக் குப்பைகளைக் கொட்டுவதற்கான இடம் ஒன்றை ஒதுக்கித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது.எனவே சுத்திகரிப்பு பணியில் ஈடுபட விரும்புவேர் மன்னார் நகர சபையுடன் தொடர்பை மேற்கொள்கொள்ள முடியும்- என்றார். (த-12)

## முல்லைத்தீவு தெற்கு மக்கள் தொடர்ந்தும் அவல நிலையில்

### அதிகாரிகள் பாரபட்சம் காட்டுவதாக விசனம்

முல்லைத்தீவு,ஜன 11

1990 ஆம் ஆண்டு தொடக்கம் காலம் காலமாக இன்று வரை சுனாமியாலும் 2008 இல் ஏற்பட்ட போரினாலும் இடம்பெயர்ந்து கடுமையாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு தெற்கு பரதேசத்துக்கு இதுவரையும் மேல் மட்ட அரச ஊழியர்களின் கவனயீனத்தால் எவ்வித நிவாரணங்களோ, உதவிகளோ வழங்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் வீடு முற்றாக அழிந்தவர்கள் எந்தவித வீட்டுத்திட்டமும் இல்லாமல் தற்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் தற்காலிக குடிசைகளில் வாழமுடியாமல் மிகவும் இன்னல்படுகின்றனர்


அவர்களுக்கு உரிய நிரந்தர வீட்டுதிட்டத்தைப் பெறுவதற்கு உரிய அதிகாரிகள் ஏற்ற நடவடிக்கை யினை எடுத்து அவர்களுக்குரிய வீட்டுதிட்டத்தை பெற்று கொடுக்குமாறு சமூக நலன்விரும்பகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேவேளை, முல்லைத்தீவு பரதேச சபை

வீட்டுத்திட்டமும் இல்லாமல் தற்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக் கால் தற்காலிக குடிசைகளில் வாழமுடியாமல் மிகவும் இன்னல்படுகின்றனர்

எல்லைக்குட்பட்ட பல கிராமங்கள் வெள்ளத்தினால் முதன் முறையாக பாதிக்கப்பட்டு, தற்போது இரண்டாவது முறையாகவும் கடும் வெள்ளத்தினால் பயிர் அழிவு வீட்டழிவு போன்றவற்றால் மக்கள் இன்னல் படுகின்றார்கள். அவர்களுக்குரிய நிவாரணம் எதுவும் இதுவரையில் வழங்கப்படவில்லை.

ஏனைய பல கிராமங்களுக்கு நிவாரணம் வழங்கப் பட்டிருந்தும் முல்லை நகரம், உணாப்பலவு, வட்டுவாகல் ஆகிய கிராமங்கள் முற்றாக வெள்ளத்தால் சூழ்ந்திருந்தும் உரிய அதிகாரிகளின் கவனயீனத்தால் இதுவரை யில் எவ்வித நிவாரண உதவியும் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர். (த)



வவுனியா பிரதேச செயலக வளாகத்தில் நுளம்பு பெருகும் வகையில் மழைநீர் தேங்கிக் காணப்ப டுகிறது. (ஐ)

## 14 வயதில் காணாமற்போனவர் 22 வயதில் வீடு திரும்பனார்

### கொழும்பலுள்ள ஹோட்டலொன்றில் இதுவரை காலமும் பணியாற்றினாராம்

வவுனியா,ஜன 11

வவுனியாவில் 8 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போனதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மீண்டும் திரும்பவந்துள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

செட்டிகுளம், நேரிய குளம் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் தினேஷ் குமார் என்பவரே இவ்வாறு காணாமல் போன நிலையில் இம்மாதம் 8ஆம் திகதி வீடு திரும்பயுள்ளார்.

இவர் கடந்த 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி தனது தாயாருடன் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த வேளையிலேயே காணாமல் போயிருந்தாரெனவும் இது தொடர்பல் இவரது தாயார் செட்டிகுளம் பொலிஸில் முறைப்பாடு செய்திருந் தாரெனவும் பொலிஸார் கூறினர்.

இவர் 14 வயதில் காணாமல் போன நிலையில் 22 வயதில் திரும்பயுள்ளார்.

இவர் கொழும்பலுள்ள ஹோட்டலொன்றில் இதுவரை காலமும் பணி [illegible] கூறியதாக வும் பொலிஸார் கூறினார். (த)

## மாநாட்டில் கலந்துகொள்ள வலியுறுத்து

வவுனியா, ஜன.11

கொழும்பில் நடைபெறும் பட்டதாரிகள் மாநாட்டில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் வலியுறுத் தியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வவுனியாவைச் சேர்ந்த பட்டதாரி பயிலுநர்களுக்கு நேற்று முன்தினம் விசேட கூட்டம்நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் [illegible] அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் பட்டதாரிப் பயிலுநர்கள்,தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என அறிவித்து ஆறு மாதங்கள் முடிவடைந்தும் இதுவரை எந்த முடிவும் இல்லை. கடந்த செவ்வாய்கிழமை எமக்கு புதன்கிழமை கச்சேரி வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. கூட்டத்துக்குச் சென்றபோது இந்த தகவலே கிடைத்துள்ளது.கிடைக்கும் சம்பளம் தமது செலவுக்கே போதாத நிலையில் எவ்வாறு கொழும்பு சென்று வருவது?என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக அரச அதிபரை தொடர்பு கொண்ட போது, அனைத்து பட்டதாரி பயிலுநர்களையும் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு எமக்கு கடிதம் மூலம் பணிக்கப்பட்டுள்ளது.அந்த செய்தியை சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்தோம்.

கர்ப்பணி பெண்கள், தாய்மார்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனைய பயிலுநர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளோம்- என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் கடந்த வருடத்தில் 28 ஆயிரம் மெற்றிக் தொன் மீன்

## கிடைத்ததாக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள புள்ளி விவரம் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 28 ஆயிரத்து 392 மெற்றிக் தொன் மீன் கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள புள்ளி விவரங்கள் இந்தத் தகவலைத் தெரிவிக்கின்றன.

அந்தப் புள்ளி விவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனவரி மாதம் 2 ஆயிரத்து 182.3 மெற்றிக் தொன் மீன்பிடிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதம் 2 ஆயிரத்து 451.1 மெற்றிக் தொன் மீனும் மார்ச் மாதம் 2 ஆயிரத்து 396.4 மெற்றிக் தொன் மீனும் ஏப்ரல் மாதம் 2 ஆயிரத்து 2.293.5 மெற்றிக் தொன் மீனும் மே மாதம் 2 ஆயிரத்து 430.6 மெற்றிக் தொன் மீனும் ஜூன் மாதம் 2 ஆயிரத்து 342.1 மெற்றிக் தொன் மீனும்-

ஜூலை மாதம் 2 ஆயிரத்து 300.7 மெற்றிக் தொன் மீனும் ஒகஸ்ட் மாதம் 2 ஆயிரத்து 354.3 மெற்றிக் தொன் மீனும், செப்ரெம்பர் மாதம் 2 ஆயிரத்து 630.5 மெற்றிக் தொன் மீனும் நவம் பர் மாதம் 2 ஆயிரத்து 369.8 மெற்றிக் தொன் மீனும் ஒக்ரோபர் மாதம் 2 ஆயிரத்து 552.7 மெற்றிக்தொன் மீனும் டிசெம்பர் மாதம் 2 ஆயிரத்து 88.2 மெற்றிக் தொன் மீனும் யாழ்.மாவட்டத்தில் பிடிக்கப்பட்டுள்ளன.

**1987 ஆம் ஆண்டில் பெரியளவில் வீழ்ச்சிநிலை ஏற்பட்டிருந்தது.**

2011 ஆம் ஆண்டை விட 4 ஆயிரத்து 62.3 மெற்றிக் தொன் மீன் கடந்த வருடத்தில் அதிகமாகப் பிடிக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு 24 ஆயிரத்து 229.9 மெற்றிக் தொன் மீன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் 1983 ஆம் ஆண்டளவில் 48 ஆயிரத்து 677 மெற்றிக் தொன் மீன் பிடிபட்டிருந்த வேளையில் 1987 ஆம் ஆண்டில் பெரியளவில் வீழ்ச்சிநிலை ஏற்பட்டிருந்தது. ஆயிரத்து 981 மெற்றிக்தொன் மீனே இந்த ஆண்டில் பிடிக்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரையில் மீன் கொள்வனவு 3 ஆயிரம் மெற்றிக் தொன்னை விட அதிகளவாகக் காணப்படவில்லை. பின்னர் போர்க் காலங்களில் 2007 ஆம் ஆண்டு கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்ல அனுமதி கிடைக்காத நிலையில் 2 ஆயிரத்து 963 மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 670 மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-13)

# யாழ். கரையோரப் பகுதியில் தேங்கிய வெள்ளம் அகற்றல்

யாழ்ப்பாணம், ஜன. 11

தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக யாழ். கரையோரப் பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ளத்தை உடனடியாக அகற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணாவதி தெய்வேந்திரன் தெரிவித்தார்.

குறிப்பாகச் சூரியவெளிப் பிரதேசத்தில் அதிகளவு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தை மின்சார சபையின் உதவியுடன் நீர்ப்பம்பிகள் மூலம் உடனடியாக அகற்றப்பட்டு வருகின்றது. யாழ். பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பில் இந்த வெள்ளம் அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**யாழ். பிரதேச செயலரின் நேரடிக் கண்காணிப்பில் இந்த வெள்ளம் அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது.**

தொடர்ந்தும் மழை பெய்தால் பொம்மைவெளி, காக்கைதீவு, கொட்டடி, நாவாந்துறை, உதயபுரம், மீனாட்சிபுரம் ஆகிய பகுதிகளில் தேங்கும் வெள்ளத்தை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - யாழ். கரையோரப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் மதிப்பீட்டுப் பணிகளைப் பிரதேச செயலக அதிகாரிகள் மேற்கொண்டனர். (த-17)

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த வலி. கிழக்கில் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.11


வலி.கிழக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவில் மேற் கொள்ளப்படவுள்ளன என்று சபையின் உப தலைவர் கே.தர்மலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் கட்டாக்காலியாக நடமாடும் கால்நடைகளில் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

இந்தக் கால்நடைகள் பிரதேசத்தில் விவசாயப் பயிர்களை மேய்ந்து வருகின்றன. இதனால் பயிர்கள் நாசமடையும் நிலை தோன்றியுள்ளது.

இதனால் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால்நடைகளைப் பிடிப்பதற்கான தொழிலாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:- என்று அவர் மேலும் கூறினார். (ம-17)



யாழ். மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரின் றொபின் குடாநாட்டு நிலவரம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். தூதுவர் உதயன் அலுவலகத்துக்கும் வருகை தந்து பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனுடனும் கலந்துரையாடினார். (ம-4)

# ஓட்டோ மோதி ஒருவர் படுகாயம்

வீதியில் சைக்கிளில் சென்கொண்டிருந்த நபரை எதிரே வந்த ஓட்டோ மோதிக் கொண்டதில் சைக்கிளில் பயணித்தவர் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் புதன்கிழமை கோப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

கைதடியில் இருந்து கோப் பாய் வீதியூடாக வந்து கொண் டிருந்த ஓட்டோ எதிரே கோப்பாயிலிருந்து கைதடி நோக்கி வந்த சைக்கிளுடன் மோதிக் கொண்டதில் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த கோப்பாய் பகுதியைச் சேர்ந்த சி.லிங்கேஸ்வரன் (வயது-31) என்பவர் தலை மற்றும் கை, கால் பகுதிகள் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-14-4)

# அபிவிருத்திகளுக்குத் தடையாக செயற்படும் பொது அமைப்புகள்

## எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் விசனம் தெரிவிப்பு

தென்மராட்சி, ஜன.11

போர் அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப சாவகச்சேரி பிரதேச சபையினர் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த அங்குள்ள பொது அமைப்புக்கள் முட்டுக்கட்டையாக உள்ளதால் வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு பகுதிக்கு மாற்றப்படலாம் என்று மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையின் முயற்சியால் எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் பாதிக்கப்பட்ட வீதிகள், கிணறுகள், பொதுக் கட்டடங்கள் போன்றவற்றை புனரமைக்க பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்புடன் பல வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

ஆனால், அங்குள்ள பொது அமைப்பு ஒன்று ஒதுக்கப்பட்ட நிதியை வேறு வேலைத் திட்டங்களுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள முயன்று வருவதாகக் கூறப்படுகிறது.

**வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு பகுதிக்கு மாற்றப்படலாம் என்று மக்கள் கவலை தெரிவிப்பு.**

முன்னுரிமை அடிப்படையில் மேற் கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்களை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை அடுத்து எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு பகுதிக்கு மாற்றும் நிலை ஏற்படலாம் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி சாவகச்சேரி பிரதேச சபை தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

இந்த விடயம் தொடர்பாக எந்த விதமான முறைப்பாடுகளும் எமக்கு கிடைக்கவில்லை. இது குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ம-9)

# நடமாடும் சேவை மூலம் வலி.கிழக்கு மக்களுக்கு ஆவணங்கள்

## இந்த ஆண்டு அனைவருக்கும் கிடைக்கும் என்கிறார் பிரதேச செயலர்

அச்சுவேலி,ஜன.11

வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டில் சிவில் ஆவணங்களை பிறப்புச்சான்றிதழ் உள்ளிட்ட சான்றிதழ்கள் தகுதியான அனைவருக்கும் வழங்கி முடிப்போம். உரிய சான்றிதழ்கள் இன்றி எதிர்காலத்தில் யாரும் இருத்தல் கூடாது. அதற்கு ஏற்ற முறையில் நடமாடும் சேவைகள் கிராம அலுவலர் பிரிவு வாரியாக நடத்தப்படும். நடமாடும் சேவையை உரியமுறையில் பயன்படுத்தி சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூறினார் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன்.

அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற பதிவு அலுவலகத்தின் நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்து பிரதேச செயலர், கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார். இந்தவிடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுமக்கள் தங்களுக்கு அவசியம் தேவையான சிவில் ஆவணங்களை உரிய வேளையில் உரியமுறையில் பெற்றுக்கொள்ள வேண்டும். பிறப்புச்சான்றிதழ், திருமணச்சான்றிதழ், இறப்புச்சான்றிதழ் போன்றவற்றை சம்பந்தப்பட்டவர்கள் உரிய வேளையில் பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்குறித்த ஆவணங்களின் அவசியம் தொடர்பாக பொது அமைப்புக்கள் சனசமூக நிலையங்கள் தமது பிரதேசம் சார் நிலையில் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

**பொதுமக்கள் தங்களுக்கு அவசியம் தேவையான சிவில் ஆவணங்களை உரிய வேளையில் உரியமுறையில் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

வலிகாமம் கிழக்கில் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை உரியவர்களுக்கு வழங்கி முடிப்பதற்கான வேலைத்திட்டம் கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி நடமாடும் சேவைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

2013 ஆம் ஆண்டு முடிவதற்கு முன்னர் பிறப்புச்சான்றிதழ் உள்ளிட்ட சான்றிதழ்கள் உரியவர்களுக்கு வழங்கி முடிக்கப்படும். 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உரிய சான்றிதழ் இல்லாமல் யாரும் இருக்கக் கூடாது.

நடமாடும் சேவை மூலம் பதிவாளர் அலுவலகம் இலகுபடுத்தப்பட்ட நடைமுறைகள் மூலம் உரிய சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிவில் சான்றிதழ்களின் அவசியத்தை உணராத நிலை எதிர்காலத்தில் இருக்கக் கூடாது.- என்று அவர் தெரிவித்தார். (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லைப் பகுதிக்கு கூடுதல் பாக். படையினர்

## குற்றஞ்சாட்டுகிறது இந்தியா

டில்லி, ஜன.11

இராணுவமயப்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய காஷ்மீரின் எல்லைப் பகுதிக்கு மேலதிகமாக தமது படையினரை பாகிஸ்தான் அனுப்பியுள்ளதாக இந்தியா குற்றஞ் சாட்டியுள்ளது.

இருதரப்புப் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் தமது நாட்டுப் படையினர் இருவர் கொல்லப்பட்டதுடன், ஒருவர் காயடைந்துள்ளதாக வட பிராந்தியத்துக்கான இந்திய இராணுவ கட்டளைத் தளபதி கூறியுள்ளார்.

**இந்திய இராணுவத்தினரின் இந்த குற்றச்சாட்டை பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் ஒருவர் நிராகரித்துள்ளார்.**

இதேவேளை, இரு தரப்பினருக்கும் இடையில் சுமார் ஒரு மணித்தியாலம் எல்லைப் பகுதியில் பிறிதொரு பரஸ்பர துப்பாக்கிப் பிரயோக சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தான் தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டதாக இந்திய இராணுவம் கூறியுள்ளது.

எனினும், இந்திய இராணுவத்தினரின் இந்த குற்றச்சாட்டை பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் ஒருவர் நிராகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

## பீகாரில் பள்ளத்தில் கவிழ்ந்தது லொறி

### 25 பேர் உயிரிழப்பு

பீகாரில் அறுவடைக்காக பணியாளர்களை ஏற்றிச் சென்ற லொறி பள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரி ழந்தனர்.

பீகாரின் அவுரங்காபாத் மாவட்டத்தில் உள்ள டிடைய் பிகா கிராமத்தில் அதிவேகமாக வந்த லொறி வளைவில் திரும்பிய போது அருகில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் சுமார் 25 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 10 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அவுரங்காபாத்தில் இருந்து அறுவடைக்காக பணியாளர்கள் 35 பேரை ஏற்றிச் சென்றபோது மேற்படி விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இராணுவ வீரர்களின் உடல்கள் இராணுவ மரியாதையுடன் அடக்கம்



மதுரா, ஜன.11

ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் இராணுவத்தினரால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட இரண்டு இந்திய சிப்பாய்களின் உடல்கள் அவர்களின் சொந்த ஊரில் முழு இராணுவ மரியாதையுடன் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டன.

ஜம்மு காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்திய இராணுவத்தின் ஹேம்ராஜ், சுதாகர் சிங் ஆகியோர் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

ஹேம்ராஜ், உத்தரப்பிரதேசத்தின் மதுரா மாவட்டத்தின் ஷேர்நகரைச் சேர்ந்தவர். 2001 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்தார். அவரது உடல் நேற்று முன்தினம் சொந்தக் கிராமத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இராணுவ அதிகா ரிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் முழு இராணுவ மரியாதையுடன் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மற்றொரு இராணுவ வீரரான சுதாகர்சிங் மத்திய பிரதேச மாநிலத்தின் தாதியா கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் கடந்த 11 ஆண்டுகளாக இந்திய இராணுவத்தில் பணிபுரிந்தவர்.

கடந்த ஒக்ரோபர் மாதம் தான் கடைசியாக தமது வீட்டுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அவரது உடலும் முழு இராணுவ மரியாதையுடன் நேற்று முன்தினம் இரவு அடக்கம் செய்யப்பட்டது. (வ)

## உ.பிரதேசத்தில் கடும் குளிர்


### 34 பேர் வரை உயிரிழப்பு

லக்னோ, ஜன.11

உத்தரப் பிரதேசத்தில் வரலாறு காணாத குளிர் வாட்டி வருகிறது. கடும் குளிர் காற்றும் வீசி வருவதால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.


கோரக்பூர், பெரெய்லி, காசிப்பூர், கான்பூர் மற்றும் லக்னோ ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் வெப்ப நிலை பூச்சியம் டிகிரியைவிட குறைந்தது. கோரக்பூர் மற்றும் காசிப்பூரில் முறையே -10 டிகிரி, -9 டிகிரியாகவும், லக்னோவில் -8 டிகிரியாகவும், கான்பூரில் -1.1 டிகிரியாகவும் பதிவானது. இந்த கடுங்குளிரைத் தாங்க முடியாமல் பலர் உயிரிழந்து வருகின்றனர். குளிருக்கு மேலும் 34 பேர் இறந்துள்ளனர்.

தியோரியாவில் 5 பேரும், காசிப்பூர், குஷிநகர் மற்றும் மகாராஜ்கஞ்ச் ஆகிய பகுதிகளில் தலா 4 பேரும், பாலியா, ரேபரேலி மற்றும் ஏத்தா ஆகிய பகுதிகளில் தலா 3 பேரும், பிஜ்னோர், மிர்சாபூர், சந்தவ்லி பகுதி களில் தலா 2 பேரும், பாரெய்ச் மற்றும் ஹத்ராசில் தலா ஒரு நபரும் இறந் துள்ளனர். இதன் மூலம் சாவு எண்ணிக்கை 233 ஆக அதிகரித்துள்ளது.



டில்லி வந்துள்ள வியாட்நாம் துணை பிரதமர் வு வான் நின்க்கை வரவேற்கிறார் வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்.

## பிரம்மோஸ் ஏவுகணைச் சோதனை வெற்றி




டில்லி, ஜன.11

நவீனமயமாக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணைச் சோதனை நேற்று வெற்றியளித்தது.


இந்தியா - ரஷ்யா கூட்டு தயாரிப்பில் தயாரிக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணை, 2005 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்டது. நேற்று முன்தினம் 34 ஆவது முறையாக பரிசோதனை நடத்தப்பட்டது.

விசாகப்பட்டினத்தில் வங்கக் கடலில் நிறுத்தப்பட்ட போர்க்கப்பலில் இருந்து நேற்று முன்தினம் காலை 9.30 இற்கு பிரம் மோஸ் ஏவுகணை வெற்றி கரமாக செலுத்தப்பட்டது. இது, 290 கி.மீ. தூரம் பாய்ந்து சென்று இலக்கை துல்லியமாகத் தாக்கியது. ஏவுகணை வெற்றியைத் தொடர்ந்து பிரம்மோஸ் ஏவுகணைப் பிரிவு தலைவர் சிவதாணுபிள்ளை மற்றும் குழுவினரை இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோனி பாராட்டியுள்ளார்.

## சிப்பாய்கள் படுகொலையான இடத்தில் முகாமிட்டிருந்த தீவிரவாதி ஹபீஸ்

### சம்பவத்துடன் தொடர்பிருக்கலாம் என சந்தேகம்

ஸ்ரீநகர், ஜன.11



இந்தியச்சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்ட ஜம்மு காஷ்மீர் எல்லையில் லஷ்கர் இ தொய்பாவின் தலைவரான ஹபீஸ் சையத் கடந்த வாரம் முகாமிட்டிருந்ததாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் கடந்த வாரம் லஷ்கர் இ தொய்பா அல்லது ஜமாத் உத் தவா என்றழைக்கப்படும் தீவிரவாத இயக்கத்தின் தலைவரும் மும்பை தாக்குதலில் முதன்மைக் குற்றவாளியுமான ஹபீஸ் சையத் முகாமிட்டிருந்திருக்கிறார்.

அவர் முகாமிட்ட பகுதிக்கு அருகேதான் இந்தியச் சிப்பாய்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் இந்திய இராணுவத்தினர் படுகொலைக்கும் ஹபீஸ் சையத்துக்கும் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (வ)

## திரைப்படமாகிறது மாணவி மீதான வன்புணர்வுக் கொடூரம்

### ஜனவரி 26 இல் வெளியீடு



சென்னை: ஜன.11

நாடுமுழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்திய டில்லி மாணவியின் பாலியல் வன்கொடுமைச் சம்பவம் 'பிரீடம்' என்ற பெயரில் திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த திரைப்படம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் டில்லியில் ஓடும் பஸ்ஸில் மருத்துவ பீட மாணவி ஒருவர் 6 பேர் கொண்ட கும்பலால் வன்புணர்வுக்குட்படுத் தப்பட்டார். 10 தினங்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டும் அந்த மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மாணவியைச் சீரழித்த குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றக்கோரி அதிகமான மாணவர்கள் மற்றும் சமூக அமைப்புகள் டில்லியில் பல போராட்டங்களை நடத்தின. அந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. 'வைற் அப்பிள்' என்ற சினிமா நிறுவனம் குறித்த திரைப்படத்தைத் தயாரித் துள்ளது. பாதிக்கப்பட்ட மாணவியாக ரேவதி என்பவர் 'ரே' என்ற பெயரில் நடித்துள்ளார். மாணவியின் உயிரிழப்பை ஒட்டி அமிதாப் பச்சன் எழுதிய கவிதையை இதில் பாட லாக்கி இருக்கிறார்கள். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் தயாராகும் குறித்த திரைப்படத்தை டான் கவுதம் இயக்குகிறார். (வ)

## பாடகி சின்மயி அளித்த வழக்கை ரத்து செய்யக்கோரி நீதிமன்றில் மனு

சென்னை, ஜன.11

பின்னணிப் பாடகி சின்மயி அளித்த முறைப்பாடு தொடர்பில் பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்துச் செய்யக்கோரி சென்னை உயிர்நீதிமன்றத்தில், மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு தொடர்பில் இரண்டு வாரங்களில் பதிலளிக்கும்படி 'சைபர் குற்றம்' பொலிஸாருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னணிப் பாடகியான சின்மயி, சென்னை மாநகர பொலிஸ் ஆணையாளரிடம் முறைப்பாடு ஒன்றை அளித்தார். அந்த முறைப்பாட்டில்



தனது சமூக வலைத் தளத்தில் சிலர் ஆபாசமாகப் பேசுகின்றனர். மிரட்டல் விடுக்கின்றனர் என்று கூறியிருந்தார்.

அதையடுத்து சென்னை, 'நிப்ட்' கல்லூரியின் இணை பேராசிரியர் சரவணகுமார், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கைது செய்யப்பட்டார். அவர்மீது இந்திய தண்டனைச் சட்டம், பெண்களை துன்புறுத்துவதை தடுக்கும் சட்டம், தகவல் தொழில்நுட்ப சட்டப் பிரிவுகளின் கீழ், வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு நவம்பர் முதலாம் திகதி எழும்பூர் நீதிமன்றம் சரவண குமாருக்கு பிணை வழங்கியது. தன் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் சரவண குமார் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

[illegible] தாபிமானத்துடன், நேர்மையான அணுகு முறையுடன் செயற்படுபவன். சின்மயி அளித்த முறைப்பாட்டின்படி என் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. நான் துன்புறுத்தல், மிரட்டல் எதிலும் ஈடுபடவில்லை. என் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும்- என்றுள்ளது.

மேற்படிமனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர் சார்பில், சட்டத்தரணி எம்.பழனிமுத்து முன்னிலையானார். குறித்த மனு தொடர்பில் இரண்டு வாரங்களில் பதிலளிக்கும்படி, சைபர் குற்றப் பொலிஸ் அதிகாரிக்கு அழைப்பாணை அனுப்ப நீதிபதி உத்தரவிட்டார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுகத்தில் மோதியது கப்பல்

## 57 பேர் படுகாயம்




நியூயோர்க், ஜன.11
அமெரிக்காவின் நியூயோர்க் நகரத் துறைமுகத்தில் கப்பல் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இதில் 57 பேர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்காவின் நியூயோர்க் மன்ஹாட்டன் துறைமுகத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது. வேகமாக வந்த 'சீ ஸ்ட்ரீக் வால் ஸ்ட்ரீட்' என்னும் கப்பல் துறைமுகத் தளத்தை இடித்துத் தள்ளியவாறு உள்ளே நுழைந்தது.

கப்பல் தளத்தில் மோதும் போது வெடிகுண்டு வெடித்தது போன்று பயங்கர சத்தம் எழுந்தது. கப்பல் மோதிய வேகத்தில் துறைமுகத்தில் நின்ற பலர் தூக்கி வீசப்பட்டனர். இதில் 50 பேர் படுகாயமடைந்தனர். ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

பொலிஸாரும், தீயணைப்பு படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன், பொலிஸார் விபத்துக்கான காரணங்களை ஆராய்ந்து வருகின்றனர்.




# அமெ. ஆளில்லா விமானம் தாக்குதல்: 12 பேர் சாவு

இஸ்லாமாபாத், ஜன.11
பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்தானில் உள்ள பழங்குடியினப்பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லா விமானம் நடத்திய ரொக்கெற் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர்.

வஜிரிஸ்தானின் ஹைதர்செல் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்த தாக்குதலில் அல்-காய்தா பயங்கரவாதி ஷேக் யாசின் அல்-குவாய்தி, அவரது மனைவி மற்றும் மகள் உள்பட 8 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அல்-குவாய்தி வசித்த வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 8 ரொக்கெற்றுகள் ஏவப்பட்டதாகவும், இதில் வீட்டுக் கட்டடம் முழுவதும் இடிந்து தரை மட்டமானதாகவும் பாது காப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு, 15 நிமிடங்கள் கழித்து வடக்கு வஜிரிஸ்தானின் ஹசோகெல் கிராமத்தில் நடந்த மற்றொரு ரொக்கெற் தாக்குதலில் 4 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

# விளம்பரத்தில் லெனின்; போலந்தில் கடும் எதிர்ப்பு




வார்சா, ஜன.11
போலந்தில் விளம்பரத்திற்காக ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர் லெனினின் கார்ட்டூன் படத்தை பயன்படுத்தியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

போலந்தில் உள்ள கைபேசி நிறுவனம் ஒன்று வாடிக்கையாளர்களை கவரும் வகையில் புதிய விளம்பரத்தை தயாரித்துள்ளது.

இதில் ரஷ்ய கம்யூனிஸ்ட் தலைவர் லெனினின் கார்ட்டூனைப் பயன்படுத்தி விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு போலந்தில் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

லெனின் கார்ட்டூனுக்கு எதிராக கைபேசி நிறுவனத்திற்கு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்து குவிந்துள்ளன.

''20ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய குற்றவாளிகளில் லெனினும் ஒருவர். இந்த விளம்பரம் இளைஞர்களை நேரடியாக சென்று சேருவதால், லெனின் மேல் அவர்களுக்கு வேறு விதமான அபிப்பிராயம் ஏற்படும்'' என்று தெரிவிக்கின்றனர் விளம்பரத்தை எதிர்ப்பவர்கள்.

கடும் எதிர்ப்பை அடுத்து லெனினின் கார்ட்டூனை நீக்க சம்பந்தப்பட்ட கைபேசி நிறுவனம் முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவின் குற்றச்சாட்டை மறுக்கிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஜன.11
தமது நாட்டு இராணுவத்தினர், இந்திய வீரர்கள் இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்ற இந்தியாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ளது பாகிஸ்தான்.

இதுகுறித்து பாகிஸ்தான் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

''இதுகுறித்து இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசினோம். அப்போது, பாகிஸ்தான் இராணுவத்தினர் எல்லை தாண்டி துப்பாக்கிப் பிரயோகம் எதனையும் நடத்தவில்லை என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தினோம்'' என்று தெரிவித்தார்.

இதேவேளை பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹினா ரப்பானிகர் இந்தச் சம்பவம் குறித்துக் கூறுகையில்,

''பாகிஸ்தான், இந்தியாவுடனான உறவை மேம்படுத்தக் கடந்த 4 ஆண்டுகளாகப் பெருமுயற்சி எடுத்து வருகிறது. இந்நிலையில் தற்போது இந்தியாவில் இருந்து வரும் அறிக்கைகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளன. இந்தியப் படைவீரர்கள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. அனைத்து விசாரணைகளையும் நாம் நடத்தியுள்ளோம். இந்திய வீரர்கள் உயிரிழந்தமைக்கு பாகிஸ்தான் இராணுவத்தினர் காரணமல்ல என்பதை என்னால் கூறமுடியும்.

கடந்த வாரம் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ வீரர் லான்ஸ் நாயக் அஸ்லாம் உயிரிழந்தார்.

அப்போது வழக்கமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தான் எங்கள் அரசு எடுத்தது. பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சரோ, அல்லது பொறுப்பில் இருப்பவர்களோ எந்த ஓர் அறிக்கையும் விட்டதை யாரும் பார்த்திருக்க முடியாது. ஆனால் தற்போது இந்தியாவில் இருந்து வரும் அறிக்கைகள் எமக்குக் கவலை அளிப்பதாக உள்ளன.'' என்றார்.

# பிராந்தியத்தின் அமைதிக்காக இந்தியா-பாகிஸ்தான் பாடுபடும்

## நம்பிக்கை வெளியிடுகிறது அமெரிக்கா

வோஷிங்டன், ஜன.11
பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பராமரிக்க இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து பணியாற்றும் என்று நம்புகின்றோம் என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் இரு இந்தியப் படை வீரர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததை அடுத்து இருநாடுகளுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையிலேயே அமெரிக்கா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் ஊடகச் செயலாளர் ஜார்ஜ் லிட்டில் தெரிவிக்கையில்:-

''இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நீண்ட காலமாக பதற்றம் நிலவி வருகிறது. இந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைப் பராமரிக்க இரு நாடுகளும் பாடுபடும் என்று நம்புகிறோம். இதை அந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டபோது அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் லியோன் பனேட்டா வலியுறுத்தியிருந்தார்.

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியத்திலும் மற்ற பகுதிகளிலும் செயற்படும் பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த முன்னணி அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த விடயம் தொடர்பாக அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், இந்தியப் பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். பயங்கரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகளில் நாங்கள் அவர்களுடன் கைகோர்த்துச் செயற்படுவோம்'' என்று தெரிவித்தார்.

# மிளகாய் பொடியை தூவிவிட்டு தப்பினர் கில்லாடிக் கைதிகள்


கோலாலம்பூர், ஜன.11
பொலிஸார் மீது மிளகாய் பொடியை தூவி தப்பி ஓடினர் கில்லாடிக் கைதிகள். இந்தச் சம்பவம் மலேசியாவில் இடம்பெற்றுள்ளது.

மலேசியாவின் பினாங்க் பகுதியைச் சேர்ந்த 9 குற்றவாளிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்காக பொலிஸார் அழைத்துச் சென்றனர்.

அப்போது இந்தக் கைதிகள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் தாக்கி சண்டையிட்டு கொண்டனர்.

இதையடுத்து சோதனை சாவடி அருகே வாகனத்தை நிறுத்திய பொலிஸார் பின்கதவைத் திறந்து பார்த்தனர். உடனே கைதிகளில் ஒருவன் தான் வைத்திருந்த மிளகாய் பொடியை பொலிஸார் மீது வீசியெறிந்தான்.

அதை எதிர்பார்க்காத பொலிஸார் நிலைகுலைந்தனர். ஏழு கைதிகளும் தப்பி ஓடிவிட்டனர். தற்போது இவர்களைக் ஹெலிகொப்டர் மூலம் தேடி வருகின்றனராம் பொலிஸார்.



பலஸ்தீனம், கபத்தி பகுதியில் கடும் மழை பெய்து வருகிறது. வீதிகளை குறுக்கறுத்து வெள்ள நீர் பாய்ந்தோடுகிறது. அதனால் வீதிகள் நீரால் அரிக்கப்பட்டு பாதிப்படைந்துள்ளன.

# முதலாவது சுரங்க ரயில் பாதைக்கு வயது 150

லண்டன், ஜன.11
உலகில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சுரங்க ரயில் பாதைக்கு நேற்றுடன் 150 வயதாகியது. உலகிலேயே முதன்முறையாக லண்டனில் தான் சுரங்க ரயில் பாதை அமைக்கப்பட்டது.

1863ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி தொடங்கப்பட்ட ரயில் பாதைக்கு நேற்றுடன் 150 வயதாகியது. ஆரம்பத்தில் மிக குறைந்த தூரத்தில் உருவாக்கப்பட்ட இந்த ரயில் பாதை, தற்போது 402 கிலோமீற்றர் நீளத்திற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. லண்டன் டியூப் என்ற மைக்கப்படும் இந்த சுரங்கப் பாதையின் வழியாக ஆண்டொன்றுக்கு லட்சம் கோடி பேர் பயணிக்கின்றனர்.

# சூடானில் தாக்குதல், 30 தீவிரவாதிகள் சாவு

டார்பர், ஜன. 11
ஆபிரிக்க நாடான சூடானில் இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் பதுங்கி இருந்த இடத்தை இராணுவம் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 50இக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.



தொடர்ந்தும் அந்த பகுதியில் இரு தரப்புக்கும் இடையே மோதல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# மிளகாய் பொடியை வாயில் திணித்து காதலனின் குழந்தையை கொன்ற பெண்

நியூயோர்க், ஜன.11
காதலனின் மகள் வாயில் மிளகாய் பொடியை திணித்து மிகக்கொடூரமாகக் கொலை செய்துள்ளார் இளம்பெண் ஒருவர். இச்சம்பவம் நெருக்கடி டோனியாவில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 6ஆம் திகதி காலை பொலிஸுக்கு அழைப்பொன்று வந்துள்ளது. அதில் குழந்தை ஒன்று கொலை செய்யப்பட்டுள்ளது என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து வீட்டிற்கு விரைந்த வந்த பொலிஸார் உயிரிழந்த குழந்தையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். அங்கிருந்த 21 வயதுடைய அமண்டா ஹோகென் சென் என்ற இளம் பெண்ணைக் கைது செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையின்போது, ''இது எனது காதலனின் குழந்தைதான். என்னுடைய பேச்சை கேட்காத காரணத்தினால் வாயில் மிளகாய் பொடியை திணித்து கொன்றேன்'' என்று சாவகாசமாகக் கூறியுள்ளார் அமண்டா. அதையடுத்து அமண்டா மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ பலத்தை அதிகரிக்கிறது ஜப்பான்

டோக்கியோ, ஜன 11

சர்ச்சைக்குரிய தீவுகள் விடயத்தில் சீனாவும், வட கொரியாவும் ஜப்பானுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. அதை எதிர்கொள்வதற்கு ஜப்பான் தயாராகி வருகிறது.

தற்போது ஜப்பான் இராணுவம் போர் பயிற்சியை அதிகப்படுத்தி உள்ளது. மேலும் ஆயுதங்களை அதிக அளவில் தயாரிப்பதுடன் வெளி நாடுகளிடம் இருந்தும் ஆயுதங்களை வாங்கி குவித்து வருகிறது.


குறிப்பாக போர் விமானங்கள் மற்றும் ஏவுகணை தயாரிப்பில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. இதற்காக இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. எனினும் இன்னும் அதிக அளவு நிதி வேண்டும் என்று இராணுவ துறை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# குழந்தைகளின் கண்முன்னே தந்தை சுட்டுக்கொலை

## கராச்சி நகரில் கொடூரம்

இஸ்லாமாபாத், ஜன. 11

குழந்தைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்ற தந்தை அவர்களின் கண் முன்னே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். தந்தை இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்ட குழந்தைககள் கதறி அழுதனர்.



பாகிஸ்தானின் கராச்சி நகரைச் சேர்ந்த இம்ரான் அப்பாசி. நேற்றுமுன்தினம் காலை தனது 4 குழந்தைகளை பாடசாலைக்கு அழைத்துச் சென்றார். அவர் பாட்சாலையின் வாசலை அண்மித்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் இம்ரான் அப்பாசியை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

உடலின் பல இடங்களில் குண்டுகள் பாய்ந்த நிலையில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். தந்தை இரத்தவெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு 4 குழந்தைகளும் வீதியில் நின்று கதறி அழுதனர்.

இம்ரான் அப்பாசி, ஷியா முஸ்லிம் என்பதால் அதற்கு எதிரான பிரிவினர் இந்த தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.




அண்மையில் 'மிஸ் அமெரிக்கா' பட்டத்துக்கான அழகிப் போட்டி நடைபெற்றது. அதில் 'மிஸ் அமெரிக்கா'வாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நானா மெரிவெதருடன் மிஸ் யுனிவர்ஸ் ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒலிவியா குல்போ.

# இளம்பெண்களை மிரட்டி வன்புணர்வு; சீனா ஓவியருக்கு மரண தண்டனை

பீஜிங், ஜன.11

இளம்பெண்களை மிரட்டி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சீன ஓவியர் ஒருவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது சீன நீதிமன்றம்.

கிழக்கு சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் ஓவிய பயிற்சி மையம் நடத்தி வந்தவர் ஹு. இவரது மையத்தில் படிக்க வரும் இளம்பெண்கள், பள்ளி மாணவிகளுடன் நட்புடன் பழகி, அவர்கள் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வார். பின்னர் இளம் பெண்களின் படத்தை கணினி மூலம் வடிவமைத்து ஆபாசப் படங் களாக மாற்றுவார்.

அதை அவர்களிடம் காட்டி, தன்னுடன் உறவு வைத்துக் கொள்ளாவிட்டால் அந்தப் படங்களை இணையத்தில் வெளியிட்டு விடுவேன் என மிரட்டி தன் காரியத்தை சாதித்து வந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் ஒரு வர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து ஹுவைப் பொலிஸார் அந்த ஆசாமியைக் கைது செய்தனர், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கடந்த 2005ம் ஆண்டு முதல் 2011 வரை 23 பெண்களை அவர் மிரட்டி பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கியமை தெரியவந்தது.

இது தொடர்பாக சுஸ்ஹு நகர நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் ஹுவுக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

## அமைதிப் பேச்சுகள் பாதிக்கப்படமாட்டா –பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஜன.11

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்கள் பாதிக்கப் படமாட்டா என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே பாகிஸ்தான் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது.

# பொருளாதாரத்தில் சீனா அமெரிக்காவை முந்தும்

## எதிர்வுகூறுகின்றனர் நிபுணர்கள்

நியூயோர்க், ஜன.11

எதிர்காலத்தில் பொருளாதார வலிமையில் சீனா அமெரிக்காவை முந்திவிடும் என்று எதிர்வு கூறியுள்ளனர் பொருளாதார நிபுணர்கள்.

உலக அளவில் பொருளாதாரத்தில் மிக வேகமாக சீனா வளர்ந்து வருகிறது. அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றி நிபுணர்கள் கணிப்பொன்றை வெளியிட்டுள்ளனர்.

சீனாவின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து நீடிக்கும். பின்னடைவு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

குறிப்பாக 2019ஆம் ஆண்டில் பொருளாதார வலிமையில் சீனா அமெரிக்காவை முந்திவிடும். இந்த வளர்ச்சி 30 ஆண்டுகள் வரை நீடிக்கலாம். அடுத்த 30 ஆண்டுகளுக்கு சீனா முதன்மை நாடாக திகழும் என கூறியுள்ளனர்,

மேலும் நாட்டின் சுகாதார வளர்ச்சியிலும் சீனா முதன்மை நாடாக திகழும் என தெரிவித்துள்ளனர். தற்போது சுகாதார வளர்ச்சியில் சீனா 11ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# இராட்சத பலூனில் விசித்திர திருமணம் கீழே விழுந்ததில் அனைவரும் காயம்

சாண்டியாகோ, ஜன.11

இராட்சத பலூனில் பறந்தபடி திருமணம் செய்ய முடிவு செய்த தம்பதியினர் பலூன் கீழே வீழ்ந்ததில் காயத்துக்குள்ளாகினர்.

அமெரிக்காவின் சாண்டியோகோ நகரைச் சேர்ந்த ஜோனாதன் நார்சிசி கேரின் ஜோடி. இவர்கள் நடுவானில் ராட்சத பலூனில் பறந்தபடி திருமணம் செய்ய முடிவு செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு திருமண ஜோடி உட்பட 13 பேர் பலூனில் ஏறி பறக்க தொடங்கினர். மோதிரம் மாற்றி திருமண உறுதிமொழி எடுக்கும்போது திடீரென காற்று பலமாக வீசியதால் பலூன் தாறுமாறாக பறந்தது.

சிறிது நேரத்தில் ஒரு வீட்டின் தோட்டத்தில் வந்து விழுந்தது. அதில் பயணித்த 13 பேரும் படுகாயம் அடைந்தனர்.

# பாடசாலையில் மைக்ரோ சிப் அனுமதியளித்தது நீதிமன்றம்

நியூயோர்க், ஜன.11

அமெரிக்காவில் பாடசாலைகளில் மாணவர்களின் நடமாட்டத்தைக் கண்டறிய அடையாள அட்டையில் பொருத்தப்பட்டுள்ள 'மைக்ரோ சிப்' நடைமுறைக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அமெரிக்காவின் சில மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் அடையாள அட்டையில் 'மைக்ரோ சிப்' பொருத்தப்பட்டு ஜி.பி.எஸ். தொழில்நுட்ப முறைப்படி மாணவர்களின் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது.

மாணவர்கள் எங்குள்ளனர், அவர்கள் சாப்பிடும் மதிய உணவில், என்னென்ன பதார்த்தங்கள் உள்ளன என்பதெல்லாம் 'மைக்ரோ சிப்' மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த நடைமுறையினால், எங்கள் தனிமை பாதிக்கப்படுகிறது என்று ஆன்ட்ரியா என்ற மாணவி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார்.

இது குறித்து பள்ளி நிர்வாகத்தினர் குறிப்பிடுகையில்,

''அடையாள அட்டையில் நாங்கள் பொருத்தியுள்ள 'மைக்ரோ சிப்' பாடசாலை வளாகத்துக்குள் தான் வேலை செய்யும். மற்றைய நேரங்களில் அடையாள அட்டையை கழற்றி வைத்து விட்டுக் கூடச் செல்லமுடியும்' என்று தெரிவித்தனர்.

வழக்கை விசாரித்த டெக்சாஸ் நீதிமன்ற நீதிபதி ஆர்லேண்டோ கார்சியா,

'பள்ளியில், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள, 'மைக்ரோசிப்' அடையாள அட்டையை அனைத்து மாணவர்களும் அணிந்து வருகின்றனர். ஆன்ட்ரியா மட்டும் எதிர்ப்பது ஏற்க முடியாது. இந்த நடைமுறையை ஆன்ட்ரியா பின்பற்ற வேண்டும்.

இந்த நடைமுறையை பின்பற்றாவிடில் பள்ளியிலிருந்து ஆன்ட்ரியாவை நீக்க நிர்வாகத்துக்கு உரிமை உண்டு.'' என்று தெரிவித்தார்.

## சந்திரனில் புதிதாகப் பள்ளங்கள்

நியூயோர்க், ஜன. 11

பூமியின் துணைக்கிரகமான சந்திரனில் 3 பெரிய பள்ளங்கள் தோன்றியிருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி மையமான நாசா தனது விண்கலத்தின் உதவியுடன் எடுத்துள்ள புகைப்படத்தில் நிலவில் 3 பெரிய பள்ளங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாசா விஞ்ஞானிகள் கூறுகையில்,

''இந்த பள்ளங்கள் எரிகல் மற்றும் வால் நட்சத்திரம் ஆகியவற்றால் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த பள்ளங்களில் தென் மேற்கில் அமைந்த பள்ளம் மிகவும் பெரியதாக உள்ளது, இதன் விட்டம் 180 மீற்றர் ஆகும். இதற்கடுத்து மத்தியில் அமைந்த பள்ளம் 150 மீற்றரும், வடகிழக்கு பகுதியில் அமைந்த பள்ளம் 125 மீற்றரும் என்ற அளவில் உள்ளது. இந்த பள்ளங்கள் அடுத்தடுத்த சில நிமிடங்களில் ஏற்பட்டிருக்ககூடும்'' என்று தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிக்க நினையுங்கள்

(18)

தன்னுடைய மனைவி மும்தாஜுக்கு அழியாத நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென ஷாஜஹான் உறுதி பூண்டார். உலக அதிசயங்களுள் ஒன்றாக கலைக்கோயில் தாஜ்மஹால் உருவாயிற்று.

தன்னுடைய பாடல்கள் சாகாவரம் பெற்றவை என்று பாரதி நம்பினார். இன்றைக்கும் அவருடைய பாடல்கள் மூலை முடுக்கெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

ஹோட்டல் தொழிலாளியாக இருந்த கிருஷ்ணராவ் புகழ் பெற்ற ஹோட்டலை நிறுவ வேண்டும் என்று உறுதி பூண்டார். உட்லண்ட்ஸ் ஹோட்டல்கள் உருப்பெற்றன.

இந்தப் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

சாதனைகள் அனைத்தும் முதலில் எண்ணங்களாகத்தான் வடிவெடுத்திருக்கின்றன. உங்களுக்கு உரிய பாதையினை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டு சாதனை புரிய விரும்பினால், உங்களாலும் சாதிக்க முடியும்.

சிறிய விடயங்களைச் சிந்திக்காதீர்கள்; பெரிதாகத் திட்டமிடுங்கள். நடக்குமா என்று சந்தேகப்படாதீர்கள்; நடக்கும் என்று நம்புங்கள். சாதனை படைப்பவர்கள் என்று எவர் மீதும் முத்திரை குத்தி ஆண்டவன் அவர்களை இந்த உலகுக்கு அனுப்பவில்லை. உங்களைப் போலவும் என்னைப் போலவும் சாதாரண மனிதர்களாகத்தான் அவர்கள் பிறந்தார்கள்.

வாழ்க்கையில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்ட போது அவர்கள் உயர்ந்தார்கள். சாதனைகள் படைத்தார்கள். எந்த முயற்சியும் ஏதோ ஒன்றில்தான் ஆரம்பமாக வேண்டி இருக்கிறது. முயற்சிகள் தொடங்கும் போது சாதனைகள் படிப்படியாக உருவாகின்றன.

பூமியைப் பார்த்துக் கொண்டே நடக்காதீர்கள். உயர்ந்த கோபுரங்களை, நிமிர்ந்து பார்க்கக் கற்றுக் கொள்ளுங்கள். எண்ணங்களுக்குத் தடை போடாதீர்கள். பறவைகள் உயர உயர வானில் பறப்பதைப் போல உங்களுடைய எண்ணங்களும் மேலே மேலே உயர்ந்து செல்லட்டும்.

உங்களுடைய எண்ணங்கள் உயர்கின்ற போது, நீங்களும் உயர்கின்றீர்கள். நீங்கள் உயர்கின்றபோது உங்களுடைய சாதனைகளும் பெரிதாக இருக்கின்றன.

பாதை போட்டபின் பயணத்தைத் தொடங்க தயக்கம் காட்டாதீர்கள். சேர வேண்டிய இடத்தை நிர்ணயித்த பிறகு பயணம் நிற்கக் கூடாது. தடைகள் தோன்றலாம். அவற்றை உங்களால் தாண்ட முடியும் என்று நம்புங்கள்.

நீர் ஓட்டத்துக்குத் தடை ஏற்படுகின்ற போது, புதிய பாதையைக் கண்டுபிடித்து அது ஓடத் தொடங்குகிறது. காற்றுக்குத் தடை ஏற்படும் போது, அது மேலே கிளம்பித் தடையைத் தாண்டுகிறது. இயற்கை சொல்லிக் கொடுக்கும் இந்தப் பாடத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டாமா?

சாதனை புரிகின்றவர்களுக்கு தடை ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. சொல்லப் போனால் தடைகள் சாதனைகளுக்கு தூண்டுகோல்களாகவும் இருந்திருக்கின்றன. உழைப்பால் வெல்ல முடியாத தடை எதுவும் உலகத்தில் இல்லை. சாதனையாளர்களின் வாழ்க்கை இதைத்தான் நமக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறது.

ஒரு மனிதனுக்கு நம்பிக்கையை விட வேறு பெரிய பலம் எதுவும் கிடையாது. உங்களை நீங்கள் நம்புங்கள். உங்களுடைய ஆற்றலில் நம்பிக்கை வையுங்கள். தளராத முயற்சியில் ஈடுபடுங்கள். விளைவுகளுக்குக் காத்திருங்கள். சாதனைகள் நிகழும் அதிசயத்தை பார்ப்பீர்கள்.

சாதனையாளர்களின் வாழ்க்கையைப் படிக்கும் போது கவனமாகப் படியுங்கள். அவர்களது வாழ்க்கைப் பட்டியலில் வெற்றிகளின் எண்ணிக்கைக்குச் சமமாக தோல்விகளும் இருப்பதைக் கவனிப்பீர்கள்.

எந்தச் சாதனையாளரின் வாழ்க்கையும் பளிங்கு நீரோட்டம் போல இருந்ததில்லை. மலையில் ஓடுகின்ற அருவியைப் போலத்தான் அவர்களுடைய வாழ்க்கையும் இருந்திருக்கிறது. மேடு பள்ளங்கள் குறுக்கிட்டு இருக்கின்றன. மேட்டில் இருந்து பள்ளத்தில் நீர் விழுகின்றபோது அதனுடைய சக்தி அதிகமாகிறது.

ஆகவே, வீழ்ச்சி என்பது சக்தியைக் கொடுக்கின்ற ஒன்றாகவும் இருக்கலாம்.ஒவ்வொரு வீழ்ச்சியும் ஓர் எழுச்சிக்குக் காரணமாகிறது. விழுந்த குழந்தை எழுந்து நடப்பதைப் போல நீங்களும் விழும்போது எல்லாம் எழுந்து நிற்கப் பழகிக் கொள்ளுங்கள்.

உங்கள் கவனம் முன்னோக்கியே இருக்கட்டும். திரும்பிப் பார்த்து நேரத்தை வீணாக்காதீர்கள். திரும்பிப் பார்க்கின்ற நேரத்தில் பல அடிகள் நீங்கள் முன்னே சென்று விட முடியும்.

சாதனை என்பது எல்லோருக்குமே சாத்தியமான ஒன்றுதான். இந்த நம்பிக்கையுடன் நீங்கள் செயற்படத் தொடங்குகின்ற மறு விநாடியே முன்னேற்றப் பாதையில் நகரத் தொடங்கி விடுவீர்கள். முன்னோக்கி செல்வதுதான் வாழ்க்கை இயக்கம். பின்னோக்கி செல்வது அல்ல.

உயர்ந்த சிந்தனைகளால் சாதனைகளை உருவாக்குங்கள். சாதனையாளர் பட்டியலில் நீங்களும் இடம் பெறுவீர்கள்.

சபதங்களும், சாதனைகளும்

சபதம் என்று சொல்லுகின்ற போது இந்திய வரலாற்றில் சாணக்கியனின் சபதம் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. நந்த வம்சத்தைப் பூண்டோடு அழிப்பேன் என்று சாணக்கியன் சபதம் செய்கின்றான். சபதத்தை வெற்றிகரமாக முடித்து புதிய வம்சத்தை ஆட்சியில் அமர்த்துகிறான். மௌரிய சாம்ராஜ்யம் உதயமாகிறது.

பி.சி.கணேசன் (தொடரும்)

# இரத்த தானம் செய்வதன் மூலம் ஒருவரின் உடலும் உள்ளமும் ஆரோக்கியமடையும்

## தெல்லிப்பழை வைத்தியசாலை மகப்பேற்று நிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

ஒருவர் இரத்த தானம் செய்வதால் உடல் ரீதியாக எந்தவித பாதிப்புக்களையும் சந்திக்க நேரிடாது. மாறாக இரத்த தானம் செய்வதால் உடலும், உள்ளமும் ஆரோக்கியமானதாக இருக்கும்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் குழந்தைவடிவேல் இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

மனிதனின் விலை மதிக்க முடியாத ஒரு பொக்கிஷமாக இரத்தம் உள்ளது. இதனை நாம் இன்னொருவருக்கு தானம் செய்யும் போது எமது உடல் ஆரோக்கியமாக இருப்பதுடன், இன்னொருவருடைய உயிரைக் காப்பாற்றிய பெருமையும் எம்மை சேருகிறது.

ஓர் உயிரைக் காப்பாற்ற இரத்தம் எந்தளவுக்கு அவசியம் என்பதை நான் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளேன். விபத்து உட்பட பல நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இரத்தம் அவசரமாகத் தேவைப்படும் போது, ஒருவர் இரத்த தானம் செய்வது எந்தளவுக்கு நன்மையைத் தருகிறது என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

இரத்த தானம் செய்வதால் எமக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் எற்படப் போவதில்லை. இதனால் தீங்கு ஏற்படும் என்ற மூட நம்பிக்கையை நாம் எம்மில் இருந்து அகற்ற வேண்டும். இரத்த தானம் செய்வதற்கு நாமாகவே முன்வர வேண்டும்.

குறிப்பாக இளைஞர், யுவதிகள் சமூகத்துக்கு எடுத்துக்காட்டாக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் இரத்த தானம் செய்ய முன் வர வேண்டும். இதன் மூலம் அநாவசியமான முறையில் ஏற்படும் உயிராபத்துக்களையும் எம்மால் தடுக்க முடியும்.

கொடைகளில் சிறந்தது குருதிக் கொடை என்பார்கள். எமது உடலில் இருந்து இன்னொருவருக்கு தானமாக உயிரோடு இருக்கும் போதே கொடுக்கக் கூடிய இந்த இரத்தத்தை நாம் தானம் செய்ய முன் வர வேண்டும்.
- என்றார் (ம-14-86)



மயிலிட்டி ஆர்.சி.ரி.எம்.எஸ்.பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட மயிலிட்டி மக்கள் ஒன்றிய பிரான்ஸ் கிளையின் பிரதிநிதி அ.குணபாலசிங்கம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். (ம)

## பரு.ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபையின் தலைவர் தெரிவு

கெருடாவில், ஜன.11

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபையின் தலைவராக மீண்டும் சிவஸ்ரீ பாலபத்மநாதக் குருக்கள் தெரிவாகியுள்ளார்.

சங்க மண்டபத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் எஸ்.சிவகுமார் முன்னிலையில் தெரிவு இடம்பெற்றது. (ம-253)

## பதவி உயர்வு

கெருடாவில், ஜன.11

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி கிரிஜா வாசுதேவன் வல்வெட்டித்துறை நகர சபையின் செயலாளராக பதவி உயர்வு பெற்று கடந்த 7 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (ம-253)

# வர்த்தகர்களின் நெருக்கடிகளைக் குறைக்க நெகிழ்வுத்தன்மை அவசியம் தேவை

## சாவகச்சேரி கைத்தொழில் மன்றத் தலைவர் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.11

யாழ். மாவட்ட வணிகர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்கு இலங்கை வங்கியினர் வணிகர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் அதிக பற்று போன்றவற்றில் நெகிழ்வுத் தன்மையை உருவாக்கி வணிகர்கள் தொடர்ந்தும் வணிக நடவடிக்கையில் ஈடுபட ஆவன செய்ய வேண்டும்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றத்தலைவர்வ.ஸ்ரீபிரகாஸ் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

வணிகர்களைப் பொறுத்த வரையில் இலங்கை வங்கியின் உதவியால் வணிகத்தில் பெரு வளர்ச்சியை யாழ். மாவட்டத்தில் உருவாக்கினர்.

நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியால் வணிகம் பாதிக்கப்பட்டு பெற்ற கடனையும் மேலதிக பற்றையும் மீளச் செலுத்த பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

வணிக நிலையத்தினதும் வங்கியினதும் கௌரவத்தைக் காப்பாற்ற தனியாரிடம் அதிகளவு வட்டிக்குப் பணம் பெற்று வங்கிக்கு செலுத்துகின்றனர்.

இதன் விளைவாக மாவட்டத்தில் இருந்த பல வணிகர்கள் தமது வணிக செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் இலங்கை வங்கியை முழுமையாக நம்பியுள்ள யாழ். மாவட்ட வணிகர்களின் நலன் கருதி கடும் போக்கை மேற்கொள்ளாமல் நெகிழ்வுத் தன்மையை உருவாக்கினால் வணிகர்கள் வீழ்ந்து போகும் தமது வணிக நடவடிக்கைகளைச் சீர்செய்து வணிக செயற்பாடுகளை மேம்படுத்துவர்.

அண்மையில் யாழ். இலங்கை வங்கி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இலங்கை வங்கித் தலைவர் காமினி விக்கிரமசிங்கவின் இளைப்பாறல் தொடர்பான சேவை நலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்ட வேளையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

வணிகர்கள் தமது வணிக நிலையத்தை மேம்படுத்த வங்கியில் கடன்பெற்று நடத்தி வருகின்றனர்.

பொருள்களின் விலை அதிகரிப்பு, வருமான வீழ்ச்சி ஆகியவற்றால் மக்கள் அத்தியாவசியப் பொருள்கள் கொள்வனவு செய்வதிலும் கணிசமான அளவு மட்டுப்படுத்தியுள்ளனர்.

மக்களின் பங்களிப்பின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் வணிகர்களே. முன்னைய காலத்தில் 50 ஆயிரம் ரூபாவுக்கு வியாபாரம் நடைபெற்ற வணிக நிலையங்களில் 5 ஆயிரம் ரூபாவுக்கும் வியாபாரம் நடைபெறுவதில்லை.

இவற்றைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்ட வணிகர்களுக்கு கைகொடுத்து தூக்கி விட வேண்டிய பொறுப்பு தற்போது இலங்கை வங்கியின் அதிகாரிகளிடமே உள்ளது.-என்றார்.

(ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருநிலப்பரப்பில் சூடு பிடித்திருக்கும் வியாபாரங்கள்....

**முன்பின் தெரியாத ஆயிரம் வணிக முகங்கள் இந்த நிலத்தை நோக்கி நாள்தோறும் படையெடுக்கின்றன.**

■ ஜெரா



இலங்கையின் வடபாகத்திலிருக்கும் வன்னிப் பெருநிலம் தனித்துவமான அடையாளங்களைக் கொண்டது. இனம், மொழி, கலாசாரம், பண்பாடு உள்ளிட்ட வரலாற்று மரபுகளில் இந்தத் தனித்துவத்தைக் கண்டுகொள்ள முடியும். அதைத்தவிர இந்தப் பெருநிலத்துக்கும் தனித்துத் தெரியும் தன்மையுண்டு.

குளங்கள், பெருங்காடுகள், இடையிட்ட பற்றைக் காடுகள், வெளிகள், வறளாத விவசாய நிலம் ஆகியவை அந்த வித்தியாசத்தை வழங்குபவை. ஆனால், இப்போது அவற்றைக் காண்பதரிது. அனைத்தையும் அழித்து, மறைத்து மேலெழும் புதிய பண்பாடு தனித்துவங்களை இழக்கச்செய்து விடுகின்றது. இது திட்டமிட்ட வகையிலான அடையாளம் அழிக்கும் செயற்பாடு என்பதை யாருமே உணராமல் இல்லை. இருந்தும் மௌனவாசம் என்ற புதிய வாழ்க்கை முறை அனைத்து விதமான உரிமை மீறல்களையும், அடையாளம் அழிப்பு சம்பவங்களையும் பார்த்துக் கொண்டிருக்க மட்டுமே செய்கின்றது. அல்லது அபிவிருத்தியின் பெயரால் வரவேற்கச் செய்கின்றது.

### அனைத்தும் வணிகம்

வன்னிப் பெருநிலத்தை நிர்வாணமாக்கும் செயற்பாடுகளில் முதன்மையானதாக மாறியிருப்பது வணிகம். முன்பின் தெரியாத ஆயிரம் வணிக முகங்கள் இந்த நிலத்தை நோக்கி நாள்தோறும் படையெடுக்கின்றன. வடக்கில் இருக்கும் ஒவ்வொரு கிராமத்தின் முகவரியும், பட்டிதொட்டி வீதிகளும் அந்த வணிக வாகனங்களுக்குத் தெரிந்து விடுகின்றன.

அவர்களின் பல்வேறு வகையிலான கவர்ச்சி வார்த்தைகள், இப்போது தான் நிலத்தில் மீளமர்ந்திருப்பவர்களின் மனதை வசீகரப்படுத்தி விடுகின்றன. இலகுகடன், பங்கு பிரிப்பு கடன், பண்டமாற்று கடன் அடிப்படையில் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

கடந்த வருடம் நாற்பது ரூபாவுக்கு அதே மக்களிடம் வாங்கிய இரும்பு, இந்த வருடம் பல ஆயிரம் மடங்கு ரூபா பெறுமதி பெற்ற பொருளாகி மீண்டும் அதே வீடுகளின் முற்றத்துக்கு வந்து நிற்கின்றது. அந்த இரும்புப் பொருளை கடன் அடிப்படையில் பெற்றுவிடுகின்றனர். மீளச் செலுத்துவதற்கான பணத்தை வழங்குவதற்கான கடனை வழங்க வங்கிகள் வாசலில் நிற்கின்றன. ஒவ்வொரு மாத முடிவிலும் வீட்டுக்கு வரும் புதிய உறவுக்காரர்களாக மாறியிருக்கின்றன வணிக முதலைகள். முடிவுபெறா கடனாளிகளை இவை உருவாக்கித் தள்ளுகின்றன. வடக்கில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் கடனற்று வாழ்வதைக் காண்பதரிது.

### பிளாஸ்ரிக் குவிகிற நிலம்

இரும்புக்கு அடுத்த படியாக வடக்குக்கு அதிகம் வந்து சேர்வது பிளாஸ்ரிக் பொருள்கள் தான். ஐந்து ரூபா பெறுமதியில்லாத பொருள்களும் வடக்குக்கு வந்தவுடன் ஐம்பது ரூபா பெறுமதி பெற்று விடுகின்றன. வணிக மாயம் உற்பத்தித் திறன் பற்றிய கேள்வியை மூடி விற்றுத் தீர்க்கின்றது.

சந்தி சந்தியாக எங்கிருந்தோ வந்து குவியும் பிளாஸ்ரிக் பொருள் வியாபாரிகள் இலகுவாக விற்பனைக்கான சந்தையைப் பெற்று விடுகின்றனர். துரிதமாக விருத்தியடைய வேண்டும் என்ற வெறி பலரின் கண்ணை மறைத்து விடுகின்றது. எந்தவித விசாரணையுமின்றி பிளாஸ்ரிக் பொருள்கள் வீடுகளை விழுங்குகின்றன.

### சீனாவின் போனும், ஹங்கேரியின் மெமரிக்காட்டும்

இதற்கு அடுத்த நிலையில் இருப்பவை இலத்திரனியல் பொருள்கள். உணவின்றி வாழலாம். ஆனால், கைத்தொலைபேசி இல்லாமல் இருக்கமுடியாது என்ற அடிப்படை எண்ணம் எப்படியோ அனைவரது மனநிலையிலும் ஆழப்படிய விடப்பட்டிருக்கின்றது. சீனாத் தயாரிப்பிலான கைத்தொலைபேசிகள் வயது வேறுபாடின்றி அனைவரின் கைகளிலும் அலறுகின்றன.

### இதுவரை எங்கிருந்தது இந்த இரசனை?

இவற்றோடு புதிய வடிவிலான இரசனை மோகம் அந்த மக்களைப் பீடித்திருக்கின்றது. இந்திய சினிமாக்கள் மிக குறைந்த விலையில் விற்பனையாகின்றன. 70 ரூபாவில் ஐந்து படம் வாங்கும் வாய்ப்பை புதிய சந்தைகள் வழங்குகின்றன. எந்த நடுச்சாமத்தில் தெருவில் இறங்கினாலும் இடைக்காலச் சோகப்பாடலையும், சிங்களப்பாடலையும் அந்த தொலைபேசிகள் அலறியபடி இருப்பதைக் கேட்கலாம். இதற்கு முதல் இந்த இசை இரசனை எங்கே போனது? இப்போதெல்லாம் சிங்களப் பாடல்கள் தெரியாத வன்னிச் சிறார்களைக் காணவே முடியாது. அதி விரைவான கலாசார மூழ்கடிப்புக்குள் அந்த நிலம் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கண்டுகொள்ள யாருமில்லை.

சின்னவிலையில் கிடைக்கும் சீனாப் போன்களும், ஹங்கேரி மெமரிக் காட்டுகளும் தேவையற்ற அசிங்கங்களை மட்டும் அதிகம் சேமித்து வைத்திருக்கின்றன. இந்த தேவையற்ற அசிங்கங்கள் உலக நடப்பின் எந்தப் பாகத்தையும் அறியாதவர்களுக்கு எப்படி கிடைக்கின்றன?. அந்த நிலத்தை நோக்கிப் படையெடுத்து வரும் வணிக சந்தைகள் தாராளமாக வழங்கிவிட்டுப் போவதாக ஒரு தகவல் உண்டு. எதைக் கொடுத்தாவது அவர்களுடனான உறவை வலுப்படுத்திக் கொண்டாலே, எதிர்கால வணிகம் சிறக்கும் என்ற நோக்கம் இதனையும் கொடுத்துவிட்டுச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

### இப்போது பரபரப்பான விற்பனையில்

இப்போது கடனடிப்படையிலான சூரிய மின்கலம், தொலைக்காட்சி, மற்றும் இதர மின்னியல் உபகரணங்கள் புதிதாக வன்னிக் கடன் சந்தைகளுக்கு வந்திருக்கின்றன. அவற்றையும் வாங்கிக் குவிப்பதற்கான சூடு அதிகரித்திருக்கின்றது. மின்சாரமே இல்லை. ஆனால், ஒவ்வொரு வீடும் தொலைக்காட்சிகளை வாங்குவதற்கான கடனைத் தேடத் தொடங்கியிருக்கின்றன. இந்த வணிகத்தில் வெற்றி கண்டுவிட்டால் அடுத்ததாக மேடைக்கு வரப் போவது மின்பிறப்பாக்கிகளாகத் தான் இருக்கும் என ஊகிக்கலாம். ஏனெனில், அடுத்த தேவை அதை நோக்கியே பயணமாகின்றது.

### தங்கம் கொடுத்து இரும்பு வாங்கினேன் டும்..டும்..டும்

இவ்வாறு அதிகரித்துக் கொண்டே செல்லும் கடன் அந்த மக்களை முற்றாக அடைவு நிலைக்குத் தள்ளப் போகின்றது. பல கிராமங்கள் தள்ளப்பட்டு விட்டன என்றே கூறவேண்டும். 2004 ஆம் ஆண்டிலும் இப்படித் தான் நடந்தது. இரும்புப் பொருள்கள் நாலாபக்கங்களிலும் இருந்து வன்னியை நோக்கி வந்தன. அதுவரை மிதமிஞ்சிய போர்களில் இருந்தும் தேடி வைத்த தேட்டங்கள் இரும்பை, பிளாஸ்ரிக்கைப் பெறுவதற்காக வாரி வழங்கப்பட்டன. அப்போதும் இப்படித்தான். அதிசயமாக மேலெழுந்த தேவை எனும் வாய்திறந்த முதலை கேள்விகளை, பொருள் மீதான விசாரணைகளை இல்லாமலாக்கியது. யாரோ ஓர் இனந்தெரியாத முதலாளிக்கு அப்பாவிச் சனங்களின் வியர்வையும், இரத்தமும் கலந்த உழைப்பு சுகம் வழங்கியது. இறுதியில் இரும்பு கூட மிஞ்சவில்லை. போர் அனைத்தையும் துளையிட்டது. பல இலட்சக் கணக்கான பணத்தைக் கொட்டி வாங்கிக் குவித்த இரும்பின் பெறுமதி வெறும் நாற்பது ரூபாவுக்குள் மட்டுப்படுத்தப்பட்டது. அதுவே, மறுபடியும் அதிக பெறுமதியுடன் அப்பாவிகளின் சந்தைக்கு வந்திருக்கின்றது. எதிலிருந்தும் பாடத்தைக் கற்றுக்கொள்ளாத அம்மக்கள் மீண்டும் இரும்பை சேமிக்க கடனை நம்புகின்றனர். முதற் காலத்தில் சேமிப்பிருந்தது. இப்போது ஏதுமில்லை. போர் அவர்களின் கஜானாக்களைத் தான் முதலில் தின்றது. ஆகவே, இப்போது பொருள் கொள்வனவுக்கான அவர்களின் முதல் தெரிவு கடன்.

### கடனோடு பயணிக்கும் ஆஸ்திரேலியக் கனவு

இந்தக் கடனை எப்படி திருப்பி செலுத்த முடியும்? போரில் மிஞ்சிய பிள்ளைகள் இருக்கின்றனர். ஆஸ்திரேலியா இருக்கின்றது. எப்படியாவது வெளிநாடு போனால் பணம் கூரையை பிய்த்துக் கொண்டு கொட்டும். ஆகவே, வெளிநாட்டுக் கனவு கடனிலிருந்து வீரியம் பெறுகின்றது. திருட்டுத் தனமாக, வணிகர்களோடு வணிகர்களாக களம் நுழையும், சட்ட விரோத வெளிநாட்டு முகவர்கள் பணம் கறந்து விடுகின்றனர்.

மூன்று இலட்சத்தில் கடல் கடக்க வைப்பேன். ஆஸ்திரேலியா போக முடியாவிட்டால், சுற்றுலா விசாவில் மலேசியா அனுப்புவேன் என்ற விளம்பரங்களோடு கள்ளப் பயணங்களை இந்த முகவர்கள் வன்னியில் மேற்கொள்கின்றனர். அவர்களுக்கான ஆள்சேர்ப்பு மிகவும் இலகுவானது. ஏனெனில், அதீதத் தேவையும், அதற்கான கடனும், கட்டாயம் கற்பனைக்கெட்டாத வருமானத்தை ஒவ்வொருவரிடமும் கோரி நிற்கின்றன. ஆகவே, ஆஸ்திரேலியா பயணம் இன்றியமையாததாகின்றது. இதிலும் உழைப்பது யார் என்பது யாவரும் அறிந்ததே. அந்த வருமானமும் தமிழர்களுக்குரியதாக இல்லை.

இப்போது வன்னியின் பண்பாட்டுத் தொழிலான விவசாயமும் அந்த மக்களிடம் இல்லை. பதவியாப் பக்கத்திலிருந்து வயல்கள் அரிக்கப்பட்டு வருகின்றன. அதிக வயல்கள் மந்தை, மாடுகள் மேயும் நிலங்களாக மாறியுள்ளன.

விவசாயத்தை வெறுக்கும் தலைமுறை உருவாகிவிட்டது. விவசாய நிலங்களில் கட்டடங்கள் முளைத்துவருகின்றன. கடலும் அந்த மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டு வருகின்றது. செல்வம் கொழிக்கும் முல்லைத் தீவுக் கடலின் பெரும்பாகம் இப்போது அந்த மக்களிடம் இல்லை.

ஆகவே, அனைத்தையும் மறந்த தலைமுறை ஆஸ்திரேலியாவுக்கும், இன்ன பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் தொடங்கியிருக்கின்றது. அதிகளவிலான ஆண்கள் வன்னியிலிருந்து வெளிநாடுகளுக்கு புலம்பெயரத் தொடங்கியிருக்கின்றனர். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள், தலைமுறை வன்னிப் பெருநிலத்தவராகும் வாய்ப்பு மிக மிகக் குறைவாகியிருக்கும்.

மறுபுறத்தில் வன்னியில் நில, மற்றும் பண்பாட்டு அடிப்படையில் சிங்களமயமாக்கல் அதிகரித்திருக்கின்றது. படையினரும், சிங்கள வணிகரும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் பரவலடைந்திருக்கின்றன. ஆண்கள் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணமாகும் அதே வேளை பெண்கள் சிங்கள கலாசாரத்துக்குள் உள்வாங்கப்படுகின்றனர். என்றுமில்லாத ஆச்சரியமாக நூறு பெண்கள் அண்மையில் படையில் இணைந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹலால் மாயை

■ தமிழில்: வி.எஸ்.ரி.
மூலம்- மஹ்பிம

**தென்பகுதியில் பண்டாரநாயக்கா பரம்பரையினர் பௌத்த மதம், சுதேச வைத்தியம், ஆசிரியத்துவம், விவசாயம், தொழிலாளர் என்ற பஞ்ச மகா சக்திகளின் பெயரை முன்வைத்து சிங்கள இனவாதச் சிந்தனையைத் தூண்டி விட்டு பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் பிரபல்யம் தேடிக் கொண்டனர்.**

பாகிஸ்தான் பொது மக்களில் பாதிப்பேர் வரையில் உடலில் ''அயடீன்'' சத்துக்குறைவால் உடல்நலப் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். ஆயினும் பாகிஸ்தான் பொது மக்கள் ''அயடீன்'' கலந்த உப்பை உணவில் சேர்த்துக் கொள்வதில்லை என்பது செய்தி.

செய்தி என்னமோ உண்மை தான். ஆனால் அயடீன் கலந்த உப்பை உணவில் சேர்த்துக் கொள்வதால் பெண்கள் உடல் நலக்குறைவுக்கு உள்ளாக நேர்வதாக அவர்கள் நம்புவதே அதற்கான காரணம். அயடீன் சத்துக் குறைபாட்டால் சிரமமுறும் பெரும்பாலான பெண்களுக்கு அச் சத்துக் குறைபாடு காரணமாக கழுத்துப் பகுதியில் கழலைகள் ஏற்படுவதுடன், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் மந்த புத்தி கொண்டவர்களாக வளர நேரிடுகிறது. ஆனால் அயடீன் கலந்த உப்பை உணவில் சேர்த்துக் கொள்வதால் அத்தகையோர் நலக்குறைவுக்கு உட்படுத்துவதாக பொது மக்கள் மத்தியில் ஒரு அபிப்பிராயத்தை உருவாக்குவதில் முன்னின்று செயற்படுவோர் அந்த நாட்டின் மதத் தலைவர்களே என்பதுதான் ஆச்சரியம் தரும் விடயமாகும். ''யூனிசெப்'' போன்ற ஐ.நா. அமைப்புகளும், மேற்குலக நாட்டினரும் எமது நாட்டுப் பொது மக்களை ''அயடீன்'' உட்கொள்ள வைக்க முயல்வதற்கான காரணமென்ன?'' என்று அந்த மதத் தலைவர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர். இது சர்வதேச நாடுகளின் ஒரு சதியே என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். எமது நாட்டுப் பெண்களை அயடீன் உண்ண வைத்து அதன்மூலம் அவர்களை நோயாளிகளாக ஆக்குவதே மேற்குலக நாடுகளின் திட்டம் என்பது அவர்களது நிலைப்பாடு. பாகிஸ்தானின் மதத் தலைவர்கள் அந்த நாட்டுப் பொது மக்களது சிந்தனையைக் கட்டுப்படுத்தித் திசை திருப்பவதற்கான பொருத்தமான உதாரணமே இது.

### பொய்யைப் புகட்டுவதன் ஊடாகப்பொது மக்களது சிந்திக்கும் திறனைக் கட்டுப்படுத்தல்

ஒரு நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால் அல்லது தமது அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் பொது மக்களது சிந்தனையைத் தமது கொள்கை மீது ஈர்ப்பு ஏற்பட வைப்பதன் மூலம் திசைதிருப்பிக் கொள்ளுதல் அவசியமாகிறது. தமது கொள்கை மீது பொதுமக்களுக்கு ஈர்ப்பை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தமது தரப்பினதோ, கட்சியினதோ நிலைப்பாட்டை பொது மக்கள் மனங்களில் நிலை நிறுத்தி, தாம் காட்டும் வழியில் பொதுமக்களைப் பயணிக்க வைக்கும் சூட்சும உத்தியே அது. உலக வரலாற்றில் சகல மதத் தலைவர்களும் மேற்குறிப்பிட்ட விதத்திலான அணுகுமுறையைக் கடைக் கொண்டு தத்தமது நாட்டுப் பொது மக்களது சிந்தனையைத் திசை திருப்பியிருக்கிறார்கள். அரசர்களது ஆட்சிக் காலத்திலிருந்தே இத்தகைய அணுகுமுறை தொடர்ந்து கடைக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. பிற் காலத்தில் துவேஷ உணர்வுடனான கடும்கோட்பாட்டு ரீதியில். இனவாதச் சிந்தனையை நாட்டு மக்கள் மத்தியில் ஊட்டி வெற்றி கண்ட தரப்பொன்று ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லர் மற்றும் அவரது நாஸிக் கட்சியாகும். அன்று தொழில்நுட்ப ரீதியில், கல்வி அறிவு ரீதியில் மற்றும் குடிசார் சுதந்திர ரீதியில் எம்மை விட பெருமளவில் முன்னேற்றம் கண்டிருந்த ஜேர்மனி நாட்டு மக்களே ஹிட்லரின் வர்க்கவாத சிந்தனை நிலைப்பாட்டால் ஈர்க்கப்பட்டார்களானால் எம்மைப் போன்ற நலிவான குடிசார் சமூகத்தை அத்தகையதொரு வர்க்கவாதச் சிந்தனையால் கவர்ந்திருப்பதொன்றும் சிரமமான காரியமல்லவே?

எமது நாட்டிலும் இத்தகைய வர்க்கவாத, இனவாத சிந்தனையூடாகவே அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்டமை வரலாறு. நாட்டின் வட பகுதியில் தமிழ்த் தலைவர்கள் சிங்கள விரோதக் கொள்கையை முன்வைத்து ஐம்பதுக்கு ஐம்பது வீத அதிகாரத்தைக் கோரி நின்ற அதேவேளை தென் பகுதியில் பண்டாரநாயக்கா பரம்பரையினர் பௌத்த மதம், சுதேச வைத்தியம், ஆசிரியத்துவம், விவசாயம், தொழிலாளர் என்ற பஞ்ச மகா சக்திகளின் பெயரை முன்வைத்து சிங்கள இனவாதச் சிந்தனையைத் தூண்டி விட்டு பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் பிரபல்யம் தேடிக் கொண்டனர். இது ஒரு விதத்தில் சிங்கள பௌத்த அதிகாரச் சிந்தனை எனக் கொள்ளத்தக்கது. இந்தப் பஞ்ச மகா தரப்புகளூடாக சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள இனவாத, பௌத்த மதவாத சிந்தனை ஊட்டி வளர்க்கப்பட்டது. அதன் பிரதிபலனை இந்த நாடு பல தசாப்த கால போரின் மூலம் அனுபவிக்க நேர்ந்தது.

### தற்போது தலைதூக்கியுள்ள ஹலால் மாயை

அன்று எமது சிங்கள அரசியல் வாதிகளாலும் பௌத்த மதத் தலைவர்களாலும் ஊட்டி வளர்க்கப்பட்ட தமிழர் விரோதச் சிந்தனை, இன்று முஸ்லிம் இனத்தவர்கள் மீதும் அவர்களது இஸ்லாம் மதத்தின் மீதுமான விரோதச் சிந்தனையாக மாற்றம் கண்டுள்ளது. ஆரம்பத்தில் இது மாடுகளைக் கொல்வதற்கு எதிரான எதிர்ப்பாகவே ஆரம்பிக்கப்பட்டது. அது மாடுகள் மீதான காருண்ய உணர்வு காரணமாக உருவானதொன்றல்ல. மாடுகள் மீதான காருண்யம் இருக்குமானால் மாடுகளுக்குத் தீனி போட்டுப் போசித்து வளர்த்து தமது காருண்ய உணர்வை வெளிப்படுத்தியிருக்கலாமே? மாடுகளைக் கொல்வதை முன்னிலைப்படுத்தி முஸ்லிம்கள் மீதான விரோதப் போக்கே தூண்டப்படுகிறது. முஸ்லிம்கள் பெருமளவில் மாட்டிறைச்சியை உணவுக்காகப் பயன்படுத்துவது வழக்கம். ஆரம்பத்தில் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டு வந்த முஸ்லிம் இனத்தவர் மீதான குரோதம் தற்போது வெளிப்படையாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. முஸ்லிம்களது வர்த்தக நிலையங்களில் பொருள்கள் வாங்க வேண்டாமென பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. இனவாத போக்குடைய பௌத்த துறவிகளில் ஒரு சாரார் முஸ்லிம் மக்களது சனத்தொகை பெருமளவில் அதிகரித்து வருவதாக வெளிப்படையாகவே கருத்து வெளிப்படுத்தி வருகின்றனர். இத்தகைய துவேஷக் கருத்து வெளிப்பாடுகள் சிங்களப் பெண்கள் குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறையைப் பின்பற்றுவதற்கு இடமளிக்காத அளவுக்குத் தீவிரமடைந்துள்ளது. பௌத்த மதத்தைப் பாதுகாக்கப் புறப்பட்டிருக்கும் பௌத்த மதகுருமார் தரப்பு சிங்கள பௌத்தர்களின் தொகை குறைவடைந்து வருவதாக பொய்ப் பிரசாரம் மேற்கொள்ளத் தலைப்பட்டுள்ளது.

### சிங்கள மக்கள் தொகை குறைவடைகின்றதா?

அன்று 1912 ஆம் ஆண்டளவில் நாட்டின் சிங்கள பௌத்தர்கள் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 67 சதவீதமானவர்களாக இருந்துள்ளனர். 2001 ஆம் ஆண்டில் அந்தத் தொகை 76 சதவீதமாக அதிகரித்தது. அதே வேளை அந்த ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்துக்கள் 7.8 வீதமாகவும் முஸ்லிம்கள் 8.5 வீதமாகவும் இருந்துள்ளனர். இதிலிருந்து சிங்கள பௌத்தர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டு வருகிறது என்ற கூற்று பொய்யானதொன்று என்பது நிரூபணமாகிறதல்லவா? கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, மாவட்ட மட்ட சனத்தொகையில் அதிகரிப்பு காணப்படுகிறது. ஒரு வீதமோ, அதற்குக் கூடிய வீதமான அதிகரிப்பு என்ற வகையில் அநுராதபுரம், மொனராகலை, பொலனறுவை, குருநாகல் ஆகிய மாவட்டங்கள் முன்னிலை வகிக்கின்றன. இந்தமாவட்டங்களில்வாழ்வோரில் பெரும்பான்மையோர் சிங்கள பௌத்தர்களே. முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டங்களான அம்பாறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் முறையே 0.81 மற்றும் 0.66 வீதம் மட்டுமே.

சிங்கள மக்களது எண்ணங்களைத் தமது பக்கம் திருப்புவதற்கு எத்தனிக்கும், சிங்கள பௌத்தர்களுக்காக வக்காலத்து வாங்கும் தரப்புக்கள் சிங்கள மக்களது எண்ணங்களைத் தவறான பாதையில் இட்டுச் செல்ல முயல்வது இதிலிருந்து புரிகிறதல்லவா?

### மதரீதியிலான கடுங்கோட்பாடு

மத ரீதியிலான கடுங்கோட்பாட்டு நிலைப்பாடு இன்று நேற்று உருவான ஒன்றல்ல. யூதர்கள் தனித் தெய்வ வழிபாட்டு முறையைக் கடைக்கொண்ட காலத்தின் பின்னர் எகிப்து கைப்பற்றப்பட்டதும் மதங்கள் மத்தியில் பிளவுகள் தோன்றின. 16 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் மதரீதியிலான போர் இடம்பெற்றது. இதன் காரணமாக கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமிய மதங்கள் பல பிரிவுகளாகப் பிளவுண்டன. இதன் பயனாக மத ரீதியிலான கடுங்கோட்பாட்டு நிலை தோற்றம் பெற்றது.

ஒரு யூதனாக இருக்க வேண்டுமானால் கீபுறு மொழி பேசியாக வேண்டி நேர்ந்தது. ஒரு கிறிஸ்தவனாக இருக்க வேண்டுமானால் தேவாலயத்தில் போதிக்கப்படும் அனைத்தையும் நம்பி அதன்படி நடக்க வேண்டியிருந்தது.

அன்று ஐரோப்பாவில் கத்தோலிக்க விசாரணைச்சபை மத நம்பிக்கையை மீறியோருக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. இன்று இஸ்லாமியர்கள் தமக்க வெளி உலக அச்சுறுத்தல் இருப்பதாக எண்ணுகின்றனர். அதனால் அவர்கள் மத ரீதியில் கடுங்கோட்பாட்டாளர்களாக நடந்து கொள்கின்றனர். அத்தகைய அவர்களது கடுங்கோட்பாட்டு நிலைப்பாடு, ஏனைய மதத்தவர்களை இஸ்லாமிய மதத்தின்மீது கடுங்கோட்பாடு நோக்குடன் பார்க்க வைக்கிறது. இஸ்லாம் மதம் கடும்கோட்பாடுடையதென அவர்கள் கூறுவதில் உண்மையேதும் கிடையாது. ஆனால் இஸ்லாமிய தர்மத்தை நிலை நிறுத்துவதற்காக கடுங்கோட்பாடு நிலைப்பாட்டில் செயற்படும் குழுக்களும் இல்லாமலில்லை.

### பௌத்த தர்மத்தின் குறிக்கோள்

பௌத்த தர்மம் ஒரு போதும் கடும்கோட்பாட்டுப் போக்குடையதல்ல.அது நடுவுநிலைக் கோட்பாட்டைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது. அத்தகைய அடிப்படைக் கோட்பாடுடைய ஒரு மதத்தினர் கடுங்கோட்பாட்டு ரீதியில் செயற்பட இயலாது. பௌத்த மதம் உலகின் பல மற்றதொரு மதமாக இருப்பதற்கான காரணம், ஒரு வேளை அதுவாக இருக்கலாம். இலங்கையில் பௌத்த மதத்துக்கு கிறிஸ்தவ மதத்தாலோ, இஸ்லாம் மதத்துக்கு அச்சுறுத்தல் எதுவும் ஏற்படப்போவதில்லை. மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் மூலம் இந்த உண்மை தெளிவாகிறது. ஆனால் தற்போது பௌத்தமதத்திற்கு அச்சுறுத்தல் நிலைஒரு விதத்தில் உருவாகியுள்ளது. அது பௌத்தமதத்தைப் பாதுகாக்கப் போவதாக புறப்பட்டிருக்கும் இத்தகைய கடுங்கோட்பாட்டுப் பௌத்தர்கள் தரப்பாலேயே உருவாக்கப்பட்டுள்ளது. அத்தரப்பினரே பொய்களின் சிஷ்டியாளர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனகர் கேட்ட கேள்வி

ஒருவர் ஒரு நாட்டுக்கு அரசராகவும் இருந்து கொண்டு, அதே சமயத்தில் ஞானியாகவும் இருப்பதென்பது சாத்தியமான விடயமா? அது முடியக்கூடிய காரியமா? முடியும் ! அதில் சந்தேகமே வேண்டாம். ஏனெனில் ஜனக மன்னர் அப்படித்தான் இருந்தார். ஜனக மன்னர் ஞானியாகவும் விளங்கியதற்குக் காரணமாக இருந்தவர் ஒரு முனிவர். அவர் தான் யாக்ஞவல்கியர்.

உபநிஷதச் சிந்தனைகளைக் கொண்ட பெரிய ஒரு வேதாந்தியாக யாக்ஞவல்கிய முனிவர் விளங்கினார். ஜனக மன்னர் அடிக்கடி யாக்ஞவல்கியரைச் சந்தித்துப் பேசுவது வழக்கம்.

அப்போது மன்னர் கேட்கும் நுட்பமான கேள்விகளுக்கெல்லாம் முனிவர் பதில் சொல்வார். இது போன்ற தமது பல உரையாடல்களின் மூலம் உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களை யாக்ஞவல்கியர் உலக மக்களுக்கு வழங்கியிருக்கிறார்.

ஒரு சமயம் ஜனகரும் முனிவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜனக மன்னர் , '' மகரிஷியே ! வெளிச்சம் வந்தால் தான் மனிதனுக்கு எல்லாமே விளங்குகிறது. அந்த வெளிச்சத்துக்கு உரிய மூலம் எங்கே இருக்கிறது? என்று வினவினார்.

'' சூரியன் உதித்தவுடன் வெளிச்சம் வருகிறது. அதன் உதவியால் மனிதன் தன் முன்னால் இருப்பது என்ன என்பதைத் தெரிந்து கொள்கிறான் என்று முனிவர் கூறினார். அதற்கு ஜனகர் ,' சரி முனிவரே! பகலில் சூரியன் இருக்கிறான்.... அதனால் அந்த வெளிச்சத்தின் உதவியால் எல்லாச் செயல்களும் நடைபெறுகின்றன. ஆனால் சூரியன் மறைந்த பின்னர் இரவு வேளையில் மனிதன் எந்த ஒளியின் உதவியால் செயற்படுகிறான்? 'என்று கேட்டார்.

அதற்கு முனிவர், இரவில் சூரியன் இல்லையென்றாலும் சந்திரன் மூலமாகக் கிடைக்கும் ஒளி இருக்கிறது அல்லவா? அதன் உதவியால் இரவில் மனிதன் செயற்படுகிறான் 'என்றார்.

ஜனகர் அத்துடன் விடுவதாயில்லை. மறுபடியும் கேட்டார். 'சூரியன்,சந்திரன் ஆகிய இரண்டுமே மறைந்திருக்கும் நேரங்களில் மனிதன் எந்த ஒளியின் உதவியால் இயங்குகிறான்?' என்று கேட்டார்.

அதற்கு யாக்ஞவல்கியர், 'சூரியன்- சந்திரன் ஆகிய இரண்டுமே மறைந்திருக்கும் நேரத்தில் பூமியில் உள்ள நெருப்பின் உதவியால் வெளிச்சத்தை உண்டாக்கி மனிதன் செயல்படுகிறான்.''

உடனே ஜனகர் தமது அடுத்த கேள்வியைக் கேட்டார்.' சூரியன்,சந்திரன்,அக்கினி ஆகிய இந்த மூன்றுமே இல்லாத நேரங்களில் மனிதனுக்கு எந்த ஒளி உதவுகிறது?'


யாக்ஞவல்கியர்: ' அரசே ! சூரியன் - சந்திரன் - அக்னி ஆகிய மூன்றும் இல்லாத நேரத்தில் வாக்கிலிருந்து வெளிச்சம் உண்டாகிறது. அதைப் பயன்படுத்தி மனிதன் இயங்குகிறான்.

(வாக்கிலிருந்து வெளிச்சம் என்பதற்கு இங்கே ஒரு சிறிய விளக்கம் தேவைப்படுகிறது. அதாவது இருட்டான ஓர் அறையில் சிலபேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.. பேச்சு மூலமாகக் கிடைக்கும் கருத்து இருக்கிறது அல்லவா? அந்தக் கருத்தின் ஒளியைக் கொண்டு மனிதகுலம் இயங்குகிறது. அல்லது இருட்டில் ,யாரோ ஒருவர் வருவது போல் தெரிகிறது. வருவது யார்? ''என்று கேட்கின்றோம். வருபவர் '' நான்தான் ராமன்'' என்று சொல்கிறார். அவர் வாக்கிலிருந்து வெளிவந்த சொற்களைக் கொண்டு நாம் விளக்கம் பெறுகிறோம். அதாவது, இப்போது ஸ்தூல ஒளி சூட்சும ஒளியாக வளர்ந்து வழி காட்டுகிறது.)

இவ்வளவு சொன்ன பிறகும் ஜனகர் மேலும் ஒரு கேள்வியைத் தொடுத்தார் : ''மகரிஷியே! சூரியனும் இல்லை! சந்திரனும் இல்லை, அக்கினியும் இல்லை. வாக்கும் இல்லை! அதாவது பேச்சுக்கும் இடமில்லை. அந்த நிலையில் மனிதன் இயங்குவதற்கு எந்த ஒளி உதவியாக இருக்கிறது?''

இதற்கு மேலும் யாக்ஞவல்கியர் ஜனகனின் உண்மையை அறிந்து கொள்ளும் ஆவலைச் சோதிக்க விரும்பவில்லை. தாம் சொல்லும் கருத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவநிலையில் ஜனகர் இருக்கிறார் என்பதை அவர் புரிந்து கொண்டார். அதாவது , ஸ்தூலமாகச் சொல்வதிலிருந்து இன்னும் ஆழமாகப்போக வேண்டும். சூட்சுமப் பொருளையும் காரண பொருளையும் யாக்ஞவல்கியர் இப்போது நேரிடையாக விளக்க முற்பட்டார்.

'' அரசே ! ஆன்மாவின் ஒளிதான் உண்மையான ஒளி. அது ஒன்றே மனிதன் இயங்குவதற்கு உதவியாக உள்ளது. அதுதான் 'ஞானம்'. மற்ற ஒளியெல்லாம் உலகத்திலுள்ள பொருள்களை மட்டும் தான் காட்டும். அந்த ஒளிகளால் ஞானத்தைக்காட்ட இயலாது. சூரிய வெளிச்சத்தை வைத்துக் கொண்டு ஞானம் எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டுபிடிக்க முடியுமா கடவுளுக்கு கற்பூரம் காட்டும் பழக்கம் உண்டு. ஆனால் கற்பூரத்தினால் கடவுளைக் காட்ட முடியாது. சூரியன்- சந்திரன்? நெருப்பு, சொல், உயிர் ஆக இப்படியிருக்கும் ஐந்தாவது ஒளியே ஆன்மா'' என்று யாக்ஞவல்கியர் விளக்கம் தந்தார்.



இந்த ஆன்மாவுக்கும் ஆன்மாவாக பரமாத்மா விளங்குகிறது. இதையே கடவுள் என்றும், அருட்பெருஞ்சோதி என்றும் போற்றுகின்றோம்.இறைவன் எனப்படும் இந்த பரமாத்மஜோதியை உணர்ந்து கொள்வது அவ்வளவு சுலபமல்ல. '' மனிதன் உலகில் செய்யக்கூடிய ஒப்பற்ற காரியம் அது ஒன்றே ஒன்றுதான்'' என்ற பல விதங்களிலும் ஆராய்ந்து எமக்குத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சிறுப்பிட்டி ஜனசக்தி ச.ச. நிலையம்



(கடந்தவாரத்தொடர்ச்சி.....)

■ ஞானி

கல்வியிலும், பொருளாதாரத்திலும், பின் தங்கிய கிராமமாக இருந்து வந்த சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி கிராமம், ஜனசக்தி சனசமூக நிலையத்தின் அயராத பணி முன்னெடுப்புக்கள் மூலம் படி நிலையாக ஆண்டு தோறும் முன்னேறி வருகின்றது. தற்பொழுது கிராமத்தின் வளர்ச்சி சராசரி நிலைக்குக் குறையாத நிலைக்கு மாறியிருப்பதோடு, பின் தங்கிய கிராமம் என்று கூறுவதற்கான அடையாளங்கள் குறிகாட்டிகள் முற்றாக மாறியுள்ளன.

கல்வியால் முன்னேற முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு ஜனசக்தி சனசமூக நிலையத்தின் வழிப்படுத்தலில் இலவச ஆங்கில வகுப்புகள், இலவச கணினிக் கல்வி போதனை வகுப்பு ரீதியாக மேலதிக வகுப்புக்கள், முதியோர் கல்வி முன்னெடுப்பு, உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டும் ஊக்குவிப்பும் வழங்கிக் கௌரவித்தல் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களைக் கண்காணித்தல், பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களுக்கான கல்வி, வேலைத்திட்டம் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. ஜனசக்தி பாலர் முன் பள்ளிக்கு ஊடாக கல்விக்கான அடித்தளமும் ஆரோக்கியமான முறையில் இடப்படுகின்றது. சனசமூக நிலைய வளவில் பாலர் முன்பள்ளி செயற்படுகின்றது. பாலர் முன்பள்ளியில் ஐம்பது சிறார்கள் வரை கல்வி பயில்கின்றனர். முன்பள்ளிச் சிறார்களுக்கு சீருடை, கல்வி போதிக்கும் ஆசியர்களுக்கான கொடுப்பனவு என்பன திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. சிறுவர்களுக்கான சத்து உணவு வழங்கல், பாலர் முன் பள்ளியின் செயற்பாடு தொடர்பான மேற்பார்வை கண்காணிப்பு என்பனவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் கல்வி நடவடிக்கையை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் மேற்பார்வை, செய்து வருவதோடு, ஆண்டுதோறும் வருடத் தொடக்கத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் கற்றல் துணைச் சாதனங்கள் இலவசமாக வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த வகையில் '' கல்வியில் வறுமைக்கு இடமில்லை'' '' கல்விக்கான வளவசதிகள் தாராளம்'' என்ற நிலையில் கல்வி முன்னெடுப்புக்கள், உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கல்வி விடயத்தில் மூத்த பிரசைகளும் இளைய தலைமுறையினரும் ஒன்றுபட்ட சிந்தனையோடு செயற்பட்டு வருகின்றனர்.

> *கிராம மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டதை [2010-04-01] அடுத்து சனசமூக நிலையத்துக்கான கட்டடத் தொகுதி மாடிக்கட்டடமாக மறு சீரமைப்பு செய்யப்பட்டிருப்பதோடு குடிதண்ணீர் தாங்கி மற்றும் அமைப்புகள் நிர்மாணிக்*

கிராம மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்டதை (2010-04-01) அடுத்து சனசமூக நிலையத்துக்கான கட்டடத் தொகுதி மாடிக்கட்டடமாக மறு சீரமைப்புச் செய்யப்பட்டிருப்பதோடு குடிதண்ணீர் தாங்கி மற்றும் அமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மீள் எழுச்சித் திட்ட வேலைகளுக்கு ஒவ்வொரு குடும்பமும் தங்களால் இயன்றளவு நிதி உதவியையும், உடல் உழைப்பையும் வழங்கி வேலைத் திட்டங்களைத் திட்டமிட்ட முறையில் நிறைவு செய்து வருகின்றனர். இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாராட்டி இருப்பதோடு யாழ். மாவட்டத்தில் '' மீள் எழுச்சித் திட்டத்தில் முதன் நிலை கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மீள் எழுச்சித் திட்டத்தில் மாவட்ட நிலையிலான நிகழ்வுகள் ஜனசக்தி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றன.

2012 -11-17 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் உலகவங்கி பணிப்பாளர், உலக வங்கிக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதி மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். 4 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய பந்தரில் கண்காட்சி உள்ளிட்ட நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்வில் கலந்து கொண்ட அதிகாரிகள் முன்னிலையில் ஜனசக்தி சன சமூக நிலையம் முன் வைத்த கோரிக்கையை அடுத்து (யாழ்ப்பாணம்-அச்சுவேலி) இராச வீதியில் இருந்து கிராமத்துக்கு வரும் விவசாய வீதியைத் தார் வீதியாக திருத்தி அமைப்பதற்கு 26 லட்சம் ரூபா வழங்கப்பட்டு வீதி திருத்த வேலைக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப் பட்டுள்ளது.

ஜனசக்தி சனசமூக நிலையம் 1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 திகதி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கிராமத்தில் வளர்ச்சிப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றது. சனசமூக நிலையத்தை தாபித்து கிராம மக்களை வழிப்படுத்தியவர்கள் என்ற வகையில் வை.கந்தசாமி, வெ.சபாரத்தினம் என்போரின் பங்கு பணி இன்றும் பசுமையுடன் கிராம மக்களினால் நினைவு கூரப்படுகின்றது.

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர்களாக இருந்து உழைத்தவர்கள் என்ற வகையில் காலஞ்சென்றவர்களான வெ.சபாரத்தினம் க.வைத்தி, சி.வல்லி, சி.சின்னத்தம்பி மற்றும் சி.துரை, செ.தியாகு சி.வைத்திலிங்கம், வை.மாணிக்கம், ந.தம்பித்துரை, க.தம்பிஐயா, பா.தரு மராசா, க.தங்கராசா, கி.ரவீந் திரன், மா.மனோராசா சி.பாஸ்கர், வ.கிருஷ்ணகுமார், கு.சுதாகரன் ஆகியோரின் பணி முன்னெடுப்புக்கள் நன்றியறிதலோடு நினைவு கூரப்படுவதோடு முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகின்றன. தற்பொழுது தலைவராக து.சுகிர்தனும் செயலாளராக சி.இந்துநேசனும்,நிர்வாகக் குழுவினரும் காலமாற்றத்துக்கு ஏற்ப சனசமூக பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சனசமூக நிலையத்தின் பணி முன்னெடுப்புகள் ஊடாக ஜனசக்தி சமூகத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் நன்றியறிதலோடு நினைவு கூரப்படுகின்றனர். நிலையத்தின் ஸ்தாபிதத்துக்கு அயராது உழைத்து ஆடி அமாவாசை தினத்தில் காலமான வை. கந்தசாமியின் நினைவு நாள் ஆண்டு தோறும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. அத்துடன் நிலையத்தின் நிர்வாகிகளாக இருந்து அயராது உழைத்து மறைந்தவர்களின் நினைவு தினமும், ஆடி அமாவாசை தினத்தில் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'திவிநெகும' சட்டத்தை ஆதரித்து மக்களை ஏமாற்றியது மு.காங்.

## கூட்டமைப்பின் கிழக்கு உறுப்பினர்கள் குற்றச்சாட்டு



மஹிந்த அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முண்டுகொடுக்கப்போகின்றதா? அல்லது விழித்தெழப் போகின்றதா? இந்தக் கேள்விக்கு ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதில் கூற வேண்டும்.



மட்டக்களப்பு,ஜன.11

தமிழ், முஸ்லிம் மக்களை ஏமாற்றி மஹிந்த அரசுக்கு முண்டு கொடுத்திருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நாடாளுமன்றில் நிறைவேறிய 'திவிநெகும' சட்டத்துக்கு ஆதரவளித்து சிறுபான்மை இனத்தவர்களின் வயிற்றில் அடித்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

'திவிநெகும' சட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு அளித்த அடுத்த நாளே அநுராதபுரம், மல்வத்து ஓயா பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்று சிங்களவர்களால் திட்டமிட்டு உடைக்கப்பட்டுள்ளது. ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினரோ பதவி, சொகுசு வாழ்க்கைகளைக் கருத்தில்கொண்டு அரசுக்கு முண்டுகொடுத்துக் கொண்டிருக்கின்றனர்; மௌனிகளாக உள்ளனர்.

முன்னரும் பல பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டும், முஸ்லிம் மக்கள் மீது பல அராஜகங்கள் கட்டவிழ்த்தும் விடப்பட்டன. எனினும் கிழக்கு மாகாணசபையில் மஹிந்த அரசு ஆட்சியமைக்க ஆதரவளித்தது முஸ்லிம் காங்கிரஸ். அதற்குத் தமிழ், முஸ்லிம் மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். ஆனால், மு.கா. அதைக் கவனத்தில் எடுக்காமல் இருந்தது.

இந்தநிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் நிறைவேறிய, மாகாண சபை அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் 'திவிநெகும' சட்டத்துக்கு ஆதரவளித்துள்ளது முஸ்லிம் காங்கிரஸ்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை அநுராதபுரம், மல்வத்துஓயா பகுதியில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்று சிங்களவர்களால் திட்டமிட்டு உடைக்கப்பட்டுள்ளது.

எனவே மஹிந்த அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முண்டு கொடுக்கப்போகின்றதா? அல்லது விழித்தெழப்போகின்றதா? இந்தக் கேள்விக்கு ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பதில் கூற வேண்டும். இதேவேளை அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லிம் சகோதர மக்களைக் கைவிட்டுவிட்டு தமிழர் ஒருபோதும் தீர்வைப் பெற மாட்டார்கள்.- என்றனர். (ச-சி)

## திருமலை தனியார் பஸ் வேலைநிறுத்தம் முடிவு

திருகோணமலை,ஜன.11

கடந்த மூன்று நாள்களாக நீடித்த திருகோணமலை தனியார் பஸ் வேலைநிறுத்தம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முடிவுக்கு வந்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நடத்திய பேச்சை அடுத்து, திருகோணமலை மாவட்ட தனியார் பஸ் சங்கம் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பஸ்களின் கூட்டு நேரசூசிப்படி பஸ்சேவை நடத்தப்படும் வரை தனித்தனியாக பஸ்சேவை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தலைவர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நடத்திய பேச்சையடுத்தே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

திருமலை தனியார் பஸ் வேலை நிறுத்தம் கடந்த 6ஆம் திகதி முதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மின்கம்பத்துடன் பஸ் மோதியது கடற்படையினர் உயிர் தப்பினர்

அம்பாறை,ஜன.11

அம்பாறை, பாணமையில் இருந்து கடற்படையினருடன் பயணித்த பஸ் மின்கம்பத்தில் மோதி நேற்று வியாழக்கிழமை விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் கலபெத்தாவே என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மின்கம்பம் முறிந்து பஸ்ஸின் மீது விழுந்த போதிலும், அந்த பஸ்ஸில் பயணித்த 18 கடற்படையினரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அரச சொத்துக்குச் சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் குறித்த பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து அம்பாறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## வெள்ளத்தில் போக்குவரத்து...



திருகோணமலை மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழையைத் தொடர்ந்து கந்தளாய்க்குளம், பரவிப்பாஞ்சான்குளம், ஈச்சங்குளம், கல்மிட்டியாக்குளம் ஆகியவற்றின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

## தொழிலாளருக்கான இடர் நிவாரணத் திட்டத்தை தோட்ட நிறுவனங்கள் அறிமுகப்படுத்த வேண்டும்

### ம.தொ.முன்னணி செயலாளர் வேண்டுகோள்

நுவரெலியா,ஜன.11

தோட்ட நிறுவனங்கள், தொழிலாளர்களுக்கான விசேட இடர் நிவாரண திட்டத்தை அறிமுகப்படுத்த வேண் டும்.

இவ்வாறு மலையகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொழிலாளர்கள் குளவித் தாக்குதலால் பாதிக்கப்படுகின்றனர். அதனால் அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பும் வரை சம்பளத்தை இழக்கின்றனர். குளவித் தாக்குதல்களில் ஒருசில தொழிலாளர்கள் உயிரிழந்தும் உள்ளனர். இவற்றுக்கெல்லாம் உரிய முறையில் நிவாரணம் வழங்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

முன்னர் இவ்வாறான குளவிக்கூடுகளை எரித்து அழிப்பதற்கு என நிர்வாகத்தால் தனியான ஆள்கள் நியமிக்கப்பட்டு கூடுகள் அழிக்கப்பட்டன.

அப்போதைய கால கட்டங்களைவிட தற்போது தேயிலைத் தோட்டங்கள் காடாகி வருகின்றன. அதனால் குளவிக் கூடுகள் மாத்திரமன்றி, காட்டு மிருகங்களின் நடமாட்டமும் அதிகரித்துள்ளன. இது தொழிலாளர்களின் உயிருடன் விளையாடும் செயலாகவே அமைந்துள்ளது.

காடாகியுள்ள தோட்டங்களைத் துப்புரவு செய்யுமாறும், குளவிக்கூடுகளை அழிக்குமாறும் பல்வேறு கோரிக்கைகள் விடப்பட்டும் கூட இதுவரை கவனிக்கப்படவில்லை.

குளவித் தாக்குதல் மட்டுமன்றி, தீ விபத்து, மண்சரிவு, வெள்ளம் போன்ற காரணங்களால் தொழிலாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட தோட்டக் குடியிருப்புகள் பல தோட்டங்களில் புனரமைக்கப்படாமல் உள்ளன. அதேபோல் இவ்வாறான விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ச்சியான நிவாரணத்திட்டங்களும் நடைமுறையில் இல்லை.

எனவே, இதற்கான ஒரு விசேட இடர் நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறு பாதிக்கப்படும் தோட்ட நிர்வாகங்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்கவேண்டும். இது மறுபக்கத்தில் தமது நிறுவனங்களின் இலாபத்துக்காக உழைக்கும் தொழிலாளர்களுக்குச் செய்யும் கைமாறாகவும் அமையும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## புனரமைக்கப்படாத குறிஞ்சாக்கேணி தோட்ட வீதி

திருகோணமலை,ஜன.11

கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட குறிஞ்சாக்கேணி தோட்ட உள்வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த வீதியில் குறிப்பிட்ட தூரம் மட்டும் கொங்கிறீட் இடப்பட்டு ஏனைய பகுதிகளுக்கு கொங்கிறீட் இடப்படாது அவை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன என்று மக்கள் குறிப்பிட்டனர். (ச)

## பொருத்தமற்ற-பழுதடைந்த உணவகங்கள் திடீர்ச் சோதனை

### கல்முனை முதல்வர் களத்தில்


கல்முனை,ஜன.11

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேச உணவகங்களை கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் திடீர் சோதனையை மேற்கொண்டார். அதன்போது சமைப்பதற்கு பொருத்தமற்ற, பழுதடைந்த உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. உணவகங்கள் தொடர்பாக கல்முனை முதல்வருக்கு பொதுமக்களினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்தே முதல்வர் தலைமையிலான குழுவினரால் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரிசோதனையின்போது உணவுப் பண்டங்கள் திறந்த நிலையில் ஈக்கள் மொய்க்கும் வண்ணம் வைக்கப்பட்டிருத்தல், சமையல் அறையின் சுகாதாரம், குளிர்சாதனப் பெட்டியின் முழுமையான முகாமைத்துவம், சமைக்கும் பாத்திரங்களின் தூய்மை, மனித நுகர்வுக்குப் பொருத்தமில்லாத உணவுகள் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல், சவர்க்காரமிட்டு கைகழுவும் வசதி வைத்திருத்தல் போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

இந்த விடயங்கள் தொடர்பில் கவனக்குறைவாக செயற்பட்ட உணவைக் கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் திடீர் முற்றுகையின்போது முதல்வருடன் சுகாதாரப் பிரிவுப் பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.



**இடபம்:** சிலர் உங்களை விமர்சிப்பார்கள். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.



**மிதுனம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.



**கடகம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய கடன் மிகுதிகள் அடைப்பீர்கள்.



**சிங்கம்:** குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.



**கன்னி:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் மகிழ்ச்சி கிட்டும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள்.

**நாளை**

மார்கழி -28 சனிக்கிழமை 12.01.2013
திதி: பிரதமை பி.இ. 12.08 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.இ. 11.04 வரை
சுபநேரம்: 03.33- 05.03 வரை
ராகுகாலம்: 09.33 - 11.03 வரை



**துலாம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த கடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.



**விருச்சிகம்:** ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு.



**தனுசு:** உணர்ச்சி வேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள். சிலர் உதவுவதாகச் சொல்லி உபத்திரவத்தில் சிக்க வைப்பார்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.



**மகரம்:** எதிர்காலம் குறித்த கவலைகள் வந்து நீங்கும். எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் மிகுதிகளை போராடிப் பெறுவீர்கள்.



**கும்பம்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.



**மீனம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு. யோகா, தியானம் இவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | 5 | 9 | | 1 | 4 |
| 5 | | 6 | | 2 | | 7 | 3 | |
| | | | | | | 2 | | 6 |
| 4 | | 1 | | 6 | 8 | | | |
| 8 | | | 4 | | 5 | | | 1 |
| | | | 9 | 7 | | 4 | | 8 |
| 3 | | 9 | | | | | | |
| | 8 | 2 | | 4 | | 9 | | 7 |
| 7 | 6 | | 1 | 9 | | 5 | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 9 | 5 | 4 | 8 | 1 | 2 | 7 |
| 4 | 2 | 5 | 9 | 1 | 7 | 8 | 6 | 3 |
| 7 | 1 | 8 | 6 | 2 | 3 | 9 | 4 | 5 |
| 8 | 5 | 2 | 3 | 9 | 6 | 7 | 1 | 4 |
| 3 | 4 | 6 | 8 | 7 | 1 | 2 | 5 | 9 |
| 1 | 9 | 7 | 2 | 5 | 4 | 3 | 8 | 6 |
| 5 | 7 | 1 | 4 | 8 | 9 | 6 | 3 | 2 |
| 9 | 6 | 4 | 1 | 3 | 2 | 5 | 7 | 8 |
| 2 | 8 | 3 | 7 | 6 | 5 | 4 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக்கல்வி
அலுவலகத்தில் பணியாற்றும்
ஐயாத்துரை
பிறேமச்சந்திரன்
அவர்களின் தாயாரான
திருமதி
ஐயாத்துரை தங்கமுத்து
அவர்களின் பிரிவால்
துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிசங்கம்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.
(C/28204)(6.7.11)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 06.02.1942
உதிர்வு 04.01.2011

அமரர்
### செல்லையா இராசா

திதி: அமாவாசை

என்றும் எம்மை அன்பாலும் பண்பாலும்
அரவணைத்து இனிய வாழ்வு தந்த தெய்வமே....
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாக அமைந்த
உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு
ஏங்கித் தவிக்கின்றோம் என்றும்.....
இதயக் கோயிலில் இருத்திப் பூசிப்போம் அப்பா....

குகன் இன்டஸ்ரீஸ், குகன் ஸ்ரோர்ஸ்,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
மஞ்சு களஞ்சியம் நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(28234)(5.6.7)

குடும்பத்தினர்.
இல.64, சந்தனமாதா கோயில் வீதி.
யாழ்ப்பாணம்.

## OBITUARY

### EDITH CHANDRA MARIAMPILLAI



Beloved daughter of Late Mr.& Mrs Ernest, Loving wife of Late Edwin Mariampillai, Loving Mother of Manjula, Shyamala, Ravi, Suresh and Mithran, Mother - in - Law of Anton Emmanual, Late Pastor. M.Inparuban, Kohila, Prathisha & Gayathri, Precious grand mother of Samantha, Christina, Noel, Keturah, Deborah, Rannard, Joshua, Sharon, David, Rachel, Mirakla, Mishael Loving Great grand mother of Noah, Beloved Sister of Late Peace Joseph, Hyacinth Ernest, Late Gloria Johnpillai, Grace Varnakulasinghe and Late Joy Ernest entered glory on 06.01.2013.

Funeral Service will be held at 10.30 am on 12.01.2013 Saturday. Cortege leaves residence after service for burial at Canaan burial grounds, Kopay.

129, Main Street, Jaffna. (28232)(6.7.11)

Mrs.C.S. Inparuban
(Daughter, Informant)

## மரண அறிவித்தல்

### ஈடித் சந்திரா மரியாம்பிள்ளை



129, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஈடித் சந்திரா மரியாம்பிள்ளை 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (12.01.2013) சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் கானான் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

129, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(28233)(5-6-7)

தகவல்:
திருமதி C.S.இன்பருபன்
(மகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறு மாதங்களின் பின்னர் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த பிரதமரை ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன வரவேற்றார். அருகில் அமைச்சர்களான அதாவுட செனவிரத்ன, திஸ்ஸ கரலியத்த , பிரதி அமைச்சர்களான ஏர்ல் குணசேகர, சிறிபால கம்லத் , நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, ஷெஹான் சேமசிங்ஹ உட்பட பலர் காணப்படுகின்றனர்.

# சட்டக் கல்லூரிப் பரீட்சை விடைத்தாள் மீள்மதிப்பீடு

## உறுதியளித்தார் பரீட்சைகள் ஆணையாளர்

கொழும்பு,ஜன.11

சட்டக்கல்லூரியின் 2013ஆம் ஆண்டுக்கான நுழைவுப் பரீட்சை விடைத்தாள்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

இவ்வாறு பரீட்சைகள் ஆணையாளர் டப்ளியூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் பரீட்சை ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. அந்தச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு உறுதிமொழி வழங்கியுள்ளார்.

பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகினவா என தீர்மானிப்பதற்கும் விசாரணை நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் சட்டக்கல்லூரி அதிபர் டபிள்யூ.டி ரொட்றிகோ பரீட்சைகள் ஆணையாளருக்கு மனு ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

பரீட்சை முடிவுகள் பாரபட்சமின்றி இருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் பரீட்சை திணைக்களம் மேற்கொள்ளும் என்று அவர் கூறினார்.

பரீட்சை வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் வெள்ளவத்தையிலுள்ள தனியார் மேலதிக வகுப்பொன்றில் வெளியாகியதைக் காட்டும் சான்றுகள் உள்ளன என்று சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் சங்க பேச்சாளர் றம்ஸி பாஷா தெரிவித்தார்.

குறிப்பிட்ட சில இனக் குழுக்களுக்கு சாதகமாக சட்டக் கல்லூரி நுழைவு பரீட்சை முடிவுகள் உள்ளதாகக் கூறி பரீட்சை எழுதிய மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

தமிழ் மொழி மூலம் பரீட்சை எழுதிய 705 பேரில் 133 பேரும், சிங்கள மொழி மூலம் பரீட்சை எழுதிய 6,295 பேரில் 154 பேரும் சட்டக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதிய ஏனையோரைவிட முஸ்லிம் மாணவர்களுக்கு சாதகமாக முடிவுகள் அமைந்திருப்பதாக மாணவர்கள் முறையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரிசானாவின் இறப்பு எதிர்பாராத ஒன்றே

## தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.11

வறுமை காரணமாக சவூதி அரேபியாவுக்குப் பணிக்குச் சென்ற ரிசானாவுக்கு எதிர்பாராத விதமாக மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

ரிசானாவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1972 ஆம் ஆண்டு வறிய மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இலவசமாகக் கூப்பன் மூலம் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டன. அரசு அந்த முறையை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும்.

எமது நாட்டில் இலவசக் கல்வி, இலவசப் பாடப்புத்தகம், இலவச மதிய உணவு உண்டு. ஆனால் அத்தனை வசதியிருந்தும் பாடசாலையில் கல்வி கற்கவேண்டிய பிள்ளை ஏன் வேலை தேடி வேறு நாட்டுக்கு போக வேண்டும்? அத்தகைய செயல்களை ஏன் சட்டப்படி அரசு தடுக்கவில்லை?

எனவே இன்னுமொரு ரிசானா உருவாக நாம் இடமளிக்கக்கூடாது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரிசானா நஃபீக்கின் உயிரைக் காப்பாற்றத் தவறியதற்கான முழுமையான பொறுப்பை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஏற்க வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணையம் குற்றம் சாட்டியுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணையத்தின் குற்றச்சாட்டை மறுத்துள்ள நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் , ரிசானாவின் விடுதலைக்காக இலங்கை அரசு தன்னால் ஆன அனைத்தையும் செய்தது என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

# குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தால் சட்ட நடவடிக்கை

## எம்.பிக்களை எச்சரிக்கிறார் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு,ஜன.11

குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெறும் வாக்கெடுப்பின்போது அதற்கு ஆதரவாக வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புக்கு விரோதமான முறையில் வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

> பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகளை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கைகளை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. அதனால் இந்தத் தெரிவுக் குழு அறிக்கைக்கு ஆதரவாக வாக்களிப்பது அரசமைப்புக்கு முரணானது. ஆளும் கட்சியில் இணைந்து கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அரசமைப்புக்கு முரணான வகையில் வாக்களிக்கக்கூடாது என எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



குற்றப் பிரேரணைக்கு ஆதரவாக கையொப்பமிட்ட மற்றும் ஆதரவாக வாக்களிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்படும்.-என்றார். (ச)

# தினமும் 5 சிறுவர் துஷ்பிரயோகம்

## சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பின் தலைவி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.11

இலங்கையில் நாள் தோறும் சராசரி ஐந்து சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று சுதந்திரத்துக்கான பெண்கள் அமைப்பின் தலைவி திமுது ஆட்டிகல குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முழுவதிலும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. பெண்களும், சிறுவர்களும் குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர் மற்றும் பெண்களைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் பிரச்சினை எழுந்துள்ளது. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் தொடர்பில் அரசு உரிய கவனம் செலுத்துவதில்லை.-என்றார். (ச)

# நேர்மையான விசாரணைகள் நடத்தக்கூடாது என்பதற்காகவே தெரிவுக்குழு அறிக்கை

## தயாரிக்கப்பட்டது என்கிறார் ரில்வின் சில்வா

கொழும்பு,ஜன.11

நேர்மையான விசாரணைகள் நடத்தப்படக் கூடாது என்ற காரணத்தினாலேயே அவசரமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இவ்வாறு ஜே.வி.பி. பொதுச் செயலர் ரில்வின் சில்வா குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததைத் தொடர்ந்து, அவசர அவசரமாக ஒரே இரவில் ஆளும் கட்சியினர் அறிக்கை தயாரித்தனர்.


நாட்டில் ஓரளவுக்கேனும் நிலவி வந்த ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைக்க அரசு முயற்சிக்கின்றது. ஜனநாயக விரோத செயற்பாடுகளை அரசு நியாயப்படுத்த முயற்சிக்கின்றது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை குறித்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசு தனக்கு எதிரான சகல சக்திகளையும் விடயங்களையும் ஒடுக்கி ஆட்சி நடத்த முயற்சிக்கின்றது.

நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் சிலவே குற்றப் பிரேரணை முன்வைப்பதற்கு ஏதுவாக அமைந்தது என்பது வெளிப்படையானது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைகளின்போது பிரதம நீதியரசரை அவமரியாதை செய்து அவரை வெளிநடப்புச் செய்யச் செய்தனர்.



மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் காட்டாத தீவிரத்தை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் அரசு காட்டி வருகின்றது.-என்றார். (ச)

# மேர்வின் சில்வாவிடம் சி.ஐ.டி விசாரணை?

கொழும்பு,ஜன.11

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரிடம் களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அமைச்சரின் நாடாளுமன்ற இணைப்புச் செயலாளர் சிங்கப்பூர் சரத் உட்பட ஐந்து பேர், கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களின் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பிலும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

# நல்லிணக்கத்துக்கான பரிந்துரைகளில் காணிப் பிரச்சினைக்கே முன்னுரிமை

கொழும்பு,ஜன.11

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் வடக்கு,கிழக்கு காணி பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது தொடர்பாக காணி உரிமையாளர்களிடம் காணியை வழங்கும் வேலை தொடங்கிவிட்டது. காணிப் பிரச்சினைகளில் அதிகமானவை இந்த வருடத்துக்குள் தீர்ந்துவிடும். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய வட மாகாணத்தில் புனர்வாழ்வு, மீள்கட்டுமானம், நல்லிணக்கம் ஆகியன சுமுகமாக நடைபெறுகின்றன. -என்றார்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மரண அறிவித்தல்



## தம்பிஐயா பாலதேவன்

*(ஓய்வுபெற்ற சமூக சேவைகள் திணைக்கள அத்தியட்சகர்)*

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா பாலதேவன் (09.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - ஜெயலட்சுமி (மங்களம்) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அரியநாயகம் - கிறேஷ் நேசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தீபமணியின் அன்புக்கணவரும், சறோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான சீதாதேவி, மகாதேவன் (U.K) மற்றும் கமலாதேவி, லக்ஷ்மிதேவி, சகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியபாமா, லக்ஷ்மன்திசா, லக்ஷ்மிகுமார், லக்ஷ்மிகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சித்திரா (U.K), கங்கா (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), அரவிந்தன் (ஸ்ரீ தேவி கருமாரி நகைமாடம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் வரதராஜ் (U.K) ஜெகதீஸ்வரன், வசந்தா ஆகியோரின் அன்பு மாமனும் விபூஷன் (U.K), பிரிஜந்த் (U.K), சாதுலா (U.K), மதுஷிகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), லக்ஷனா (கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2013) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருவேலடி லேன், கொக்குவில்.
T.P:021 222 9929

(28238)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்

# பொது அறிவித்தல்- 2013

**01. படவரைஞராகப் பதிவு செய்தல் - 2013**

2013 ஆம் ஆண்டு படவரைஞராகப்பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச்செய்து கொள்ளவும் புதுப்பித்துக்கொள்ளவும். நல்லூர் உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் -2013**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2013 ஆம் ஆண்டுகான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தை தத்தமது பிரிவிற்குட்பட்ட உபஅலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நல்லூர் /கொக்குவில் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரிய கட்டணங்களை 31.01.2013 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டம் பிரிவு - 268 இன் பிரகாரமான அறிவித்தல்**

3.1 நல்லூர்பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளைச் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.

எனவே நல்லூர்பிரதேசசபையால் விநியோகிக்கப்படும் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 சபையின் அனுமதி பெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல் - 2013**

2013 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**05. நல்லூர்/கொக்குவில் உப அலுவலக ஆதன வரி அறிவித்தல் - 2013**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவிடப்பட வேண்டுமெனத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2013 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஓவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் முறையே 15 %உம் ஏனைய ஆதனங்களுக்கு 20 % உம் விறாந்துக்கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2013 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உபஅலுவலகங்களில் முழுமையாகச்செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலைவரிபெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**06. சூழல் பாதுகாப்பு உரிமம (EPL) - 2013**

மத்திய சூழல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் நல்லூர் பிரதேசசபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/ தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2013 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

**07. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்**

எமது சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருமருங்கிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும், காட்சிப் படுத்தப்படும் விளம்பரங்களுக்காக 31.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி சபையின் அனுமதியைப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள்/வர்த்தக நிலைய உரிமையாளர்கள் நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் 01.02.2013 க்குப்பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**08. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி, உயிர்கோழிகள் விற்பனையை தடை செய்தல்**

நல்லூர் பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 500 மீற்றர் வரையான சுற்றாடலில் மரக்கறிகள், கடலுணவுகள், இறைச்சிவகைகள், உயிர் கோழிகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**09. வீதி ஒழுங்கைப்பேணல்**

திருநெல்வேலி சந்தைப்பகுதியில் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்த்துக்கொள்ளும் முகமாக வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

**10. பொது இடங்களில் கழிவுகள் போடுதல்**

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப்பொருள்களை அனுமதியின்றி கொண்டு செல்லல், கொட்டுதல் ஆகியன பொது சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடை செய்யப்பட்டுள்ளது. தவறின் பிரதேச சபை கட்டளைச்சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புச்சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**11. தரகர் முறை நீக்கம்**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர்.

நல்லூர் பிரதேசசபை.
கொக்குவில்.

(c/5967)(6.7.2)

ப.வசந்தகுமார்
தலைவர், நல்லூர்பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல்

## அவர்களுக்கு நீதி தேவை என்றும் வலியுறுத்து

இலங்கையில் போர் முடிவுற்ற பின்னரும் தொடரும் மனிதப் படுகொலைகள், ஆள்கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை மையமாக வைத்து பிரிட்டன் நாடாளுமன்றில் சூடான விவாதம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாகத் தமிழர்கள் சார்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிவரும் சிவோன் மக்டோனாலின் கோரிக்கைக்கு இணங்க இலங்கை தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

விவாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பு, ஆள் கடத்தல், போர் முடிந்து மூன்று ஆண்டுகளின் பின்னரும் தொடரும் மனிதப் படுகொலைகள், அடிப்படை வசதிகளற்று மக்கள் அனுபவிக்கும் அவல வாழ்வு மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் என அடுக்கடுக்காக 30 நிமிடங்கள் தொடர்ச்சியான தனது ஆணித்தரமான வாதங்களை ஆதாரங்களோடு முன்வைத்திருந்தார் மக்டோனால்.

தொடர்ந்து நடைபெற்ற ஒரு மணி நேர விவாதத்தில் இலங்கை அரசைக் கண்டித்தும் சிவோன்மக்டோனாலின்டின் கருத்தை ஆதரித்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். சிலர் மேலும் சில விளக்கம் கேட்டு கேள்விகளைத் தொடுத்தனர். ஒரு சிலர் மட்டும் இலங்கை அரசுக்கு ஆதரவாகத் தமது கருத்துகளைத் தெரிவித்து சிவோன் கூறுவது பொய், ஆதாரம் அற்றது என்றும் கூறியிருந்தனர்.

இவை அனைத்திற்கும் அவ்வப்போதே சிவோன் மக்டோனால் எழுந்து தமது ஆணித்தரமான பதிலை அளித்து அவர்களின் வாயை அடைத்திருந்தார். இந்த விவாதத்தில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவோன் மக்டோனால், பறிக் காடினர், கரத் தோமஸ் ஆகியோர் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கையைக் கண்டித்தும் உரையாற்றியிருந்தனர்.

லீஸ் கொட், சைமன் கியூஸ், ஜெரமி ஹண்ட் ஆகியோர் இலங்கை அரசைக் குற்றம் சுமத்தாது தமிழர்களுக்கு நீதி தேவை என்பதை வலியுறுத்தியிருந்தனர். (3)

# ஜனவரியில் இருந்து புதிய ஓய்வூதியப் படிகள்

தென்மராட்சி, ஜன.11

தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதியர்களுக்கு வரவு- செலவுத் திட்ட அறிக்கையில் வெளியிடப்பட்ட புதிய ஓய்வூதியப் படிகள் ஜனவரி மாத ஓய்வூதியத்துடன் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினால் அனுப்பப்பட்டுள்ள ஜனவரி மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களில் படிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அனைத்து ஓய்வூதியர்களுக்கும் படியாக 500 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு விசேட படியாக 375 ரூபா வரை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களின் ஓய்வூதிய தினத்தை கணிப்பிட்டு விசேட ஓய்வூதியப் படி அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு விசேட படியாக வழங்கப்பட்டுள்ள 375 ரூபா எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் 375 ரூபா அதிகரித்து 750 ரூபாவாக வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (3-9)

# தடம் புரண்டது சீனி லொறி

தென்மராட்சி, ஜன.11

சீனி மூடைகளுடன் சென்ற லொறி வீதியை விட்டு விலகி தடம் புரண்டது. இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை சரசாலை - பருத்தித்துறை வீதியில் கப்புதூவை அண்டிய பகுதியில் இடம்பெற்றது.

வீதியில் காருக்கு வழி விடுவதற்காக வீதியோரமாகச் சென்ற வேளையில் தடம் புரண்டதாக தெரிவிக்கப்பட்டது. லொறி புரண்ட போதிலும் அதில் பயணித்த மூவருக்கும் பாதிப்பு ஏதும் இல்லை. (3-9)

# ஆலய வாகனம் திருட்டு

வலி.வடக்கு, ஜன.11

மழையைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் ஆலயத்தில் இருந்த சுவாமி வெளி வீதியுலா வரும் வாகனத்தைத் திருடிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை தோதரை அம்மன் ஆலய ரிஷப வாகனம்கடந்த திங்கட்கிழமை இரவு திருடிச் செல்லப்பட்டுள்ளது. கடந்த கால இடப்பெயர்வுகளின் பின்னர் இந்த வாகனம் அடியார்களின் உதவியுடன் புதிதாகச் செய்யப்பட்டு ஆலயத் தில் வைக்கப்பட்டு இருந்தது.

குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற தெல்லிப்பழை குற்றத் தடுப்புப் பொலிஸார் ஆலயத்தின் பின்புறம் உள்ள தோட்ட வெளியில் வாகனத்தின் பீடம் உடைத்து எறியப்பட்ட நிலையில் அத னைக் கண்டு பிடித்து மீட்டுள்ளார்கள்.

சந்தேக நபர்கள் யாரும் இது வரையில் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (3-86)

# காரைநகர் அர்ச்சகர் வீட்டில் திருப்பணிப்பணம் நகைகள் திருட்டு

காரைநகர், ஜன.11

ஆலயத் திருப்பணிக்குச் சேகரித்த பணம் மற்றும் கோயில் நகைகளை, ஆலய பிரதம குருவின் வீட்டை உடைத்துத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு காரைநகர் களபூமியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவ தாவது:-

காரைநகர் மடத்துக்கரை அம்மன் ஆலயத்தில் தற்போது புனருத்தாரணம் நடைபெற்று வருகிறது.

இதனால் பிரதம குரு, அம்மன் நகைகளை தனது வீட்டில் பாதுகாத்து வந்துள்ளார். அத்துடன் கோயில் புனர் நிர்மாணத் திருப்பணிக்கென பக்தர்கள் வழங்கிய பெருந்தொகைப் பணமும் அங்கு வைக்கப்பட் டிருந்தது.

நேற்றுமுன்தினம் இரவு பிரதம குரு மற்றும் அவரது குடும்பத்தினர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது வீட்டுக் கதவுகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா பணம் மற்றும் அம்மன் நகைகளையும் சூறையாடி சென்றுள்ள னர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதே தினத் தில் களபூமியிலுள்ள வேறொரு வீட்டிலும் சுமார் 8 பவுண் நகைகள், பணம் என்பன திருட்டுப் போயுள் ளமை குறிப்பிடத்தக்கது.(3-16-250)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
திருமதி பொலின் யூலியற் எட்மன்
அவர்களின் பாசமிகு தந்தையார்
கிரிஸ்ரியன் மரியதாசன் (மகாராசா)
அவர்கள் 05.01.2013 அன்று
இறைபதமடைந்ததையிட்டு
அன்னாரின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் கழகம்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.
(282378) (6.7.4)


# திருவாசக முற்றோதல்

சுன்னாகம் மேற்கு பருத்திக் கலட்டி ஞான வைரவர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் திருவாசக முற்றோதல் செய்யப்படுவதுடன் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும். (3)


## திருமண சேவை

68 ஆம் ஆண்டு, திருவாதிரை, 7 இல் செவ்வாய், 20 பாவம் வெளிநாட்டு P.R மணமகனிற்கு மணமகள் தேவை.
தொடர்பு :துர்க்கா திருமண சேவை,
0778185978, 021 321 1814
(2827)(6.7.11)


# தங்க நாணயங்களுடன் இரு இந்தியர்கள் கைது

இந்தியப் பிரஜைகள் இருவர், தங்க நாணயங்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் விமானத்தில் பயணம் செய்ய விருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவ்விருவரிடமிருந்தும் ஒரு கிலோ 840 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இலங்கையைச் சேர்ந்த ஒருவர்,தங்கநாணயங்களை தங்களிடம் வழங்கியுள்ளதாகக் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள [illegible] தெரிவித்துள்ளார்.(3)


## மரண அறிவித்தல்

### வீரவாகு முருகேசபிள்ளை



சேச் லேன், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு முருகேசபிள்ளை (08.01.2013)செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமிப் பிள்ளையின் அன்புக்கணவரும் சத்தியசீலன் (பன்னீர்ச்செல்வம்), காலஞ்சென்ற புலேந்திரன் மற்றும் பாலா, சற்கு , காஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராகினி, நளினி, சசி,ராசு ஆகியோரின் ஆசை மாமனும் ராசா -வரம்சவதனி (பூமா), சியான், வாசுகி, பாபு - ஸ்ரீமதி, கௌசி, ராம், ருக்ஷி,திஷான்,சாதனா, நிலோதன், ரமணன் ஆகியோரின் பேரனும், ஜனார்த்தனி, பிரியங்கன், திவ்வியா, லக்ஷன், லோஷன், தீபிகா, சோபிகா, சாகித்யன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2013) வெள்ளிக் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச் லேன்,
மல்லாகம்.
T.P: 0777066148.

தகவல்:
சத்தி (மகன்), பூமா (பேர்த்தி).



## மரண அறிவித்தல்

### திருமதி சவரிமுத்து திரேசம்மா



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவரிமுத்து திரேசம்மா நேற்று (10.01.2013) வியாழக் கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கேற்பிள்ளை -பிலிப்பாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை -மரியம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை சவரிமுத்துவின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான பிரகாசம், மரியம்மா மற்றும் கிறிஸ்தோபர், சூசைப்பிள்ளை, அருட்சகோதரி அக்னேசியா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மேரி யோசேப்பின் (மலர்), மேரி றெஜீனா (மணி), அருட்சகோதரி பிறிஜிற் (மல்லிகா), ஆன் மேரி பெனிற்றா, காலஞ்சென்ற அன்ரன் ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் றெமூந்துப்பிள்ளை, யோசவ் அன்ரன் (தபாலகம், பண்டத்தரிப்பு) ஆகியோரின் மாமியும் ஸ்ரீவின்சன் -பிரியா, அலெக்ஸ் (பொறியியலாளர்), மரிய டினேசன் (யாழ். பல்கலைக் கழக மாணவன்), ஜெறோஷன், ஜெனோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிப்பயண வழிபாடுகள் நாளை(12.01.2013) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் சில்லாலை தூய கதிரை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புனித யோசவ் வீதி,
சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.
(28226)(6.7.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Canon அறிமுகப்படுத்தும் புதிய வகைக் கமரா

முன்னணி இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான Canon ஆனது உயர் வினைத்திறனுடன் கூடிய PowerShot N எனும் கமராக்களை அறிமுகப்படுத்துகின்றது.

12 மெகாபிக்சல்கள் உடையதும் High& Sensitivity CMOS Sernsor ©ШЦ® DIGIC 5 Image Processor ஆகியவற்றை உள்ளடக்கியதுமாக காணப்படும் இந்தக்கமராக்கள் 8x Optical Zoom உடைய 28mm அகன்ற வில்லையையும் கொண்டுள்ளதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் tilt&touch LCD தொழில்நுட்பத்தில் அமைந்த 2.8 அங்குலமுடைய திரையைக் கொண்ட இவற்றின் பெறுமதியானது 300 அமெரிக்க டொலர்களாகும்.



# புத்தம்புதிய அன்ரோயிட் கேமிங் சாதனம் அறிமுகம்


கேம் பிரியர்களுக்காக தொடர்ந்தும் பல்வேறு கேமிங் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவரும் நிலையில் தற்போது GameStick எனும் புத்தம் புதிய சாதனம் ஒன்று அறிமுகமாகியுள்ளது.

அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தச்சாதனமானது இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லக்கூடிய (Portable) அளவுக்குச் சிறிதாகக் காணப்படுகின்றது.

இதனை HDMI இணைப்பு மூலம் நேரடியாகவே தொலைக்காட்சியுடன் இணைக்கும் வசதியும் காணப்படுகின்றது. மேலும் இந்தச்சாதனத்துடன் கேம்களை கட்டுப்படுத்துவதற்கென தரப்படும் PlayStick ஆனது வயர்லெஸ் தொழில்நுட்பமான Bluetooth - ஐ கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனை HDMI இணைப்பு மூலம் நேரடியாகவே தொலைக்காட்சியுடன் இணைக்கும் வசதியும் காணப்படு கின்றது. இந்தச்சாதனத்துடன் கேம்களை கட்டுப்படுத்து வதற்கென தரப்படும் PlayStick ஆனது வயர்லெஸ் தொழில்நுட்பமான Bluetooth - ஐ கொண்டுள்ளது.


# கைபேசிகளுக்கான இயங்குதளத்தை வெளியிட்டது Ubuntu



கணினிகளுக்காக சிறந்த பாதுகாப்பு வசதிகளுடனும் வித்தியாசமான பயனர் இடைமுகத்துடனும் கூடிய பல்வேறு இயங்குதள பதிப்புக்களை வெளியிட்டுவந்த Ubuntu தற்போது கைபேசிகளுக்கான இயங்குதளத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

முதன்முறையாக ஸ்மார்ட் கைபேசிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இவ் இயங்குதளம் தொடுகை (Touch) முறை மூலமான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் கவர்ச்சியான பயனர் இடைமுகத்துடன் கூடியதாகக் காணப்படும் இந்த இயங்குதளத்தின் மூலம் அப்பிளிக்கேஷன்களை விரைவாகச் செயற்படுத்தக்கூடிய வசதியும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இணையத்தள முகவரி http://www.ubuntu.com என்பதாகும்.




# Android 4.1 Smart TV அடுத்த வாரம் அறிமுகமாகிறது

கூகுளின் இயங்குதளமான Android 4.1 Jelly Bean இல் செயற்படக்கூடிய Smart TV இனை உருவாக்கியுள்ள Archos நிறுவனம் அடுத்த வாரமளவில் அறிமுகப்படுத்தக் காத்திருக்கின்றது.

1.5 GHz Multi&Core TI OMAP 4470 Processor, 1GB RAM, மற்றும் 8GB சேமிப்பு சாதனம் ஆகியவற்றினை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இத்தொலைக்காட்சியானது Ethernet port, Mini HDMI output, Micro USB port, Micro SD slot, HD webcam என்பனவற்றினையும் LED சமிக்ஞை விளக்குகளையும் கொண்டுள்ளன.


இத்தொலைக்காட்சியின் ஊடாக கூகுளின் Play Store போன்றவற்றினை பயன்படுத்தக் கூடியதான வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தொலைக்காட்சியின் பெறுமதியானது 129 அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்களினால் கணினியை இனிமேல் இயக்கலாம்

அசுர வேகத்தில் வளர்ந்துவரும் தொழில்நுட்ப துறையில் தற்போது கண்ணசைவின் மூலம் கணினிகளை இயக்கக்கூடிய புத்தம் புதிய சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Tobii REX எனப்படும் USB இணைப்பு மூலம் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சாதனமானது மைக்ரோசொப் நிறுவனத்தினால் புதிதாக அண்மையில் வெளியிடப்பட்ட விண்டோஸ் 8 இயங்குதளங்களில் செயற்படக்கூடியவாறு காணப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டின் ஆரம்ப நாள்களில் [illegible] டொலர்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

கச்சாய் அ.த.க. பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் எதிர் கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடவும். இந்த ஆண்டுக் கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற உள்ளதால் அனைத்து பழைய மாணவர் களையும் தவறாது மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா/கச்சாய் அ.த.க.பா.கொடிகாமம்.

(18009)(5-6-7)

## ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்




தோற்றம்: 15/10/1932
மறைவு : 12/12/2012

### தம்பிராசா பத்தர் லீலாவதி

கடந்த 12/12/2013 புதன் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி தம்பிராசா பத்தர் லீலாவதி அவர்களின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை 11/01/2013 இன்று வெள்ளிக்கிழமை மதியம் 11 மணியளவில் கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரியம்மன் தேவஸ்தான மண்டபத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், அன்னாரின் பிரிவுத்துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

958/5, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27.03.1932 மறைவு 17.11.2011

அமரர்
### சுப்பிரமணியம் பத்மநாதன்
(கோவளம்,காரைநகர்)

நேற்றுப் போல் உங்கள்
நினைவுகள்
இன்றும் பசுமையாய்
நெஞ்சினில்
நாள்கள் வருடம் ஒன்று
ஆனதப்பா
ஆனாலும் ஆறாத்துயரில்
தவிக்கின்றோம்.
உங்கள் நினைவினில்
எங்கள் பயணம் என்றும்
தொடருமப்பா

நி.முகவரி:
கோவளம், காரைநகர்.

தற்.வசிப்பிடம்
இல. 21, ஈச்சமோட்டை வீதி,
சுண்டுக்குளி.

என்றும் உங்கள்
குடும்பத்தினர்.

## உம் பாதக் கமலத்தில்
## ஏழ் பத்தாண்டுக் கண்ணீர் பூக்கள்



அன்னையின்
மடியில்
16.07.1943

ஆண்டவன்
பாதத்தில்
11.01.2003

வான் மழையாய்
வசந்தம் தந்து
சூரியனாய் சுடரும் ஈந்தாய்
கதிர்கள் கோடி விழியால் - உம்மை
தேடி அழைக்கையில்.....
பத்து ஆண்டுகள்
விடைபெற்றுக்கொண்டதும் ஏனோ?

அமரர் சபாபதி நாராயணன்
(ஓய்வுபெற்ற கிராமசேவகரும்,சமாதான நீதிவானும்)

பிள்ளையார் கோயிலடி,
வடலியடைப்பு,பண்டத்தரிப்பு.

(28235)(5.6.7)

மனைவி
பிள்ளைகள்.

# எமக்கும் நியமனம் வேண்டும்

## மட்டக்களப்பு பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜன.11

2011ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பு மாவட்டத் தில் பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் தம்மையும் உள்வாங்குமாறு கோரி நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2011ஆம் ஆண்டில் பட்டம் பெற்ற சுமார் 150 இற்கும் மேற்பட்ட பட்டதாரி களை உள்வாங்குவதில் பிரச்சினை ஏற் பட்டுள்ளது. அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்ட காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் முடித்த எமக்கு பட்டம் கிடைப்பதற்கு பல் கலைக்கழக ஊழியர்கள், விரிவுரையாளர்கள், பரீட்சை பெறுபேறு வெளியாகும் நேரத்தில் வேலை நிறுத் தப் போராட்டத்தில் ஈடுபட் டிருந்தமை காரணமாக தாமதம் ஏற்பட்டது.

ஏனைய பல்கலைக்கழகங்களில் 2011ஆம் ஆண்டில் பட்டம் பெற் றவர்கள் பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் உள்வாங் கப்பட்டுள்ளபோதும் தாம் உள்வாங்கப் படவில்லை என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

எனவே மாவட்ட அரச அதிபரும், பொது நிருவாக அமைச்சும் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போராட் டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஓட்டோ விற்பனைக்கு

YM XXXXதொடர் இலக்கமுடைய
ஓட்டோ விற்பனைக்குண்டு.
T.P: 077 3351586.(25596)(6.7.4)

## அம்பாறையில் காற்றுடன் கூடிய கடும் மழை

அம்பாறை,ஜன.11

அம்பாறை மாவட் டத் தின் கரையோரப் பகுதிக ளில் காற்றுடன் கூடிய கடும் மழை நேற்று வியாழக் கிழமை அதிகாலை முதல் தொடர்ந்து பெய்ததால் மீண்டும் வீதி கள் மற்றும் வளவுகளில் வெள்ள நீர் தேங்கும் நிலை ஏற்பட் டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மழை ஓய்ந்து வெயிலுடனான கால நிலை காணப்பட்ட போதிலும், நேற்று அதிகாலை முதல் கடும் மழை பெய்து வருகிறது. அதனால், பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலகங்களுக் குச் செல்வோர் அசௌ கரியங்களை எதிர் கொள்கின்றனர்.

## நிதி வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

சிறுகைத்தொழில் முயற்சியாளர்க ளுக்கு நிதி வழங்கும் நிகழ்வு மோசமான கால நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ள தாக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள் ளார். (க-18)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை [மல்லாகம்]
# பொது அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன். .இந்நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறேன்.

**1] வியாபார உரிம அனுமதிப்பத்திரம்**

சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2013 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 31.03.2013 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கினறேன்.

**2] சூழல் பாதுகாப்பு உரிமம் 2013**

1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் 31.03 2013 ஆம் திகதிக்கு முன் பாக சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**3] ஆதன வரி செலுத்துதல்-2013**

எமது சபையின் உப அலுவலகங்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி (குட்டியப்புலம்) ஆகிய இடங்களில் சேவையை வழங்கி வருகின்றது. மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி பிரதேசங்களில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலகங்களுக்குச் சென்று 31.03.2013 ஆம் திகதிக்கு முன் ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் 31.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியைச் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.31.03.2013 ஆம் திகதிக்கு முன்வரி செலுத்த தவறின் 15% தண்டமும் வரியும் அறவிடப்படும்.

**4] வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்**

i) வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் அனுமதியின்றி கட்டடங்கள்,கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், புதுப்பித்தல், திருத்தம் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்ற மாகும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டடங்கள் முன்னறிவித்தல் இன்றி எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

ii) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிக்கப்படாத கட்டடங் கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

iii) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபையின் உப அலுவலகங்க ளுக்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5] துவிச்சக்கரவண்டி உரிமம்இ மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல்**

2013 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 31.03.2013 ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்று சபையின் நடவடிக்கைகளிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**6] விளம்பரங்களை காட்சிப்படுத்தல்**

சபையின் நிரவாகஎல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது காட்சிப்படுத்தும் விளம்பரங்களுக்கு உரிய கட்டணத்தை செலுத்தி அனுமதியைப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்டிகொள்கிறேன். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்கள்/ நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம் பரங்களும் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**7] கல், செம்மண் , மண் என்பவற்றினை அகழ்வது தொடர்பான அறிவித்தல்**

சபையின் எல்லைக்குள் கல், செம்மண், மண் என்பவற்றை அகழ்வினை மேற்கொள்ளும் போது உப அலுவலகங்களில் அனுமதியைபெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**8] முச்சக்கரவண்டி தரிப்பிடம்**

சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப் பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் முச்சக் கரவண்டி தரிப்பிடக்கட்டணத்தை 31.03.2013 ஆம் திகதிக்கு முன்பாக செலுத்துமாறு கேட் டுக்கொள்கிறேன்.

**9] மரக்கறி, மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல்**

வுலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1km தூரத்திற்கு வர்த் தக நிலையங்கள் ,பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழிஇறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

**10) படவரைஞரைப்பதிவு செய்தல் / புதுப்பித்தல்**

2013 ஆம் ஆண்டுக்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராக பதிவு செய்தவர்களும் 2013.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு களை மேற்கொள்ள அல்லது புதுப்பித்துக்கொள்ள முடியும்

**11] பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் இவீதியோரங்களிலும் கழிவு களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.**

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதி யோரங்களிலும் கழிவுப்பொருள்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தி சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை [மல்லாகம்].**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
22 • 03 • 1936

மறைவு
12 • 12 • 2012

## கந்தையா சிவசுப்பிரமணியம்

( ஓய்வு பெற்ற புகையிரத இலாகா அதிகாரி )

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் காசல்லேன் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய புகையிரத இலாகா அதிகாரி கந்தையா சிவசுப்ரமணியம் அவர்கள் 12.12.2012 அன்று சிவபதமடைந்தார். அன்னாரின் இறுதிச்சடங்கில் நேரடியாகப் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்கள், மலர்வளையம் சாத்தியவர்கள் சகல வழியிலும் உதவி செய்த அனைவருக்கும் நன்றி நவில்வதுடன் 11.01.2013 இன்று முகத்துவாரம் தீர்த்தக்கரையில் அந்தியேட்டிக்கிரியைகள் இடம்பெற்று தொடர்ந்து பம்பலப்பிட்டி தொடர்மாடி Community Center இல் வீட்டுக்கிரியைகளும் மதிய போசனமும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல் மனைவி, பிள்ளைகள்


**Elocution** – Institute of Western Music & Speech 07.01.2013 முதல் நடைபெறுகின்றன

Preliminary,* Initial, *Elementary, *Grade -I, *Transitional, *Grade -II

உடனடித் தொழில் வாய்ப்புக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான கற்கை நெறிகள்- Starting on 19.01.2013

- BPO-Business process outsource
- Jewelry design (நகை வடிவமைப்பு)

} 6-9 months course (including 3 months in-house training)

கற்கை நெறியை செவ்வனே பூர்த்தி செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் 100% தொழில் வாய்ப்பு உறுதி

- Ethical Hacking

Introduction / Advance } staring on 19.01.2013

Visalam Wide and Beyond

**Visalam MINDS**
127/1, Temple Road Jaffna.
021 221 9695, 075 979 9695


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பேருந்தினை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து

## கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக பல்கலைக் கழகத்திற்கு தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு ஆங்கில இலக்கப் பதிவுடைய கீழ்க்குறிப்பிட்ட வகை பேருந்து ஒன்றின் சேவையை அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி, திருத்த வேலைகள் போன்றவற்றுடன், கிலோ மீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து கோரப்படுகின்றது.

- ஆசன எண்ணிக்கை 54 குளிரூட்டப்பட்டது
- ஆசன எண்ணிக்கை 54 குளிரூட்டப்படாதது
- ஆசன எண்ணிக்கை 42 குளிரூட்டப்படாதது

மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப் பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களை 2013.01.18 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் தலைவர், கேள்விச் சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். நேரடியாக சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரையறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியுள் இடலாம். கேள்விப்பத்திரப் படிவம் மற்றும் நிபந்தனை விவரங்களை நிர்வாகக்கிளையில் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.


சுன்னாகம் அபான்ஸ் வழங்கும்

தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும் சேல்

11.01.2013 முதல் 14.01.2013 வரை

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்







3500/= வைச் செலுத்தி ஒற்றைக்கதவு
4900/= வைச் செலுத்தி இரட்டைக் கதவு
} குளிர்சாதனப் பெட்டி ஒன்றை மாதாந்த தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்







4900/= வைச் செலுத்தி 32" LCD தொலைக்காட்சிப் பெட்டி
5990/= வைச் செலுத்தி 32" LED தொலைக்காட்சிப் பெட்டி
2790/= வைச் செலுத்தி 22" LCD தொலைக்காட்சிப் பெட்டி
3590/= வைச் செலுத்தி 23" LED தொலைக்காட்சிப் பெட்டி
} என்பவற்றை மாதாந்த தவணை அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம்.

(c/5474)(s)

இன்னும் பல பொருள்களை விசேட சலுகைகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

இடம்- 160A, K.K.S வீதி, சுன்னாகம். தொடர்பு 021 2240440

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்திய இராணுவத்தால் பாக். வீரர் கொலை

## பாக். கொடுத்த முறைப்பாடு ஐ.நா. குழு விரைவில் விசாரணை

டில்லி, ஜன.11

ஜம்மு காஷ்மீரில் இந்திய இராணுவத்தால் பாகிஸ்தான் வீரர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் இராணுவ கண்காணிப்புக் குழு விசாரணை நடத்தவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தானுக்கான ஐ.நா.சபையின் இராணுவ கண்காணிப்புக் குழுவுக்கு பாகிஸ்தான் இராணுவம் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளது.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த 6 ஆம் திகதி இந்திய இராணுவத்தால் தமது இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது. அது குறித்து விசாரிக்கப்படவுள்ளதாக ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீ - மூனின் செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெஷிர்கி கூறியுள்ளார்.

இந்தியச் சிப்பாய்களை பாகிஸ்தான் இராணுவத்தினர் மிகக் கோரமாக கடந்த 8 ஆம் திகதி கொலை செய்த சம்பவம் தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான் தரப்பில் எந்த முறைப்பாடும் தங்களுக்கு வரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். மேலும் இரு நாடுகளும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## தமிழக இலங்கை அகதிகள் முகாமில் திருமணப் பதிவு

தமிழக இலங்கை அகதிகள் முகாமில் திருமணப் பதிவு மேற்கொள்ளாதோருக்கான பதிவு இடம்பெற்றது.

ஈரோடு மாவட்டம் பவானி சாகரில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது . அந்த முகாமில் ஆயிரத்து 24 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களில் திருமணமாகி பதிவு செய்யாதவர்களுக்கு முகாமிலேயே நேற்று முன்தினம் திருமணப் பதிவு செய்யப்பட்டது.

மாவட்டப் பதிவாளர் வெங்கடேசன் தலைமையில் துணைப் பதிவாளர் பால்ராஜ் ஆகியோர் பவானி சாகர் இலங்கை அகதிகள் முகாமுக்குச் சென்று அங்கேயே திருமணப் பதிவு செய்தனர்.

# ஆஸிக்கு அகதிகளை அனுப்ப முயன்ற இரு முகவர்கள் கைது

சென்னை, ஜன.11

வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயற்சி செய்த இலங்கை அகதிகளுக்கு முகவராகச் செயற்பட்ட இரண்டு அகதிகளை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை அகதிகள் திருச்சி, இராமேஸ்வரம், மண்டபம், மதுரை உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ளனர். இந்த முகாம்களில் இருந்து, 51 பேர் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல கேரளா தேக்கடிக்குச் சென்றனர். அங்கு, விடுதி ஒன்றில் தங்கியிருந்தவர்களை, கேரளா பொலிஸ் உதவி யுடன் தேனி மாவட்ட கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

**இலங்கை அகதிகளுக்கு முகவராகச் செயற்பட்ட இரண்டு அகதிகளை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

அவர்களை கம்பம் பகுதிக்குக் கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டனர். இதன்போது வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல ஆசை ஏற்படுத்தி, ஒவ்வொருவரிடமும் ஒரு இலட்சம் ரூபா வாங்கியதாக திருச்சி முகாமைச் சேர்ந்த அருள்சீலன் (வயது-40), மதுரை முகாமைச் சேர்ந்த உமாரமணன் (வயது-42) இருவரை கியூ பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் விழுப்புரத்தைச் சேர்ந்த பாபு என்பவரிடம் இதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகவும் ஐயா என்ற முகவர் ஒருவரின் உதவியோடு தப்பிச் செல்ல முயற்சி செய்ததாகவும் ஒப்புக் கொண்டனர். (வ)

## ரிஸானாவின் ஜனாஸா சவுதியில் அடக்கம்

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பணிப் பெண்ணான ரிஸானா நபீக்கின் ஜனாஸா அந்த நாட்டி லேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

ரிஸானாவின் ஜனாஸாவை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் கோரிக்கை விடுத்தது.

எனினும் சவுதிச் சட்டத்துக்கு அமைய சடலத்தை இலங்கைக்குத் அனுப்பி வைக்க முடியா தென சவூதி அரசு அறிவித்து விட்டது.

இதனால் ரிஸானாவின் ஜனாஸா சவூதியிலேயே நல்லடக்கம் செய்யப் பட்டதாக அங்குள்ள இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

4 வயதுக் குழந்தையை கொலை செய்ததாக குற்றம் சுமத்தி மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிஸானா நபீக் நேற்று கழுத்து தூக்கிலிட்டு அவருக்கான தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

## இலங்கையில் சவாலை எதிர்கொண்டது ஐ.நா.

ஜெனிவா, ஜன 11

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் சவால்களை எதிர்நோக்க நேரிட்டதாக ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் முன்னாள் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. சபையின் ஊடகப் பிரிவுக்கு அளித்த நேர்காணலின் போதே நம்பியார் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிவிலியன் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் ஐ. நா. சபை இலங்கையில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. மேலும் பல்வேறு விடயங்கள் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

உலக நாடுகள், ஐ.நா. சபையின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகின்றமையினால் சவால்கள் அதிகமாகக் காணப்படுகின்றது -என்றார். (த)

உதயனின்
தமிழர் திருநாளில்
பொங்கும் திருவிழா
2013
விழாவை முன்னிட்டு
நடத்தப்படும் போட்டி
முதலாம் பரிசு - 7,000/=
இரண்டாம் பரிசு - 5,000/=
மூன்றாம் பரிசு - 3,000/=
மேலும் 10 பேருக்கு தலா ஆயிரம் ரூபா
கேட்கப்படும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதி பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்...
கேள்விகள்
1) 2012/12/21 அன்று உலகம் அழியும் என்று குறிப்பிட்ட நாள்காட்டியின் பெயர் என்ன?
2) இலங்கையின் பிரதம நீதியரசர் யார்?
3) 'திவிநெகும' என்ற திட்டத்தின் தமிழ்ப் பதம் என்ன?
4) நல்லூர் இராசதானியை ஆண்ட கடைசி மன்னன் யார்?
5) வடமாகாணத்தின் அடையாளமாகக் கொள்ளப்படும் மரம் எது?
நிபந்தனை
★ வயது - வேறுபாடு கிடையாது.
★ 'உதயனில்' வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து அனுப்ப வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
★ குலுக்கல் மூலமே வெற்றியாளர்கள் நிகழ்வில் வைத்துத் தேர்வு செய்யப்படுவர்.
★ நிகழ்வில் வைத்து மாத்திரம் உடனடியாகவே பரிசில் வழங்கப்படும்.
★ பரிசுக் கூப்பன்களை எதிர்வரும் 13/01/2013 அன்று மாலை 6 மணி வரையில் அனுப்ப முடியும்.
★ உங்கள் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றைக் குறிப்பிட மறவாதீர்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி:
தமிழர் திருநாளில் பொங்கும் பெருவிழா - 2013
'உதயன்' வெளியீட்டகம், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
பெயர்: ..............................
முகவரி: ..............................
பிறந்த திகதி: ..............................

## மாதங்களில் சிறந்த மார்கழி

ஞானக்கதிர்

கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கணையிருளகன்றது காலையம் பொழுதாய்,
மது விரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடு புகுந்த
இருங்களிற்றீட்டமும்பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள்ள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே-

''காலைக் கதிரவன் தனது பொற்கிரணங்களை விரித்த படி கிழக்குத் திசையில் உதித்து விட்டான். இரவு நீங்கி காலை நேரம் வந்து விட்டது. மலர்கள் எல்லாம் சூரியனைக் கண்டவுட ன் மலர்வதனால் மலர்களிலிருந்து தேன் வழிகின்றது. வானவர் களும், மன்னவர் களும் வந்திங்கு கூடியுள்ளனர். எல்லாத் திசை களிலும் மக்கள் வந்து குழுமியுள்ளனர். யானை யிலே இருந்து முரசு ஒலிப்பதனால் எங்கும் கடல் அலை இரைவது போல் இருக்கின்றது. எம்பெருமானே அரங்கத்தில் பள்ளி கொண் டுள்ள நாராயணனே துயில் நீங்கியெழுந்து எமக்கு அருள் புரிவாய்" என்பதுஇப்பாடலின்பொருள்.

தொண்டரடிப் பொடி ஆழ் வார் ஸ்ரீமந்நாராயணனைத் துயில் எழுப்புவதற்காக பாடிய பாசுரம் இது. திருப்பள்ளியெழுச்சிப் பாடலின் முதல் பாடல் இது. நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைப் பாடிய திருமால் அடியவர்கள் ஆழ்வார்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

பூவுலகில் ஒரு வருடமானது தேவலோகத்தில் ஒரு நாளாகும். தை முதல்- ஆனி வரையான முதல் ஆறு மாதமும் உத்தராய ணம் எனப்படுகின்ற தேவர்களின் பகற் காலமாகும். ஆடி முதல்- மார்கழி வரையான ஆறுமாதமும் தேவர்களின் இராக்காலமாகும். எனவே மார்கழி மாதமானது தேவர்களின் அதிகாலைப் பொழு தாகும். ஆடி முதல் மார்கழி வரை யான ஆறு மாதங்களும் தெட்ச ணாயணம்என அழைக்கப்படுகின்றது. தேவர்கள் துயில் நீங்கி யெழும் அதிகாலை வேளையா கிய மார்கழி மாதம் முழுவதும் இறை தியானம் செய்ய வேண் டும், என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் மார்கழி மாதத்தில் சுப காரியங்கள் எதையும் செய் யக்கூடாது என்று விதித்திருந்தனர்.

மார்கழி மாதத்தில் அதிகாலை எழுந்து நீராடுவதும் வாசல் தெளித்து தினம் ஒரு கோலம் போட்டு சாணத்தினாலோ, மஞ்சள் மாவினாலோ பிள்ளையார் பிடித்து அதில் வைத்து, அறுகம்புல், பூசணிப்பூ வைத்து வழிபடுவதும் ஒரு சிறப்பு. முற்காலத்தில் எல்லோர் வீட்டிலும் பூ வைப்பது இல்லை. எந்த வீட்டில் வயது வந்த பெண், அல்லது ஆண் திருமணத்தை நாடிக் காத்திருப்பார்களோ அவர் களது வீட்டின் முன் மட்டும் பூசணிப்பூ வைப்பார்களாம். இதை மாப் பிள்ளை அல்லது பெண் தேடும் வீட்டாரும் புரிந்து கொண்டுதை பிறந்தவுடன் கல்யாணம் பேசி முடிப்பார்களாம்.

''திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'' என்றொரு முதுமொழி உண்டு. மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவைப் பாடல்களும், ஸ்ரீ ஆண்டாள் பாடிய திருப்பாவை பாடல்களும் பாவை நூல்கள் என மார்கழியில் போற்றப்படு கின்றன.

ஆண்டாள் பாடிய "திருப்பாவை'' யின் முதலாம் பாடலில் மார்கழி என்று ஆரம்பிப்பது ''மா'' என்று மாணிக்கவாசகரின் ஆரம்ப எழுத்தைக் குறிப்பதாகவும், மாணிக்கவாசகர் பாடிய திரு வெம்பாவையின் முதல் பாட லில் ஆண்டாளைக் குறிக்கும். ''ஆதியும் அந்தமும்'' என்ற தொடக்கலில் ''ஆ'' எழுத்தையும் பாடியுள்ளனர்.

மார்கழி மாதத்தில் அனுஷ் டிக்கும் நோன்பைப் பற்றி ஸ்ரீ ஆண்டாள் பக்திப்பரவசமாக திருப்பாவை என்னும் சங்கத்தமிழ் மாலைமுப்பதுபாடியுள்ளார்.பாவை என்பது பெண்களைக் குறிக்கும். கடும் குளிரோ கடும் வெய்யிலோ இல்லாத நடுநிலையான மாதம் மார் கழியாகும். இதனால் உடலும் உள்ளமும் பக்தியிலீடுபடும். பக்தியுடன்பஜனைசெய்து பாவை நோன்பை ஏற்பது சிறப்பானதாகும்.

இந்து மக்கள் நாம் அனை வரும் மார்கழி மாத நோன்பினை அனுஷ்டித்து இறை வழிபாடுகள் செய்து நற்பலனைப் பெற்று, சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வை அடைவோம்.

நன்றி சுடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கரவெட்டி தேவரையாளி, நெல்லியடி.ம.ம.வி. அணிகள்

# வடமராட்சி கல்வி வலய உதைபந்தில் சம்பியன்

**பலம்மிக்கநெல்லியடி ம.ம.வி. அணியை துணிச்ச லோடு எதிர்கொண்ட தேவரையாளி இந்து வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.**

யாழ்ப்பாணம், ஜன. 11

வடமராட்சி கல்விவலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் 15 வயது பிவிரில் தேவரையாளி இந்துக்கல்லூரியும் , 17 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் சம்பியனாகின.

வடமராட்சிக் கல்வி வலய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இமையாணன் அ.த.க.பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமைஇடம்பெற்றது.

இதில் முதலில்15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் நடைபெற்றது. இதன்போது தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிமோதிக் கொண்டது.

பலம்மிக்கநெல்லியடி ம.ம.வி. அணியை துணிச்சலோடு எதிர்கொண்ட தேவரையாளி இந்து வீரர்கள் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் நெல்லியடி ம.ம.வி. அணி வீரர்கள் திக்கு முக்காடிப் போயினர். இந்த நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அடுத்தடுத்து கோல்களை அடித்து அசத்தியது" தேவரையாளி இந்து அணி. பதிலுக்குத் தாமும் கோல்களை அடிக்க முயன்றனர் நெல்லியடி ம.ம.வி. அணியினர். ஆயினும் இறுதி வரை அவர்களின் எந்த முயற்சியும் பலிக்கவில்லை. இதனால் ஆட்ட நேர நிறைவில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 15 வயதுப் பிரிவில் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

அதில் அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை அணி 3:2 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை வீழ்த்தி மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக்கொண்டது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து அல்வாய் வடக்கு றோ.க. த.க.பாடசாலை அணி மோதிக்கொண்டது.

இதில்அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி கோல் மழைபொழிந்தது நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி. இதனால் அல்வாய் வடக்கு அணி அதிர்ச்சியில் உறைந்தது. எனவே 4:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று, 17 வயதுப் பிரிவில் சம்பியனானது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

இதனைத்தொடர்ந்து கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அணிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் இடையில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டம் நடைபெறவிருந்தது. எனினும்கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி உரிய நேரத்துக்கு மைதானத்துக்குச் சமுகம் தராமையால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி வெற்றியீட்டி மூன்றாம் இடத்தைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ந-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாடச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையான ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாடச் சுற்றுப் போட்டித் தொடரை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் நடத்தி வருகின்றது. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ யாழ். வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்கள்-

பெண்கள் பிரிவு

மாலை 3.30 மணி

இராமநாதன் விளையாட்டுக்கழகம் 'பி' அணி எதிர் பட்டபிளை விளையாட்டுக்கழகம்.

மாலை 4.30 மணி

உடுவில் மகளிர் விளையாட்டுக்கழகம் எதிர் இந்து மகளிர் விளையாட்டுக்கழகம்.

★யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெறவுள்ள ஆட்டம்-

பெண்கள் பிரிவு

மாலை 3 மணி

பட்டர்பிளை விளையாட்டுக்கழகம் அணி எதிர் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமான நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வைரவப்புளியங் குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவருகிறது.

இந்தச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கும் ஆட்டத்தில் மோதவுள்ள அணிகள்-

சுப்பஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் யுனிபைட் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:-

பி.ப. 3.30 மணி

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம் 'பி' அணி எதிர் நக்கீரன் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.30 மணி

விண்மீன் கழகம் எதிர் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம். (ந-23)

## கடினப்பந்து கிரிக்கெட்டில் மூளாய் விக்ரோறி

யாழ்ப்பாணம்,ஜன.11

முதல்முறையாக கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் பங்குபற்றவுள்ளது.

கடந்த சில வருடங்களாக மென்பந்துக் கிரிக்கெட்டில் பலம்மிக்க அணியாக விளங்கும் மூளாய் விக்ரோறி அணி தற்போது கடினப் பந்துக் கிரிக்கெட்டிலும் கால் பதித்துள்ளது.

இந்த அணி விரைவில் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. (ந)

# அனோஜனின் அதிரடி அரைச்சதத்தால் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ வாகை

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.இந்தப் போட்டியில் திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ. அணியை எதிர்த்து கிறாஸ் கொப்பர்ஸ் அணி களமிறங்கியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ் கொப்பர்ஸ் அணி 47.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை பெற்றது.

இதில் ரமேஸ்குமார் 52 ஓட்டங்களையும், கஜன்தா 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச். ஏ.அணி சார்பில் சுரேந்திரன் 2 இலக்குகளையும், சுதா 5 இலக்குகளையும் அனோஜன், வினோ ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினை கைப்பற்றினர்.

140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ. அணி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது. குறிப்பாக அந்த அணியில் அனோஜன் 18 பந்துகளில் அரைச் சதம் கடந்து அணிக்கு பலமான அடித் தளம் இட்டார். இதனால் திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ. அணி 15.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் அனோ ஜன் 57ஒட் டங்களையும், தேசிகன், கரன் ஆகியோர் ஆட்டமிக்காமல் முறையே 55, 21 ஓட்டங் களையும் தமது அணிசார்பாகபெற்றனர். (ந-23)



அனோஜன்



வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கம் நடத்திய மாகாண ரீதியிலான ஆண் , பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் சென்.ஜோண்ஸ் கல்லூரி உள்ளக விளையாட்டுத் திடலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன. இதில் மகளிர் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சுண்டுக்குழி மகளிர் விளையாட்டுக் கழக அணித் தலைவியிடம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட பூப்பந்தாட்டச் சங்கத் தலைவரும், சென்.ஜோண்ஸ் கல்லூரி அதிபருமான ஏ.என். ஞானபொன்ராஜா வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார். (ந-23)

## கே.ஸி.ஸி.ஸி. வென்றது

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரை யாழ் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் நடத்தி வருகின்றது.

அதில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி. ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணிக்கும், கே.கே.எஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 53:39 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றியீட்டியது. (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒன்றிணையும் சம்பியன்கள்

வரலாற்றில் முதல் தடவையாக 'தாயக நாட்டமுள்ள' மற்றும் 'மரபுசார்' இலங்கை கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி ஜனவரி 12ஆம் திகதி என்.சி.சி. மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சம்பியனாகி வெற்றிவாகை சூடிய அணியினர் மீண்டும் ஒன்றுசேரவுள்ளனர்.

''பேபி ஷெரமி'' வர்த்தக குறியீட்டினால் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்றிட்டத்துக்கு அனுகூலமாக காணப்படும் 'நன திரிய' என்ற நிகழ்ச்சித் திட்டத்துக்கு பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டும் பொருட்டே இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இடம்பெறவுள்ளது.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய அணியின் வீரரும் குறித்த செயற்றிட்டத்தின் கௌரவ தூதுவருமான ரொஷான் மஹாநாம இது குறித்து தெரிவித்ததாவது-

''கிட்டத்தட்ட 17 வருடங்களின் பின்னர் எமது பழைய அணியுடன் மீண்டும் ஒன்றுசேர்வது அற்புதமானதருணமாகும். பொதுமக்கள் காண்பதற்கரிய காட்சியாக இது அமையும். இந்த அணியினர் 1996 இல் எமது நாட்டுக்கு உந்துசக்தி அளித்தனர். இந்த நிலையில் இப்போது அவர்கள் இலங்கைக்காகவும் சிறுவர்களின் எதிர்காலத்துக்காகவும் மீண்டும் ஒரு தடவை ஒன்றுசேர்கின்றனர். இந்தநிகழ்வு ஏதோவொரு விதத்தில் விசேடமானதாக அமையப் போகின்றது.கல்வியின் பலாபலன்களை வெளிப்படுத்துபவர்களான இலங்கைச் சிறுவர்களின் தலைமுறை ஒன்றை கட்டியெழுப்புவதற்கு உதவும் வகையிலமைந்த இந்த முன்முயற்சியில் பங்கெடுக்கும் வீரராக செயற்படுவதையிட்டு நான் புளகாங்கிதம் அடைந்துள்ளேன். பெருமளவிலான இளம் சிறார்களின் எதிர்காலத்தை முன்கொண்டு செல்வதற்கான ஒரு முன்னெடுப்பாக இந்தச் செயற்றிட்டம் காணப்படுகின்றது. இலங்கையின் சிறுவர்கள் அவர்களது கல்வியில் வெற்றிபெறும் பொருட்டு நாம் துடுப்பெடுத்து ஆடவுள்ளதால், இப்போட்டிக்கென ஒன்றுதிரளுமாறும் ஆதரவளிக்குமாறும் அனைத்து இலங்கையருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன்'' என்றார். இந்தப்போட்டியில் பங்குபற்றவுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:




அர்ஜூன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, சனத் ஜயசூரிய, அசங்க குருசிங்க, ஹசான் திலகரத்ன, ரொஷான் மஹாநாம, ரொமேஷ் களுவித்தரண, உபுல் சந்தன, சமிந்த வாஸ், பிரமோய விக்கிரமசிங்க, ரவீந்திர புஸ்பகுமார, முத்தையா முரளிதரன்.

மேற்குறித்த அணியினர் இந்தப் போட்டியில் இலங்கையின் முன்னைய தேசிய கிரிக்கெட் வீரர்களை உள்ளடக்கிய அணியொன்றை எதிர்த்து விளையாடவுள்ளனர். குறித்த போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்கள் பொதுமக்களுக்கு ரூபா 50 இற்கு விற்பனை செய்யப்படும். (ந)

# போனது புலி; வருகிறது குட்டி



சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன், 14 வயதுக்குட்பட்டோருக்கான மும்பை கிரிக்கெட் அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அர்ஜுனின் ஆட்டத்தை வரும் 20 ஆம் திகதி, அகமதாபாத் மைதானத்தில் காணலாம்.

கடந்த வருடம் ஜூன் மாதமே மும்பை கிரிக்கெட் சபை சார்பில் 14 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் வீரர்களை தெரிவு செய்யும் போட்டிகள் நடைபெற்றன.

இதில் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் கலந்துகொண்டார்.

12 வயதே ஆன அர்ஜுன், இந்த போட்டியில் ஒரு சிக்ஸர், 14 பவுண்டரிகள் உட்பட மொத்தம் 124 ஓட்டங்கள் எடுத்து தனது அணி இறுதிப் போட்டிக்குள் நுழைய உதவினார்.

இந்தச் சிறப்பான ஆட்டமே இவரை 14 வயதுக்குட்பட்டோருக்கான வீரர்கள் தகுதிப் பட்டியலில் இடம் பிடிக்க செய்துள்ளது.

முன்னதாக இவர் புனேயில், நடைபெற்ற கேடன்ஸ் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியில் அறிமுகமான முதல் ஆட்டத்தில் அர்ஜுன் 39 பந்துகளில் 65 ஓட்டங்கள் எடுத்தார்.




இடது கையால் பந்து வீசும் பழக்கமுள்ள அர்ஜுன், அடுத்து 2011 இல் நடைபெற்ற மற்றொரு போட்டியில் சிறப்பாக பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 8 இலக்குகளைக் கைப்பற்றினார்.

அர்ஜூன் தனது அப்பா சச்சினுடன் பலமுறை இந்திய அணியின் பயிற்சி முகாம்களில் தலை காட்டி இருக்கிறார்.

அத்துடன் இந்திய வீரர்களுடனும் அவர் பயிற்சிகளில் பங்கேற்பதுண்டு.

அர்ஜுனின் ஆர்வத்தையும், ஆட்டத்தையும் சச்சின் தன் செல்போனில் படம் பிடித்து அதை பின் அவருக்கு காண்பித்து தவறுகளைத் திருத்திக் கொள்ள உதவுவாராம். (ந)

# 'ஒலிம்பிக் 2020' யாருக்கு அதிர்ஷ்டம்?

2020ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை பெறுவதற்காக இஸ்தான்புல் (துருக்கி), மட்ரிட் (ஸ்பெயின்), ரோக்கியோ (ஜப்பான்) ஆகிய நகரங்கள் போட்டியிடுகின்றன.

இது தொடர்பாக சுவிட்சர்லாந்தின் லாசன்னே நகரில் உள்ள சர்வதேச ஒலிம்பிக் சபை (ஐ.ஓ.சி.) தலைமை அலுவலகத்தில் மேற்கண்ட 3 நகரங்களின் சார்பில் பல்வேறு விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னரும் பலமுறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான பந்தயத்தில் இந்த நகரங்கள் பங்கேற்றாலும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

சர்வதேச பொருளாதார நிலை ஸ்திரமாக இல்லாதபோதிலும், ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கான போட்டியில் மட்ரிட் நகரம் தொடர்ந்து 3ஆவது முறையாக பங்கேற்கிறது. ரோக்கியோ தொடர்ந்து 2 ஆவது முறையாகவும், இஸ்தான்புல் 5 ஆவது முறையாகவும் போட்டியில் பங்கேற்கின்றன.

ஒலிம்பிக் போட்டிக்கான மைதானங்கள், வரவு-செலவுத்திட்டம், நிதி உத்தரவாதம், பாதுகாப்பு ஏற்பாடுகள், விளையாட்டு கிராமம், போக்குவரத்து வசதி உள்ளிட்ட பல்வேறு விவரங்களை உள்ளடக்கிய 100 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை மேற்கண்ட 3 நகரங்களும் அளித்துள்ளன.

இது தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் சபையின் மதிப்பீட்டுக் குழு எதிர்வரும் மார்ச் மாதம் மேற்கண்ட 3 நகரங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்யவுள்ளது.

அதன்பின்பு ஜூலை மாதம் சுவிட்சர்லாந்தின் லாசன்னே நகரில் நடைபெறவுள்ள ஐ.ஓ.சி. கூட்டத்தின்போது மதிப்பீட்டுக் குழு தனது அறிக்கையை கையளிக்கும்.

அதைத்தொடர்ந்து செப்ரெம்பர் 7ஆம் திகதி ஆர்ஜென்டீனாவின் தலைநகர் பியூனஸ் அயர்ஸில் நடைபெறும் ஐ.ஓ.சி. கூட்டத்தின்போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தி போட்டியை நடத்தும் நகரம் தெரிவு செய்யப்படும்.

முன்னதாக 2020ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்த ரோம் (இத்தாலி), பாகு (அஜர்பைஜான்), டோஹா (கட்டார்), ரோக்கியோ, இஸ்தான்புல், மட்ரிட் ஆகிய 6 நகரங்கள் விருப்பம் தெரிவித்திருந்தன.

ரோமில் நடத்த இத்தாலி அரசு நிதியுதவி அளிக்க மறுத்ததைத் தொடர்ந்து அந்த நகரம் போட்டியிலிருந்து விலகியது. டோஹா, பாகு நகரங்களை போட்டியிலிருந்து ஐ.ஓ.சி. நீக்கியது குறிப்பிடத்தக்கது.(ந)

# அட! இதிலும் சச்சின் சாதனைதான்




சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கை 90 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் கடந்த 2011 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பேஸ்புக்கில் இணைந்தார். இதில் தன்னுடைய கருத்துகளை வீடியோ மூலமாகவும் தெரிவித்து வந்தார்.

முதன் முதலாக பேஸ்புக் கணக்கை தொடங்கிய சச்சின், ''எனது பேஸ்புக்குக்கு அனைவரையும் வரவேற்கிறேன், இந்தியாவுக்காக விளையாட வேண்டும் என்பது என் சிறுவயது கனவு. கடந்த 22 ஆண்டுகளாக உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பதும் கனவுதான். உங்களின் ஆதரவில்லாமல் இதுவெல்லாம் நடந்திருக்காது. இந்த வாய்ப்பை கொடுத்த கடவுள், எனக்காக பிரார்த்தனை செய்தவர்கள் அனைவருக்கும் நன்றி'' என தெரிவித்தார்.

இது வெளியான அடுத்த சில மணி நேரங்களிலேயே 4 லட்சம் பேர் சச்சினை பின்பற்ற தொடங்கினர். இந்நிலையில் தற்போது பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை 90 லட்சமாக உயர்ந்துள்ளது. இதுகுறித்து சச்சின் வெளியிட்ட பேஸ்புக் செய்தியில், ''என்னை விசேடமாக உணரச் செய்த அனைவருக்கும் 90 லட்சம் நன்றிகள்'' எனத் தெரிவித்துள்ளார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்கவைக் கையாள்வதிலேயே வெற்றி உள்ளது - டேவிட் ஹசி

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவைக் கையாளும் விதத்திலேயே இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித்தொடரின் வெற்றி தங்கியுள்ளதாக ஆஸ்திரேலிய அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் டேவிட் ஹசி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுவரும் பக்பாஷ் லீக் தொடரில் டேவிட் ஹசி, லசித் மலிங்க இருவரும் மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றியிருந்த நிலையில் லசித் மலிங்கவோடு இணைந்து மெல்போர்ண் ஸ்டார்ஸ் அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றியமை அதிர்ஷ்டகரமானது எனத் தெரிவித்த டேவிட் ஹசி, அவர் தனது வாழ்வின் மிகச்சிறந்தவராகக் காணப்படுவதாகவும் தெரிவித்தார். எனவே இந்தத்தொடரை ஆஸ்திரேலிய அணி வெற்றி கொள்ள வேண்டுமாயின் லசித் மலிங்கவைச் சிறப்பாக எதிர்கொள்ள வேண்டுமென டேவிட் ஹசி தெரிவித்தார்.

லசித் மலிங்கவை எதிர்கொள்வதற்கு எப்போதும் பயந்ததில்லை எனத் தெரிவித்த டேவிட் ஹசி, அவரை எதிர்கொள்வது எப்போதும் உத்வேகம் தரும் ஒன்று எனத் தெரிவித்தார். ஒரு துடுப்பாட்ட வீரராகத்தான் எப்போதும் உலகின் சிறந்த பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள விரும்புவதாகவும் டேவிட் ஹசி தெரிவித்தார்.

லசித் மலிங்கவுக்கு எதிராகத் திறம்படத் திட்டமிட்டுப் போட்டிகளில் பங்குபெற்ற வேண்டுமெனத் தெரிவித்த டேவிட் ஹசி, லசித் மலிங்க மிகச் சிறப்பாக பௌண்சர்



பந்தையும், யோர்க்கர் பந்தையும் வீசுவதோடு, அவரது மெதுவான பந்துகளும் ஆடுவதற்குச் சிரமமானவை எனத் தெரிவித்தார்.


**வெளிநாடு விசா பெற அவசியமான ஆங்கிலக் கற்கை நெறி - (IELTS)**



ஆஸ்திரேலியா நாட்டவரானவண. மைக்கேல் அவர்களிடம் 1 மாதத்தில் கற்கலாம். சனி, ஞாயிறு காலை 9 மணி

**விசா ஆலோசனைகள்**

- நியூசிலாந்து / ஆஸ்திரேலியா Skill,Student Visa குடும்ப விசா
- மலேசியா / சைப்பிரஸ் / லிதுவேனியா போலந்து / சிங்கப்பூர்
- எல்லா நாடுகளுக்கும் Visit Visa 10 நாள்களில்

திசைகாட்டி (பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772) (15-14)

**யாழ். அக்கூரியம் அன் பிளான்ட் பரடைஸ் இன் மலிவு விற்பனை**

பல இன பூங்கன்றுகள், பழமரங்கள், நிழல் மரங்கள், புதியவகை செவ்வரத்தை இன்னும் பல பூமரங்கள், சாடிகள், மீன்தொட்டிகள், குருவிகள், கூடுகள் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். (எம்மிடம் நல்லின பொமேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு)
917, K.K.S. வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்.

**தவறிவிட்டது**

கொடிகாமத்துக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தேசிய அடையாள அட்டை 450851930V, சாரதிஅனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் வதனி ஜீவல்லறியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P- 0778002724

**THE SCIENCE CORNER**
Clock Tower Lane - Jaffna
PHYSICS-2015 A/L
ஆரம்பம்: 12/01/2013 சனி 4.30
சனி, ஞாயிறு 4.30-5.30
By:-செந்தில்குமரன்

**NEC** 12.01.2013
2015 A/L
சனி, ஞாயிறு 2 மணிக்கு
2013 A/L
அயன் சமனிலை
3.30- 4.30
N.Jana
மானிப்பாய் வீதி, (பெருமாள் கோயில் அருகில்) யாழ்ப்பாணம்.

**விசேட கருத்தரங்குகள்**

- 19ம் திகதி நடைபெறவுள்ள தேசிய ஒருமைப்பாடு ஒருங்கிணைப்பாளர். சனி, ஞாயிறு 10.00 - 4.30 வரை.
- 20ம்திகதி நடைபெறவுள்ள பதிவாளர் பரீட்சை சனி, ஞாயிறு 10.00-4.30 வரை.
- 27ம் திகதி நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் சனி, ஞாயிறு 1.00-4.30 வரை.

பெப்ரவரியில் நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர் தரம் III இல் இருந்து தரம் II பதவி உயர்வுப் பரீட்சை ஞாயிறு 9.00
- பெப்ரவரியில் நடைபெறவுள்ள கிராமசேவையாளர் சனி, ஞாயிறு 12.30-4.30 வரை.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு யாழ். ஆஸ்பத்திரி வீதி (கொமர்ஷல் வங்கியருகில்) நவரேல் ஆசிரியர்களால் தொகுக்கப்பட்ட இப்பரீட்சைக்கான வழிகாட்டிகளை வகுப்பிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

27ஆம் திகதி நடைபெறவுள்ள
★முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
★கிராமசேவகர் போட்டிப் பரீட்சை
20ஆம் திகதி நடைபெறவுள்ள
★பதிவாளர் போட்டிப் பரீட்சை
காலம்-12.01.2013
சனி 9.00 மணி,
விரிவுரையாளர் P.உமாசங்கர், P.கமல்தாசன்
நாவலர் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். நகர்.
T.P- 0774696695

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

27ஆம் திகதி நடைபெறவுள்ள முகாமைத்துவ உதவியாளர், கிராமசேவகர் போட்டிப் பரீட்சை. காலம்-12.01.2013 சனி 2.00P.m விரிவுரை- P.உமாசங்கர், P.கமல்தாசன் டார்வி கல்வி நிலையம் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (HNB அருகில்)

**பிளசர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

VD- இலக்க தனிப்பாவனை Hero Honda Pleasure விற்பனைக்கு.
0778418344.


## மரண அறிவித்தல்



### சண்முகலிங்கம் தனேசன்
*(ஊழியர்- யாழ். மாநகரசபை)*

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கை நிரந்தர வதிவிடமாகவும், வீரபத்திரர் கோவில் வீதி, கல்வியங்காட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் தனேசன் நேற்று (10.01.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகலிங்கம் -சறோஜினிதேவி தம்பதியரின் பாசமிகு மூத்த மகனும், வித்தியா (பிரதேசசபை- வேலணை), விநோதன் (பிரதேச வைத்தியசாலை- நெடுந்தீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோவில் வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.


**FRENCH LANGUAGE CENTRE**
சர்வதேச தரத்திலான FRENCH வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.
FRENCH CLASSES- பிரெஞ்சு வகுப்புகள்
France, Canada போக, French கற்க ஆர்வமுள்ளோர் எவரும் கற்றுக் கொள்ளலாம்.
FRANCE இன் PARIS இல் இருந்து பயிற்றப்பட்ட பிரபல விரிவுரையாளரால் வகுப்புகள் மேற்கொள்ளப்படுகிறது. International Certificate இனை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
FOR BETTER FRENCH- 0779789456

| ஆரம்பம்: நாளை சனி 10.30am<br>No.23, Palaly Road, Jaffna.<br>(அப்பலோ வைத்தியசாலை முன்பாக) ஆரியகுளம். | 16.01.2013 புதன் 3.30P.m<br>181, 1st Floor, Jaffna Road, Nelliady. (பேருந்து நிலையம் முன்பாக) |
|---|---|

English, German (Deutsch), சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**பொருளியற் கல்லூரி** நாவலர் ரோட், யாழ்ப்பாணம் | K.K.S. ரோட், இணுவில் | **BARTHY** சித்தன்கேணி

A/L -2015 வர்த்தகப்பிரிவு
மீண்டும் புதிய பிரிவு ஆரம்பம்- 12.01.2013 சனி

| A/L 2015 | யாழ். நகரில் சனி- ஞாயிறு 9.00A.M | இணுவில் சனி- ஞாயிறு 2.00 P.M | சித்தன்கேணியில் வாரநாள்கள் |
|---|---|---|---|
| English | K.நிஷாந்தன் | K.நிஷாந்தன் | K.நிஷாந்தன் |
| Eco | S.வரதராஜன் | S.மகேந்திரன் | S.மகேந்திரன் |
| Acc | B.முகுந்தன் | B.முகுந்தன் | S.திருக்குமரன் |
| B.St | V.முரளி | V.முரளி | B.S.பசில் |

★ புதிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

Note- கலைப்பிரிவு புதிய வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

2012 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே !!

கணனி மற்றும் முகாமைத்துவக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 11 : **12.01.2013** காலை 10.00மணி

இப் பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளும் அதேவேளை Flash Memory ஒன்றினையும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

**யாழ் பஸ்நிலையத்தின் வடக்குப்பக்கமாக**

அதி உயர் தரத்திலான
**டிஜிற்றல் பனர் பிறிண்டிங்**

சதுர அடி
6 Colour
30/-
50/-
80/-
தரத்திற்கேற்ப எதை வேண்டுமானாலும் நீங்களே தெரிவு செய்யுங்கள்

உங்கள் விருப்பத்திற்கேற்ப நவீன வடிவமைப்புக்களுடன் டிஜிற்றல் பனர்கள்...

மற்றும் **திருமண அழைப்பிதழ்கள்**

கண்கவர் வடிவங்களில் புதிய அழகிய அழைப்பிதழ்கள் குறைந்த விலையில்...

**பிறிண்டிங் ஹவுஸ்**
U'n Printing House
165, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 221 9929, 077 220 0148


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.